# தமிழரசு

1.11.1986 ரூ. 1





இருபது அம்சத் திட்ட

சிறப்பிதழ்




தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 19-10-1986 அன்று தொடங்கி வைத்தார்.



# இதம் தரும் இருபது

## மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் 14.1.1982ல் நாட்டுக்கு அறிவித்த நல்வாழ்வுத் திட்டம்

1 பாசன வசதியை அதிகரித்தல், மழையை நம்பியிருக்கும் விவசாயத்திற்கான பொருட்கள் கிடைத்தலை அதிகரித்தல், இந்நிலங்களுக்கான தொழில் நுட்பத்தை வளர்த்துப் பரப்பல்.

2 பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க விசேட முயற்சி மேற்கொள்ளல்.

3 ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சி மற்றும் தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்தல், விரிவாக்குதல்.



4 விளை நில உச்சவரம்பை அமலாக்கல், உபரி நில விநியோகத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் நிர்வாக-சட்ட இடையூறுகளை அகற்றி நிலப்பட்டாக்களைத் தொகுக்கும் பணியைப் பூர்த்தி செய்தல்.

5 விவசாயத் தொழிலாளரின் குறைந்தபட்ச ஊதியத்தை மறுபரிசீலனை செய்து, பயன் தரும் வகையில் அமலாக்கல்.

6 பிணைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல்.

7 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களைத் துரிதப் படுத்தல்.



8 பிரச்சனைக் கிராமங்கள் அனைத்துக்கும் குடிநீர் வழங்கல்.

9 வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டுக்கான மனை வழங்கி, வீடு கட்டுவதில் அவர்களுக்கு உதவுவதற்கான திட்டங்களை விரிவாக்குதல்.

10 சேரிகளின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மேம்படுத்தல், எளியோருக்கு வீடு கட்டும்

இருபது அம்சத்திட்டச் சிறப்பிதழ்

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - ஐப்பசி 16
மலர் : 17 1-11-1986 இதழ் : 9

திட்டங்களை அமலாக்கல் மற்றும் நில விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

11 மின்சார உற்பத்தியை உயர்ந்தபட்சமாக்குதல், மின்சார அமைப்புக்களின் இயக்கத்தை மேம்படுத்தல் மற்றும் கிராமங்கள் அனைத்துக்கும் மின்சார வசதி அளித்தல்.

12 காடு வளர்ப்பு, சமுதாய-பண்ணை மர வளர்ப்பு, சாண எரிவாயு போன்ற மாற்று எரிபொருள் மூலங்களை வளர்த்தல்.

13 குடும்ப நலத் திட்டத்தை, தொண்டு அடிப்படையில் ஒரு மக்கள் இயக்கமாகப் பரப்பல்.

14 அடிப்படைச் சுகாதார வசதிகளைக் கணிசமாக அதிகப்படுத்தல், தொழுநோய், காசம், பார்வை இழத்தல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தல்.

15 பெண்கள், குழந்தைகள், கருவுற்ற பெண்கள், தாய்ப் பாலூட்டும் பெண்கள், குழந்தைகள் முதலியோருக்கான சத்துணவு மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களை விரைவுபடுத்தல், முக்கியமாக பழங்குடியினத்தவர், மலை மற்றும் பிற்பட்ட பகுதிகளில் இத்திட்டங்களை விரைவுபடுத்தல்.

16 6லிருந்து 14 வயதுள்ள குழந்தைகளுக்கிடையே முக்கியமாக பெண் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியைப் பரப்பல்; அதே சமயத்தில் மாணவ மாணவியர்களையும் சேவா ஸ்தாபனங்களையும், வயது வந்தோரிடையே கல்வி அறிவின்மையை அகற்றும் திட்டங்களில் ஈடுபடுத்தல்.

17 அதிகப்படியான நியாயவிலைக் கடைகள் மூலமாக பொது விநியோக முறையை விரிவு படுத்தல், தொலைதூரப் பகுதிகளில் நடமாடும் கடைகளை ஏற்படுத்தல், தொழிற்சாலைத் தொழிலாளர்கள் மற்றும் விடுதியில் உள்ள மாணவர்களுக்கு வசதியாக அப்பகுதிகளில் கடைகள் நிறுவுதல்; மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும் குறிப்பேடுகளும் கிடைக்கச் செய்ய முன்னுரிமை அடிப்படையில் ஏற்பாடு செய்தல், வலுவானதொரு நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை வளர்த்தல்.

18 திட்டங்கள் உரிய நேரத்தில் பூர்த்தி அடைவதை உறுதி செய்வதற்காக முதலீட்டு நடவடிக்கைகளைத் தாராளப் படுத்தல், தொழில் துறை கொள்கைகளை எளிதாக்கல், கைவினைப் பொருட்கள், கைத்தறி சிறிய மற்றும் கிராமத் தொழில்கள் வளர்ந்து, தமது தொழில் நுட்பத்தை நவீனப்படுத்திக் கொள்வதற்கு, அவற்றுக்கு எல்லா வசதிகளையும் அளித்தல்.

19 கள்ளக்கடத்தல்காரர்கள், பதுக்கல்காரர்கள், வரி கொடாது ஏய்ப்பவர்கள் ஆகியோருக்கு எதிராக, தொடர்ந்து கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளல், கறுப்புப்பணத்தை ஒழித்தல்.

20 திறன் உபயோகிப்பு, உள் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல் ஆகியவற்றின் மூலமாக, அரசு அமைப்புகளின் இயக்கத்தை மேம்படுத்தல்.

## பிரதமர் திரு ராஜீவ் காந்தி அறிவித்த புதிய இருபதம்சத் திட்டம்

### 1986



1. கிராமப்புற வறுமையை நீக்குதல்.
2. மானாவாரி விவசாயப் பாதுகாப்பு.
3. பாசன நீரை முறைப்படுத்தல்.
4. விளைச்சலைப் பெருக்குதல்.
5. நிலச் சீர்திருத்தங்களை அமல் செய்தல்.
6. கிராமத் தொழிலாளர்களுக்கு விசேஷத் திட்டங்கள்.
7. சுத்தமான குடிநீர் வழங்குதல்.
8. அனைவருக்கும் மருத்துவ வசதி.
9. குடும்பத்திற்கு இரண்டே குழந்தைகள்.
10. கல்வித் திட்டத்தை விரிவு படுத்துதல்.
11. தாழ்த்தப்பட்டோருக்கு நியாயம்.
12. பெண்களுக்குச் சம உரிமை.
13. இளைஞர்களுக்குப் புதிய வாய்ப்புகள்.
14. வீட்டு வசதி.
15. குடிசைப் பகுதிகளைச் சீர் செய்தல்.
16. வனப்பாதுகாப்புக்குப் புதிய திட்டம்.
17. சுற்றுப்புறச்சூழ்நிலையைப் பாதுகாத்தல்.
18. உபயோகிப்போர் நலனைக் காத்தல்.
19. கிராமங்களுக்கு மின் வசதி.
20. பயனுள்ள நிர்வாகம்.



# பாசன வளத்தைப் பெருக்குதல்

தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதனால் மேற்பரப்பு நீரின் பெரும் அளவு பயன்படுத்தப்பட்டுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்ட ஆரம்பத்தில் இம்மாநிலத்தில் 11,01,000 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்யப்பட்டு வந்துள்ளது. ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் மூலமாக 1979-80 வரை கூடுதலாக 2,88,300 எக்டேர் நிலங்களுக்கு பாசன வசதி செய்யப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறியீட்டு அளவான 66,000 எக்டேரை விட அதிகமாகச் சாதனை செய்து 72,700 எக்டேர் கூடுதல் நிலப்பரப்புக்குப் பாசன வசதி ஏற்பட்டுள்ளது.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1985-90) 40,000 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி செய்து தரத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 1985-86ம் ஆண்டில் 20,000 எக்டேர் புதிய பாசன அபிவிருத்தி செய்து தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும் 20,100 எக்டேர் என்ற அளவுக்குப் புதிய பாசன வசதி செய்து கொடுத்து, ஒரு சாதனை ஏற்படுத்தப் பட்டுள்ளது. இம்மாநிலத்தில் 20 அம்சத் திட்டம் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது, என்பதற்கு இதுவே சான்றாகும்.

**சிறு பாசனம் (மேற்பரப்பு நீர்)**

சிறுபாசனம் (சிறப்பு சிறுபாசனம் மற்றும் ஏரி தூர் வாரி புனரமைக்கும் திட்டம்) சார்பில் 1985-86ஆம் ஆண்டிற்கு நிதி மற்றும் செயல் இலக்குகள் முறையே ரூ. 228.27 இலட்சம் மற்றும் 3,213எக்டேர் என்று நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாண்டில் நிதி மற்றும் செயல் சாதனைகள் முறையே ரூ. 232.35 இலட்சம் மற்றும் 3,231 எக்டேராகும்.

**மானாவாரி சாகுபடி**

தமிழகத்தில் பயிரிடப்படும் நிலப்பரப்பு சுமார் 69 இலட்சம் எக்டேர்களாகும். அவற்றில் 50 சதவீதத்திற்கும் மேலாக மானாவாரி சாகுபடிப் பயிர்களே பயிர் செய்யப்படுகின்றன. தமிழக மொத்த உணவு உற்பத்தியில் சுமார் 20 சதவீதம் இந்த மானாவாரி நிலங்களிலிருந்து கிடைத்து வருகிறது.

1985-86ஆம் நிதி ஆண்டில் இத்துறை அதிகப்படியாக திட்டமிட்ட 13,800எக்டேர் பரப்பிற்கு எதிராக 13,680 எக்டேர் நிலப்பரப்பிற்கு பாசன வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. 13,600 எக்டேர் நிலப்பரப்பிற்கு பாசன வசதி உறுதிப்படுத்தும் திட்டத்திற்கு எதிராக 15,235 எக்டேர் நிலப்பரப்பிற்குப் பாசன வசதி உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

**தொழில் நுட்ப யுக்திகள்**

1985-86ஆம் ஆண்டு 316 நீர் பிடிப்புப் பகுதிகளில் 1000 ஏக்கர் பெருவிளக்கப் பண்ணைகள் தமிழகமெங்கும் அமைக்கப்பட்டன. இதில் 1.62 இலட்சம் எக்டேரில் உயர்விளைச்சல் ரகங்களைப் பயிரிட்டும், முன்னேறிய சாகுபடி நுட்பங்களை உழவர்கள் கையாளவும் ஊக்குவிக்கப்பட்டனர். இது தவிர நீர்பிடிப்புப் பகுதிகளைச் சார்ந்துள்ள சுமார் 1 இலட்சம் எக்டேர் பரப்பில் திருந்திய மானாவாரிச் சாகுபடி முறைகள் உழவர்களிடையே அறிமுகப்படுத்தப்பட்டன.

**இடுபொருள் விநியோகம்**

இத்திட்டத்தின் கீழ் 886 விதையுடன் உரமிடும் கருவிகள் மானிய விலையில் வழங்கப்பட்டன. மேலும் 21,985 உழுபடைக் கருவிகள் உழவர்களுக்கு வழங்கப்பட்டன.

வறட்சியைத் தாங்கவல்ல, அமோக விளைச்சல் தரக்கூடிய பொறுக்கு விதைகள் 30,520 எக்டேரில் விநியோகம் செய்யப்பட்டன. அதேபோன்று 27,000 எக்டேரில் சமச்சீர் உரமிடப்பட்டது. பூச்சி நோய்களிலிருந்து மானாவாரிப் பயிர்களைக் காக்க 34,300 எக்டேரில் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

# பயறு வகை எண்ணெய் வித்துப் பயிர்கள் பெருக்குதல்

தமிழகத்தில் ஆண்டொன்றுக்கு சுமார் 9 இலட்சம் டன்கள் பருப்பு உணவிற்காகத் தேவைப்படுகின்றது. ஆனால் நமது உற்பத்தியோ சுமார் 3.5 இலட்சம் டன்களே. மீதியுள்ள பயறுவகைகளை அண்டை மாநிலங்களிலிருந்தே பெற்று வருகிறோம். இதனைத் தவிர்க்க, பயறுவகை உற்பத்தியை அதிகரிக்க 20 அம்சத்திட்டத்தின் கீழ் தமிழக வேளாண்மைத்துறை சிறப்புத் திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

### புதிய யுக்திகள்

உயர்விளைச்சல் தரவல்ல பயறு வகைகளை உழவர்கள் பயிரிட 2729 டன் சான்றிதழ் விதை விநியோகிக்கப்பட்டது. மேலும் விதையுடன் கலக்கும் 5½ லட்சம் நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

பயறுவகைப் பயிர்களுக்குப் பரிந்துரைப்படி உரமிட வேண்டும். அப்படி அடியுரம் இடமுடியாத பயிர்களுக்கு இலை மூலம் டிஏபி தெளிக்கப்படுகிறது. இதனால் மகசூலில் 10 சதம் அதிக விளைச்சல் கிடைக்கிறது. இப்பணி, சென்ற ஆண்டு 9,766 எக்டேரில் ரூ. 97,660 செலவில் நிறைவேற்றப்பட்டது.

### 1985-86 ஆண்டின் சாதனை

இதுபோன்ற சிறப்பான திட்டங்களைத் தமிழக வேளாண்மைத் துறை செயல்படுத்தியதன் காரணமாக என்றும் இல்லாத அளவிற்கு 1985-86ஆம் ஆண்டு 9.66 லட்சம் எக்டேரில் பயறுவகை பயிரிடப்பட்டு, 3.67 லட்சம் டன்கள் உற்பத்தி கிடைத்துள்ளது.

### எண்ணெய் வித்துத்துறை

### அம்சம் 2 (பி)

இந்தியரின் உணவில் எண்ணெய்த் தேவை ஒரு முக்கிய இடம் பெறுகிறது. பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் நபர் தனிவருமானத்திற்கு ஏற்ப எண்ணெய்த் தேவையும் அதிகரித்து வருகிறது. உணவு தானியங்களின் உற்பத்தியைப்போன்று எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி அதிகரிக்காத நிலையில் உற்பத்திக்கும், தேவைக்கும் இடைவெளி அதிகம் உள்ளது.

1985-86ஆம் ஆண்டு முடிவில் அடைந்த எண்ணெய் வித்துக்களின் சாகுபடி பரப்பும், உற்பத்தியும் வருமாறு:

| பயிர் | பரப்பு ல.டன் | உற்பத்தி ல.டன். |
|---|---|---|
| மணிலா | 11.87 | 14.51 |
| எள் | 1.42 | 0.58 |
| சூரியகாந்தி | 0.68 | 0.30 |
| ஆமணக்கு | 0.25 | 0.12 |
| மொத்தம் | 14.22 | 15.51 |

தமிழ்நாட்டில் எண்ணெய் வித்துக்களின் சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி, உணவுப் பயிர்களுக்கு அடுத்தபடியாக உள்ளது. மணிலா, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களாகும். இவை, தமிழ்நாட்டில் சாகுபடியாகும் மொத்தப் பரப்பில் 15 சதவீதம் ஆகும். அதாவது 12 முதல் 14 லட்சம் எக்டேர் பரப்பில் பயிராகின்றன.



மணிலாப் பயிர் பெரும்பாலும் புஞ்சையில் பயிர் ஆனாலும் சிறிய பரப்பில் பாசனப் பயிராகவும், சாகுபடியாகிறது. எண்ணெய் வித்துப் பயிர்கள் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் பயிராகின்றன. குறிப்பாக செங்கை வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களிலும், குறைந்த அளவில் கோவை, தஞ்சை, பெரியார், திருச்சி, சேலம், மதுரை ஆகிய மாவட்டங்களிலும் பயிராகின்றன.

### சிறப்புத் திட்டம் (ஆதிதிராவிடர்)

இத்திட்டத்தின் கீழ் 14 லட்சம் ரூபாய் 25 சதவீத மானியமாக 10878 ஆதிதிராவிட விவசாயிகளுக்கு மணிலா விதைகள் விநியோகிக்கப்பட்டன. மேலும் 1.54 லட்சம் ரூபாய் 25 சதவீத மானியமாக 3085 ஆதிதிராவிட விவசாயிகளுக்குத் தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

### தென்னை வளர்ச்சி

தமிழகத்தில் தென்னை முக்கிய பலலாண்டுப் பயிர். இது 1.62 லட்சம் எக்டேர் பரப்பில் சாகுபடி ஆகிறது. தென்னை உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. தென்னை உற்பத்தித் திறன், மரம் ஒன்றுக்கு 51 நெற்றுகள் ஆகும். இது இந்தியாவிலேயே முதலிடமாகும்.

### தென்னங்கன்றுகள் உற்பத்தி மற்றும் விநியோகம்

எண்ணெய்வித்துத் துறையினால் 37 தென்னை நாற்றங்கால்களும், 5 தாய்மரத் தென்னந் தோப்புகளும் பராமரிக்கப்பட்டு, நெட்டை மற்றும் குட்டை ஒட்டு ரகத் தென்னங்கன்றுகள் உற்பத்தி ஆகின்றன. கடந்த 1985-86ஆம் ஆண்டு 19.68 லட்சம் நெட்டை ரகக் கன்றுகளும், 4.42 லட்சம் நெட்டை, குட்டை வீரிய ஒட்டு ரகங்களும் 0.02 லட்சம் குட்டை நெட்டை வீரிய ஒட்டு ரகங்களும் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.



# ஊரக இளைஞர் சுய வேலை வாய்ப்புப் பயிற்சித் திட்டம்.

கிராமப்புறங்களிலுள்ள இளம் கைவினைஞர்களின் திறமையை நவீனப்படுத்துவதன் மூலம் அவர்கள் செய்கின்ற பணியைச் சிறப்பாகவும், துல்லியமாகவும் செய்ய முடியும் என்று ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம் கருதுகிறது. இதன்மூலம் திறமை வாய்ந்த மனித சக்தியைக் கிராமத்திலேயே தக்க வைக்கவும், அது நகர்ப்புறங்களுக்கு நகர்வதைத் தடுக்கவும் உதவுகிறது.

இப்பயிற்சி, நிலமில்லாத விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், ஏழைக் கைவினைஞர்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ்வாழும் மக்கள் ஆகியோருக்கு அளிக்கப்படுகிறது. பயிற்சி முடித்ததும் சுயவேலை வாய்ப்பிற்காக நம்பிக்கையுடன் சொந்தத் தொழில் துவங்க வகை செய்யும் பொருட்டு, முனைவாளர்கள் வளர்ச்சித்திட்டம் சம்பந்தப்பட்ட பயிற்சியும் இப்பயிற்சித் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்கு வேண்டிய நபர்களை வட்டார வளர்ச்சி அலுவலர்/திட்ட அலுவலர் கிராமப்புறங்களிலிருந்து தேர்ந்தெடுக்கிறார்கள். தாய்மொழியில் எழுதப்படிக்கத் தெரிந்த 35 வயதுக்குட்பட்ட இளைஞர் இப்பயிற்சி பெறத் தகுதியுடையவராவர்.

தமிழ்நாட்டில் 9 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் முழுநேரமாகவும், 20 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பகுதி நேரமாகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பகுதிநேரப் பயிற்சி மாலை 6 மணி முதல் 9 மணி வரை நடத்தப்படுகிறது.

பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ. 75 முதல் ரூ. 200 வரை உபகாரச்சம்பளம் அளிக்கப்படுகிறது. பயிற்சிமுடித்து வெளியே செல்லும்போது ரூ. 500 மதிப்பிற்குரிய கருவிப்பெட்டகம் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் இலவசமாக அளிக்கப்படுகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

31.3.1986 முடிய 15,885 பேர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுள்ளார்கள். தற்போது 948 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள்.



குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

சென்னை-600 005

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப் பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய ''டாமின் கிரானைட்ஸ்'' 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக $+91\%\ CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | $+99.8\%\ SiO_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | $+12\%\ K_2O$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | : | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | $+99.7\%\ SiO_2$ |
| 7. | வெப்பந்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு $32.1\%\ A1_2O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3 + 94\%$ |

தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD HOUSE, 31, காமராஜர் சாலை,
தபால் பெட்டி எண். 2961,
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண்: 848932
டெலக்ஸ்-41 6081TNML IN

தொழிற்சாலை:
டாமின் கிரானைட்ஸ்,
மணலி — பொன்னேரி ரோடு,
மணலி,
சென்னை-600 068

தந்தி - MINESALITE

DIPR/26231/363/86-27/SAS



# மிகை நில ஒப்படை முன்னேற்றம்

நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் 31-5-1986-ஆம் நாள் வரையில் அடைந்த முன்னேற்றம் பின்வருமாறு:

உபரியாக அறிவிக்கப்பட்ட பரப்பு—1,64,737 ஏக்கர். (2) நிலத்தை அரசுவசம் எடுத்துக் கொள்ளும் முன்னரும், பின்னரும் தடையாணையின் கீழ் உள்ள பகுதி 27,058 ஏக்கர். (3) (அ) தகுதி வாய்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பரப்பு 1,22,371 ஏக்கர். (ஆ) தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்திடம் ஒப்படைத்த பரப்பு—4,041 ஏக்கர். (இ) உபரி நில விநியோக விதிகளின் 13-ஆம் விதியின் கீழ் ஒதுக்கி வைக்கப்பட்டவை — 9,976 ஏக்கர்.

பயனடைந்தோர் எண்ணிக்கை : ஆதிதிராவிடர் — 42,433 பேர். பரப்பு-47,011 ஏக்கர். பழங்குடியினர்-77 பேர். பரப்பு-114 ஏக்கர். ஏனையோர் 53,458 பேர். பரப்பு 75,246 ஏக்கர். மொத்தம்: 95,968 பேர். பரப்பு 1,22,371 ஏக்கர்.

வழங்க வேண்டியிருக்கும் பரப்பு: புதிய 20 அம்சத் திட்டங்களைப் பகிர்ந்தளித்தல் 4-வது அம்சமாகும். தற்போதுள்ள உபரி நிலங்கள் விநியோக விதிகளின் கீழ், உயரளவாக 3 ஏக்கர் புன்செய் நிலத்தையோ அல்லது 1.5 ஏக்கர் நன்செய் நிலத்தையோ தகுதி வாய்ந்தவர்களுக்கு ஒப்படை செய்யப்படுகிறது. 20 அம்சத் திட்டத்தின் கீழ் 31-3-86 தேதி வரை 31,594 ஏக்கர் உபரி நிலங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1-4-1985 தேதி முதல் 31-3-1986 வரையிலுள்ள ஓராண்டுக் காலத்தில் 3,077 ஏக்கர் உபரி நிலங்கள் தமிழகத்தின் 18 மாவட்டங்களில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

1985-'86-ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் உபரி நிலம் ஒப்படை செய்தவர்களுக்கு நிதி உதவித்தொகையாக விநியோகம் செய்ய மத்திய அரசு திட்டத்தில் ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதி உதவித் தொகை எக்டேர் ஒன்றுக்கு ரூ. 2,500 என வழங்கப்படுகிறது. இந்தத் தொகை நில ஒப்படைதாரர்களுக்கு மொத்த மானியமாக வழங்கப்படுகிறது. வழங்கப்படும் மானியத் தொகையில் 80 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உரமாகவும், எஞ்சிய 20 சதவீதத் தொகை ரொக்கமாகவும் ஒப்படைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 20 இலட்சமும் உபரி நிலங்களை மேம்படுத்த ஒப்படைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது.

## 20 அம்சத்தில் 'டான்சி'



'டான்சி' என்று சுருக்கமாகக் கூறப்படும் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் 20 அம்சத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களை நிறைவு செய்யும் வகையில், பல்வேறு துறைகளுக்குப் பயன்படும் தரமான பொருள்களை உற்பத்தி செய்து வருகிறது.

பாசன வசதிக்கான இரும்புக் கதவுகள், சிறு அரிசி ஆலைக்கான இயந்திரங்கள், மின் எண்ணெய் செக்கு, கிராமப் பஞ்சாயத்துக்குத் தேவைப்படும் குடிநீர்த் தொட்டிகள், பள்ளிக் கூடச் சாதனங்கள், ஆதி திராவிடர் குடியிருப்புக்கான சாதனங்கள் மற்றும் குடிநீர்த் தொட்டிகள், வறட்சிக் காலத்தில் பயன்படும் ஆழ் துளைக் கிணறு - கைப்பம்புகள், வீடு கட்டுவதற்கான பொருள்கள், கிராமங்களில் மின் வசதிக்கான பொருள்கள், சாண எரி வாயுக்கான உபகரணங்கள், சுகாதார நிறுவனங்களுக்கான இரும்பு, எஃகுச் சாதனங்கள், பள்ளிகளுக்கான கட்டுமானப் பொருள்கள் மற்றும் மர, இரும்புச் சாமான்கள், முதலமைச்சர் கல்வி சத்துணவுத் திட்டத்திற்கான பாத்திரங்கள், சிறு தொழில்களுக்கான உபகரணங்கள் முதலானவற்றை டான்சி தயாரித்து, பல்துறை முன்னேற்றத்துக்குத் துணையாக இருந்து வருகிறது.



# விவசாயத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம்

தமிழ்நாட்டில், உழவுத்தொழிலிலும், உழவுத் தொழிலைச் சார்ந்த துணைத் தொழில்களிலும் வேலையிலமர்த்தப்படுவோருக்கான குறைந்த அளவு ஊதிய வீதங்கள், முதன் முதலில், 1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தைச்சேர்ந்த விதித்துறைகளின் கீழ், 1959-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. நிலச் சீர்திருத்த ஆணையாளர் தலைமையில் அமையும் ஆலோசனைக் குழு அளிக்கும் பரிந்துரைகளின் அடிப்படையில், மூன்றாண்டுகளுக்கொரு முறை இவ்வூதிய வீதங்கள்திருத்தியமைக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசு, 5.4.1984ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும் வகையில், குறைந்த அள்வு ஊதிய வீதங்களைத் திருத்தியமைத்துள்ளது.

தற்போது செயலிலுள்ள குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்கும்பொழுது ஒரே வேலையை, அல்லது ஒரே மாதிரியான வேலையை ஆண், பெண் தொழிலாளர்கள் செய்யும்போது ஊதியம் வழங்குவதில் அவர்களிடையே வேறுபாடு காட்டப்படவில்லை. மேலும், அரசு பின் வரும் வகையைச் சேர்ந்த, உழவுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்காக வேலைநேரங்களையும் நிர்ணயித்துள்ளது.

உழவு தவிர, ஏனைய உழவுக் தொழில்களில் அமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 7 மணி நேரம்.

உழவுக்கு அமர்த்தப்படும் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 5 மணி நேரம்.

சிறுவர்களை வேலைக்கமர்த்துவதை ஊக்குவிக்காதிருக்கும் பொருட்டு, உரிய வயதடையாதவர்களுக்குத் தனியாக ஊதியம் ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

ஆலோசனைக் குழுமுறையைப் பின்பற்றி, குறைந்த அளவு ஊதியங்களை மேலும் திருத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. ''ஆலோசனைக்குழு'' அமைப்பதற்கான செயற்குறிப்பை அரசு பரிசீலித்து வருகிறது.

இச்சட்டத்தைச்செயற்படுத்துவதற்கான புணியாளரமைப்பைப் பொறுத்தமட்டில், குறைந்தளவு ஊதிய வீதங்களைச் செயற்படுத்துவதற்காக, 1948-ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ், பிர்கா வருவாய் ஆய்வாளர்கள், துணை வட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய்க் கோட்டாட்சியர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோரை ஆய்வாளர்களாக அரசு அறிவித்துளளது. உழவுத் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்ட எல்லா உரிமைக் கோரிக்கைகளையும் விசாரித்து முடிவு செய்வதற்கு, வருவாய்த் துறையைச் சேர்ந்த வட்டாட்சியர்கள், அவரவர் அதிகார வரம்பிற்குள், உரிய அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். உழவுத் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் வழங்காத அல்லது குறைத்து ஊதியம் வழங்கிய நிலச் சொந்தக்காரர்கள் மீது வழக்குத் தொடருவதற்காக வருவாய்க் கோட்டாட்சியர்களுக்கு அதிகாரமளித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

உழவுத் தொழிலில் வேலை செய்பவர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை அளிப்பதைக் கண்டிப்புடன் செயற்படுத்துவதற்காக, மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. கூடுதலாக ,பின் வருபவை தொடர்பாக, நிலச்சீர்திருத்த ஆணையாளர் மூலம் மாவட்ட ஆட்சியர்களுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

குறைந்த அளவு ஊதிய வீதங்களைச் செயற்படுத்துவது பற்றியும் அதன் விவரங்கள் தொடர்பாகவும் உழவுத் தொழிலாளர்களிடையே விளம்பரப்படுத்தல்;

பெருமளவில் குறைந்த அளவு ஊதிய வீதங்களைச் செயற்படுத்தாத பகுதிகளில் தாமாகவே நடவடிக்கை எடுத்தல்.

பின் வரும் முறைகளைப் பின்பற்றி, உழவுத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய வீதங்களுக்குப் பரந்த அளவில் விளம்பரம் அளிக்குமாறு நிலச் சீர்திருத்த ஆணையாளர் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சென்னை மாவட்டமும், தஞ்சாவூர் மாவட்டத்தின் 11 கிழக்கு வட்டங்களும் (இங்கு தமிழ்நாடு 1969ஆம் ஆண்டு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் செயலில் உள்ளது) நீங்கலாக, மாநில முழுவதும் விளம்பரப் பலகைகள் வைப்பதன் மூலம் விளம்பரம் செய்யுமாறு செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். உழவுத் தொழிலாளர்களுக்கு அளிக்க வேண்டிய குறைந்தளவு ஊதிய வீதங்கள் குறித்தும் இவ்வீதங்களை விடக் குறைவாக அளித்தாலும், அல்லது அவற்றை அளிக்கத் தவறினாலும் விதிக்கப்படும் தண்டனை விதித்துறைகள் பற்றியும் குறித்த காலத்திற்கொரு முறை ஒலி பரப்பியும்-ஒளிபரப்பியும் விளம்பரம் அளிக்குமாறு சென்னை அகில இந்திய வானொலி நிலையமும், சென்னை தொலைக்காட்சி நிலையமும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்**

(ஜெனரல் இன்ஷ்யூரென்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**

# கொத்தடிமை ஒழிப்பு

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த மக்களில் குடும்பத் தலைவரோ, தனி நபரோ முதலாளிகளிடம் முன் பணம் பெற்று பணம் திருப்பித் தர முடியாத நிலையில், குறைந்த கூலியில் அல்லது கூலியற்ற தொழிலாளிகளாக மாறி விடுகின்றனர். இம்முறையேதான் கொத்தடிமைத்தனத்திற்கு மூல காரணமாகிறது. கண்டுபிடிக்கப்பட்டதில் 90 சதவிகிதம் அதிகமான கொத்தடிமைகள் தங்கள்



தங்கள் அடிப்படை உரிமைகளையும், சுதந்திர வாழ்வையும் இழந்தவர்களாகக் காணப்பட்டனர்.

காந்திய நெறியான ''அந்தியோதயா'' முறையானது, கொத்தடிமைகளை விடுதலையாக்கவும் அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் மறுவாழ்வுத் திட்டங்களை உருவாக்கவும் வழி வகுத்தது.

பெருந்தீங்கினை விளைவிக்கக் கூடிய கொத்தடிமை முறையானது இந்தியாவின் வட பாகங்களிலும், தமிழ்நாட்டின் அண்டைய மாநிலங்களாகிய ஆந்திரம், கர்நாடகம், ஒரிசா, மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலும் இருந்து வந்துள்ளது.

தமிழ்நாட்டின் சில பிற்போக்கான மாவட்டங்களிலுள்ள பின் தங்கிய நிலையிலான மக்களும் கல்லுடைக்கும் குவாரிகள் அதிகமாகவுள்ள அண்டை மாநிலங்களுக்கு வயிற்றுப்பாட்டிற்காகக் குடிபெயர்ந்துள்ளனர். 1980ஆம் ஆண்டிற்கு முன்னதாக இவ்வகையான மக்கள் நீலகிரி மாவட்டத்திலும் (பனியா தொழிலாளர்களும்), கல்ராயன் மலையிலும், (கவுண்டன் என்னும் பிரிவினரும்), இராமநாதபுரம் மாவட்டத்திலும் (பாலியார் குடியினரும்) பெருவாரியான அளவில் கண்டுபிடிக்கப்பட்டு அரசின் முயற்சியினால் நிலப்பிரபுக்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். தற்பொழுது தமிழ்நாட்டில் கொத்தடிமைகள் முறை இல்லை.

மத்திய அரசு, கொத்தடிமை முறையை நம்நாட்டிலிருந்து அறவே அகற்ற கடும் முயற்சிகளை மேற்கொள்கிறது. மேலும் விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள் மீண்டும் கொத்தடிமைத் தனத்திற்கு நழுவுவதைத் தடுப்பதற்கான உபயோகமான திட்டங்களை முறைப்படுத்துவதற்கான தேவைகளை வலியுறுத்தி வருகிறது. அம்மாதிரியான திட்டங்களில் மத்திய அரசு சம பங்காக மானியம் வழங்கி, மாநில அரசுக்கு உதவுகிறது. மாநில அரசும் தமிழ்நாட்டைச் சார்ந்த கொத்தடிமைகளை அண்டை மாநிலங்களிலிருந்து உடனடியாகக் கண்டு பிடித்து, விடுவித்து, நல்வாழ்வுத் திட்டங்கள் மூலம் மறுவாழ்வளிப்பதில் மத்திய அரசுக்கு இணையாகச் செயல்படுகின்றது.

ரூபாய் 6,000 வரையிலான செலவில் குடியிருக்கும் வீடுகள் கட்டித் தருதல் (தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்குச் செய்யப்படுவதைப்போன்று) பால் மாடுகளை வழங்குதல், விவசாயக் கருவிகள் வழங்குதல், கல்லுடைக்கும் கருவிகள் வழங்குதல், விவசாயத்திற்கு மானியம் வழங்குதல், உழவுமாடுகள் வழங்குதல், கோழிகள் வழங்குதல் போன்றவை தனி நபருக்கு ரூ.4,000க்கும் மிகைப்படாமல் அந்நபரின் தொழில் ஆர்வத்திற்கு ஏற்ப அனுமதித்தல் போன்ற மறுவாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன.

மறுவாழ்வுப் பணிகளை மேலும் துரிதப்படுத்த தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான ஏற்புக் குழு ஒன்று 1984 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. கொத்தடிமைகள் மறுவாழ்விற்காக மாவட்ட ஆட்சியாளர்களால் அனுப்பப்படும் கருத்துருக்களை இக்குழு அடிக்கடி கூடி, ஆய்வு செய்தபின் ஏற்பளிக்கிறது. சுமார் 1,554 கொத்தடிமைகள் 1984-85 ஆம் ஆண்டில் மறுவாழ்வளிக்கப்பட்டுள்ளனர். ரூ.8.95 இலட்சம் வரையிலான பல்வேறு திட்டங்கள் இக்குழுவால் ஏற்பு செய்யப்பட்டன. 1983-84ஆம் ஆண்டின் 1300 என்ற இலக்கினை மீறி 2,060 கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வளித்துச் சாதனை புரிந்துள்ளது இந்த அரசு.

ஆந்திரத்தில் பதுங்கணிப் பெட்டி என்ற இடத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருந்து தமிழகத்தைச் சேர்ந்த 17 குடும்பங்களைச்சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் 65 பேரை தமிழக போலீசார் ஆந்திரப் போலீசார் உதவியுடன் 1986 ஆகஸ்ட் திங்களில் மீட்டு வந்துள்ளனர். இவர்கள் பெரம்பலூர் வட்டத்தைச் சேர்ந்த செங்கேரி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் சொந்தக் கிராமத்திற்கு வந்து சேர்ந்துவிட்டனர்.

1986-ஆம் ஆண்டு அக்டோபரில் மத்தியப்பிரதேசம், தாம்ராபாத்ரி கிராமத்தில் கற்குவாரியில் கொத்தடிமைகளாக இருந்த தம்பதியினரும், அவர்களது மூன்று குழந்தைகளும் மீட்கப்பட்டுள்ளனர். 9 ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் அங்கு சென்றனர்.

ஒன்பதாம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை கல்வி பயிலாத நகர்ப்புற ஆதிதிராவிட இளைஞர்களுக்கு தமிழ்நாட்டிலுள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் குறுகிய காலப் பயிற்சி அளிப்பது நகர்ப்புற ஆதிதிராவிடர் இளைஞர்கள் பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம் 1985-86-ல் 1,500 நபர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். அதில் முதலாண்டு 960 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.



# ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலம்

பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டத்திற்கென 1976-77 முதல் 1985-86 வரை அரசு ரூ. 52.58 இலட்சங்கள் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்திற்கு அளித்து அதன் மூலம் தேனீ வளர்ப்பு, பிரம்பு மற்றும் மூங்கில் கூடை பின்னுதல், பாய் நெசவு செய்தல், கடுக்காய் உற்பத்தி செய்தல், புளிப் பதப்படுத்துதல். தச்சு கருமாரர் தொழில் கருவிகள் வழங்குதல், எமரிகல் திரிகை அளித்தல், பயிற்சி அளித்தல் போன்ற கிராமத் தொழில் திட்டங்களை நிறைவேற்ற வழி வகை செய்தது. இதனால் 2,829 பேர் பயன் அடைந்தனர்.

மேலும் வடஆர்க்காடு மாவட்டம், ஜவ்வாதுமலை, சேலம் மாவட்டம் கொல்லிமலை, மற்றும் கல்ராயன்மலை ஆகிய மலைகளில் இத்திட்டங்களைச் சீரிய முறையில் நிறைவேற்றவும், அவ்வப்போது பழங்குடி மக்களின் தொழிலுக்கு ஏற்ப திட்டங்களை வகுக்கவும், பயிற்சிகள் அளிக்கவும் அவர்கள் தொழில்களை நன்கு பராமரிக்கத்தக்க ஆலோசனைகள் வழங்கவும் இதற்கென தனியாக ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் கீழ்க்கண்ட பணியாளர்களைக் கொண்டு 1982-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

பழங்குடியினர் மேம்பாட்டிற்காக திட்டங்களை வகுப்பதிலும், அவர்கள் முன்னேற்றத்திலும் அரசு தனி கவனம் செலுத்துவது போல் வாரியமும் அரசு அளித்துள்ள நிதிக்கு மேல் கதர் ஆணைக்குழுவின் மூலம் நிதி உதவி பெற்று தேனீ தொழிலின் மூலம் நன்கு பயின்றவர்களைக் கொண்டு தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதற்கு மூலதனம் வழங்கியும், குறிப்பிட்ட கிராமத் தொழிலாகிய தேனீ வளர்ப்பு, தச்சு கருமாரர் தொழில், மூங்கில் மற்றும் பிரம்பு கூடை முடைதல், பாய் நெசவு, ரொட்டி செய்தல், மட்பாண்டம் செய்தல் போன்ற தொழிலில் ஈடுபட்டுள்ள தனி நபர்களை ஊக்குவிக்க அவர்களுக்கு நிதி உதவி அளித்தல் போன்ற திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியுள்ளது. கதர் ஆணைக்குழுவின் நிதியுதவியுடன் இது வரை ரூ. 10.28 இலட்சம் செலவு செய்து அதன் மூலம் 3,473 பேர் பயனடைந்துள்ளனர்.



## ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் பழங்குடியினர் நல வளர்ச்சித் திட்டங்களை முடுக்கி விடுதல்.

1985-86ல் 2,00,000 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு நல்வாழ்வு அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை 2,08,206 லட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்கள் வறுமைக் கோட்டைத் தாண்ட உதவி செய்யப்பட்டுள்ளது. இதற்குப் பல்வேறு துறைகள் மூலம் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

# கிராமப்புறங்களில் குடிநீர் வழங்கல்

'தமிழ்நாட்டில் இன்னும் பல கிராமங்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் தட்டுப்பாட்டோடு இருக்கின்றன; நான் சென்ற பல இடங்களில் எந்தத் திட்டம் எப்படியிருந்தாலும் சரி; எங்களுக்குக் குடிநீர் கொடுங்கள் என்று மக்கள் கேட்டார்கள். ஆகவே கிராமப்புற மக்களின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதே இந்த அரசின் தலையாய பணியாக இருக்கும்' என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 1977ல் முதல்வராகப் பதவிப் பொறுப்பேற்ற நேரத்தில் தெரிவித்தார்.

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

—என்ற குறள், இந்த விஷயத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பொறுத்தமட்டில் தவறாகிவிட்டது. ஆம்; குடிநீர்ப்பிரச்னை உள்ள கிராமங்களே தமிழ்நாட்டில் இல்லை என்கிற நிலைமை உருவாகியிருக்கிறது இப்போது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் தமிழகத்தில் அங்கிங்கெனாதபடி எங்கும் வழங்கப்படுவதைக் காண்கிறோம்.

இருபது அம்சத்திட்டத்தில் 8-வது அம்சமான 'கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குதல்' என்பது செம்மையுறச் செயல்படுத்தப்பட்டிருக்கிறது தமிழ்நாட்டில்.

1984-85ல், திருச்சிமாவட்டத்தில் மட்டும் 220 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த 20 பிரச்னைக் கிராமங்களுக்குக் குடிநீர் அளிக்கப்பட்டுள்ளது.

1984-85ல், தருமபுரி மாவட்டத்தில் பிரச்சினைக் கிராமங்களாக இருந்த 31க்கும் குடிநீர் வழங்கப்பட்டிருக்கிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த 15 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்பட்டுள்ளது.

நீலகிரிமாவட்டத்தில் 10 குக்கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 35.90 இலட்சத்தில் அதற்கான திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 235 குடியிருப்புகளில் இருந்த தண்ணீர்ப் பிரச்னை தீர ரூ. 193 இலட்சத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் மூலம் 64 ஆயிரம்பேர் பயனடைந்து வருகிறார்கள்.

அண்மைக்காலத்தில் உருவாக்கப்பட்ட காமராஜர் மாவட்டத்திலேகூட 75 கிராமங்களுக்குக் குடிநீர் வரத்து முறைப்படுத்தித் தரப்பட்டுள்ளது.

இப்படி தமிழ்நாடு அரசின் தக்க நடவடிக்கைகளால், இங்குள்ள அத்தனை மாவட்டங்களிலும் இருந்த குடிநீர்ப் பிரச்னை நீக்கப்பட்டு விட்டது என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!





# இப்போது! பேன்மின்த்*

(மோரென்ட்டல் சிட்ரேட்)

## நாக்குப் புழுக்களை அழிக்கிறது.
## நாக்குப் புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பு.



நாக்குப்புழுக்கள்—உங்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரிகள். கால்நடையின் வயிற்றிற்குள் நாக்குப் புழுக்கள் வளர்ந்து வாழ்கின்றன. அவை கால்நடையின் ஊட்டச் சத்துக்களை உண்ணுகின்றன. இதன் பலனாக கால்நடை மெலிந்து, உற்பத்தி குறைந்து விடுகிறது, லாபம் குறைந்து விடுகிறது.

மேய்ச்சல் தளத்திலே கால்நடைகள் மேயும்போது நாக்குப் புழுக்கள் தொற்றிப் பரவுகின்றன. அடிக்கடி புழு நோய் வருவதால், நிரந்தரமான, புழுவே அற்ற கால்நடைகள் இருக்க வாய்ப்பே இல்லை எனலாம். ஆகவேதான், கால்நடை மருத்துவர்கள், 3-4 மாதங்களுக்கொரு முறைப்புழுக்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்கின்றனர்.

பேன்மின்த் நாக்குப்புழுக்களை அழிக்கிறது நாக்குப்புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பாக.

பேன்மின்த், உலகெங்கிலும் கால்நடைகளைத்தாக்கும் நாக்குப் புழுக்களை ஒழிக்கிறது.

பேன்மின்த், பாதுகாப்பானது பலகீனமான சோர்வான, கால்நடைகளுக்கும், சினையுள்ள மற்றும் கன்று ஈன்ற கால்நடைக்கும். இதர சில புழுக்கொல்லிகளை போல் இது, பால் நிறததில் மாற்றமோ, தீய விளைவுகளோ ஏற்படுத்தாது. பேன்மின்த் கொடுத்த பின்பும், பாலினைப் பயன்படுத்தலாம்.

இப்போது, பேன்மின்த் எளிதான வசதியான புழுக்கொல்லி.

உபயோகிக்க எளிதானது பேன்மின்த்—காரணம், உடனடி உபயோகத்திற்கான கரைசல் மாத்திரை, உருண்டை ஆகிய வடிவங்களிலே கிடைக்கின்றது.

கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.

கரைசல் கிடைக்கிறது
100 மி.லி, 500 மி.லி. மற்றும்
4.5 லிட்டர் பேக்குகளில்

சிறிய கால்நடைக்கு
மாத்திரைகள்.



பெரிய கால்நடைக்கு
உருண்டைகள்.

ஒப்பற்ற **பேன்மின்த்**

புழுக்களை அழித்திடும் ஆரோக்கியம் அளித்திடும்

*யு.எஸ்.ஏ :.பைஸர் இன்கார்ப்பரேட்டின் ட்ரேட்மார்க்

pfizer

கேட்பதன் பேரில் மேலும் தகவல்கள் கிடைத்திடும்.

அடிப்படை வசதிகளில் ஒன்றான வீட்டு மனைப் பட்டா வழங்குதல் பாரதப் பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின் ஒருமித்த நோக்கமாகும். இத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. 1949 முதல் 1977 வரை 2 இலட்சத்து 62 ஆயிரம் வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. 1977 முதல் 1986 மார்ச் வரை இதன் எண்ணிக்கை 4 இலட்சத்து 25 ஆயிரத்து 870 ஆக உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாண்டில் இதற்கென ஒரு கோடி ரூபாய் செலவில் நில எடுப்பு செய்யப்படவுள்ளது. இதன் மூலம் 25 ஆயிரம் குடும்பத்தார் வீட்டுமனை பெறுவர்.




## கிராமங்களில் வீட்டு மனை இல்லாத குடும்பங்களுக்கு வீட்டு மனை ஒதுக்குவதும், அவர்களுக்கு வீடுகட்ட நிதி வழங்குவதும்.

தமிழ்நாட்டில் வீட்டு மனை இல்லாத குடும்பங்களைச் சார்ந்தவர்கட்கு 1,75,000 வீட்டு மனைப் பட்டா வழங்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் 186630 வீட்டுமனைப்பட்டாக்கள் வீட்டு மனை இல்லாத குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன. ஆதி திராவிடர்கட்கும் மற்ற ஏழைக் குடும்பத்தினருக்கும் வீடுகள் கட்ட உதவித்தொகை 42,248 பேருக்கு வழங்கப்பட்டது. இது நிர்ணயித்த எண்ணிக்கையைக் காட்டிலும் 2,248 அதிகமாகும்.



மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் திரு வி. வி. சுவாமிநாதன் அவர்களை, தொலைக் காட்சி டைரக்டர் ஜெனரல் திரு பாஸ்கர கோஷ் 24.10.86 அன்று சென்னையில் சந்தித்தார். செய்தி - சுற்றுலாத்துறைச் செயலர் திரு ஏ. பி. முத்துசாமி, இ.ஆ.ப., உடன் உள்ளார்..



# குடிசைப்பகுதி மேம்பாடு

நகராட்சிகளில் உள்ள குடிசை வாழ்மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த அரசு 1977-78 ஆம் ஆண்டில் ஒரு புதிய திட்டத்தைத் துவக்கியது. 102 நகராட்சிகளில் (5 நகரியங்கள் உள்பட) சுமார் 12 இலட்சம் மக்கட்தொகை கொண்ட 1,100 குடிசைப்பகுதிகள் உள்ளன. 3 நகரியங்கள் மற்றும் ஒரு நகராட்சியில் குடிசைப் பகுதிகள் இல்லை.

20 அம்சத் திட்டத்தில் உள்ள இனங்களில் இதுவும் ஓர் தின் கீழ் அரசு வழங்கிய மான்யங்களின் விவரம் பின்வருமாறு:

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு இத்திட்டத்திற்கென ரூபாய் 250 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

1985-86ஆம் ஆண்டின் அரசு வழங்கிய ரூ. 40.00 இலட்சம் மானியத் தொகையில் 30 குடிசைப் பகுதிகளில் மேற்குறிப்பிட்டுள்ள நான்கு வகைகட்குட்பட்ட 105 வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1986-87 நிதி ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் அரசு ரூ. 40.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டம் பிரதமரின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வருவதால் அரசு 102 நகராட்சிக்கூடங்களுக்கும் இத்திட்டத்தை விரிவாக்கிப் பொருளாதாரத்தில் நலிவுற்ற மக்கள் வாழும் குடிசைப்பகுதிகளில் அத்தியாவசியமான அடிப்படை வசதிகளைச் செய்து தர ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.250 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | ஆண்டு | தேர்ந்தெடுக்கப்பட்ட நகராட்சிகளின் எண்ணிக்கை | அபிவிருத்தி செய்த குடிசைப்பகுதிகளின் எண்ணிக்கை | அரசு வழங்கிய மான்யம் |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1. | 1990-81 | 13 | 51 | 50.00 |
| 2. | 1981-82 | 12 | 66 | 50.00 |
| 3. | 1982-83 | 36 | 54 | 50.00 |
| 4. | 1983-84 | 12 | 46 | 50.00 |
| 5. | 1984-85 | 35 | 107 | 100.00 |
| 6. | 1985-86 | 23 | 38 | 40.00 |
| | மொத்தம் | 131 | 362 | 340.00 |

இனமாக உள்ளதால் இத்திட்டம் சமீப ஆண்டுகளில் புதிய வேகத்தைப் பெற்றுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதுகளில் கீழ்க்கண்ட அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன.

1. இருபுறங்களிலும் மழைநீர் வழிந்தோட வடிகால்கள் கொண்ட சாலைகள் அமைத்தல்.

2. குடிநீர் வழங்குதல், குறைந்தது 40 முதல் 50 குடும்பங்களுக்கு ஒரு பொதுக்குழாய் வீதமும், பொதுக்குழாய்கள் அமைக்க இயலாத இடங்களில் ஆழ்குழாய்க் கிணறுகளோ அல்லது குழாய்க் கிணறுகளோ அமைத்தல்.

3. பொதுக் கழிப்பிடங்கள்: 10 குடும்பங்களுக்கு ஒரு இருக்கை வீதம் போதிய தண்ணீர வசதியுடன் கூடிய பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.

4. தெரு விளக்குகள்: பொருத்தமான சந்திப்புகளில் குடிசைப் பகுதி முழுவதும் ஒளிபெறும் வகையில் குழல் விளக்குகள் அமைத்தல்.

வேறு மற்றும் 7வது ஐந்தாண்டுத் திட்டங்களில் இத்திட்டத்



# மின் உற்பத்திச் சாதனை



**தொ**ழில் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் மின்சக்தி இன்றியமையாத தூண்டுகோலாகும். 1984-85ஆம் ஆண்டில் திட்டச் செலவில் 25 விழுக்காட்டிற்கும் மேற்பட்ட தொகையை அரசு மின்சக்தி உற்பத்திக்காக ஒதுக்கியது; தமிழ்நாடு மின்வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அனல்மின் நிலையங்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டதன் பலனாக மின்சக்தி உற்பத்தி பெருமளவு உயர்ந்துள்ளது.

'ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு' திட்டத்தின் கீழ், குடிசை வாழ் மக்களுக்கு 15.9.84 முதல் மின்னொளி இலவசமாக வழங்குதல் விவசாயத்திற்கு நீரேற்றுப் பொறிகளை (பம்பு செட்டுகளை) மட்டுமே முழுமையாக நம்பியுள்ள சிறு உழவர்களுக்கு மின் சக்தியை இலவசமாக வழங்குதல் போன்ற பணிகள் நடைபெற்றுள்ளன. ஒரு குதிரைத் திறன் கொண்ட நீரேற்றுப் பொறிக்கு ஆண்டொன்றுக்கு ரூ.75 மட்டுமே செலுத்த வேண்டும என்ற ஒரே படித்தான கட்டண வீதச் சலுகை ஏனைய உழவர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக சுமார் 6 இலட்சம் குடிசை வாழ் மக்களும் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட உழவர்களும் பயன் அடைந்துள்ளனர்.

1985-86 ஆம் ஆண்டில் மின் உற்பத்திக்கென ரூ.326 கோடி ஒதுக்கப்பட்டது. இது அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் ரூ.89 கோடி அதிகமாகும். 1983-84 வரை 95,279 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டில் 50,000 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

> இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே அதிக எண்ணிக்கையில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளித்த மாநிலமாகத் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது.

ஏழாவது திட்டத்தில் மொத்தத் திட்ட நிதி ஒதுக்கமான ரூ. 5,750 கோடியில், மின்சக்தித் துறைக்கு ரூ.2,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 1985-86 ல் மின்சக்தித் துறைக்கு ரூ.326 கோடி ஒதுக்கப்பட்டது. இது 1986-87ல் ரூ.395 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

எண்ணூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்களைப் புதுப்பித்து நவீனப்படுத்த, வாரியம் தீவிர நடவடிக்கை எடுத்ததால், இவற்றின் செயல்திறன் இந்த ஆண்டு வெகுவாக மேம்பாடு அடைந்துள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையம், 1985-86ல் 65 விழுக்காடு PLF ஐ அடைந்தது. இந்நிலையம், 1983-84ல், 51.5 விழுக்காட்டையும் 1984-85ல் 62 விழுக்காட்டையும் ஒப்பிடுகையில், ஆண்டு முழுவதற்கும் 67 விழுக்காடு PLF ஐ அடையும். எண்ணூர் அனல்மின் நிலையத்தைப் பொறுத்தவரை ரூ.100.10 கோடி செலவில் விரிவான புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பயன்கள் ஏற்கனவே கிடைக்கத் தொடங்கியுள்ளன.

# வனவளம்



தமிழ்நாட்டில் காடுகளின் பரப்பு 22.31 இலட்சம் எக்டேராகும். இதில் காப்புவனம் 18.30 இலட்சம் எக்டேர். 3.40 இலட்சம் எக்டேர் காப்பு நிலம்; ஊரகப்படுத்தப்படாத காடுகள் 0.61 இலட்சம் எக்டேர். காடுகளின் பரப்பை மிகுதிப் படுத்தும் நோக்கோடு வனப்பகுதிகளுக்கு வெளியே உள்ள - அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்களிலும், ஊராட்சி நிலங்களிலும், குளக்கரைகள், தேசிய நெடுஞ்சாலைகளிலும், சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் பெருமளவில் மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

காடுகள் மேம்பாட்டுப் பணிகளுக்காக 1977-78ல் ரூ.8.03 கோடி செலவு செய்யப்பட்டது. 1985-86ல் ரூ.28.6 கோடி செலவு செய்யப்பட்டது.

காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1983-84 ஆம் ஆண்டில் 1,192.46 இலட்சம் மரக்கன்றுகளும் 1984-85 ஆம் ஆண்டில் 1,106.86 இலட்சம் மரக்கன்றுகளும் 1985-86 ஆம் ஆண்டில் 1,214.491 இலட்சம் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

சமூகக் காடுகள் 1983-84 ஆம் ஆண்டில் 28,768 எக்டேரிலும், 1984-85 ஆம் ஆண்டில் 38,249 எக்டேரிலும், 1985-86 ஆம் ஆண்டில் 29,960 எக்டேரிலும் வளர்க்கப்பட்டன.

வனப் பண்ணைத் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு 1983-84 ஆம் ஆண்டில் 459.809 இலட்சம் மரக்கன்றுகளும், 1984-85 ஆம் ஆண்டில் 443.510 இலட்சம் மரக்கன்றுகளும், 1985-86 ஆம் ஆண்டில் 531.175 மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

வனக்குற்றங்களைக் கண்டு பிடித்துக் குற்றவாளிகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதையே முழு நேரப் பணியாகக் கொண்டு செயல்படும் பொருட்டு வனப் பாதுகாப்புப் படைகள் பல நிறுவப்பட்டுள்ளன. சோதனைச் சுவடிகள் 89 நிறுவப்பட்டுள்ளன.

சுவீடன் அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டம் 1981-82 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டப்பணியில் முதல் கட்ட மதிப்பீடு ரூ.45 கோடி ஆகும். இத்திட்டத்தின் முதல் கட்டத்தை 1986-87 முடிய மேலும் ஓராண்டு காலம் நீடித்திட இந்திய அரசு அனுமதித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ், முதல் ஐந்தாண்டுகளில் (1981-82, 1985-86) 1,21,629 எக்டேர் பரப்பில் மரம் வளர்ப்புப் பணி நடைபெற்றுள்ளது. இது தவிர தொடர் தோட்டங்கள் 76,026 கி.மீட்டரில் வளர்க்கப்பட்டன. 10.38 கோடி மரக்கன்றுகள் பொதுமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டன.

சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 1986-87 ஆம் ஆண்டில் 21.268 எக்டேர் நிலத்தில் மரக்கன்றுகள் நடவும், 940 இலட்சம் மரக்கன்றுகள் உற்பத்தி செய்து வழங்கவும் வனப் பண்ணைத் திட்டத்தின் கீழ் 4.71 கோடி மரக்கன்றுகள் பொதுமக்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

சமூக வனத் திட்டம் மற்றும் ஊரக எரிமர உற்பத்தித் திட்டங்கள் தவிர, அரசுக் காட்டில் ஆங்காங்கே தரம் குறைந்தும், மதிப்புக்குறைந்தும் பாழ்பட்டுப்போன பகுதிகளிலும், பல்வேறு திட்டங்களின் கீழ் மரங்கள் இலட்சக் கணக்கில் வழங்கப்பட்டுவருகின்றன. இவை காடுகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் இயற்கைச் சூழலை மேம்படுத்துவதற்கும் செயல்படுத்தப்படுகின்றன.

---

சாண எரிவாயு அமைப்புகளை நிறுவுவதில் தமிழகம் மிக வெற்றிகரமாகச் செயலாற்றி உள்ளது. 31.3.1986ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் மொத்தம் 10,000 சாண எரிவாயு அமைப்புகளை நிறுவ வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. இந்த இலக்கை மிஞ்சி மொத்தம் 17,549 சாண எரிவாயு அமைப்புகள் நிறுவப்பட்டன.

---

## அம்சம் : 13

# குடும்பநலம் பெருகிட....

குடும்ப நலத் திட்டத்தை 1956 முதல் தமிழகம் ஒரு மக்கள் இயக்கமாக நடத்தி மக்களின் விருப்பத்தின் அடிப்படையிலேயே அதனை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது. இந்தியாவின் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது இலக்கினை அடைவதில் தமிழ்நாடு முதல் வரிசையில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாட்டின் மக்கள் தொகை 1981ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 4.84 கோடியாகும். 1971-81 ஆகிய பத்தாண்டுகளில் தமிழகத்தின் மக்கள் தொகை வளர்ச்சி 17.5 சதவிகிதமாகும். அதே கால கட்டத்தில் இந்தியா முழுவதும் தேசிய அளவிலான மக்கள் தொகை வளர்ச்சி 25 சதவிகிதமாகும். தேசிய அளவில் மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் நிற்பதை இது காட்டுகிறது. கி.பி. இரண்டாயிரத்தில் சராசரி ஒரு தாய்க்கு ஒரு பெண்குழந்தை என்ற இலக்கினை அடைய தேசிய அளவில திட்டமிடப்படுகிறது. அந்த இலக்கினை தமிழ்நாடு 1991-92ம் ஆண்டிலேயே அடையத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் இன்றைய குடும்ப நலத் திட்ட நிறைவேற்றம் ஐந்து அம்சங்களைக் கொண்டதாகும்.

1. தகவல் தொடர்பு; 2. விரிவாக்கக் கல்வி; 3. குடும்ப நலம் ஏற்க வசதிகள்;4.பின் கவனிப்பு; 5. தாய் சேய் நலம்.



தமிழ்நாட்டுக்கு 1985-86ஆம் ஆண்டில் மத்திய அரசு விதித்திருந்த அறுவைச் சிகிச்சைக் குறியீடு 4,75,000 ஆகும். அதையும் தாண்டி 5,13,990 அறுவைச் சிகிச்சைகளைச் செய்து 108.2 சதவிகிதச் சாதனையைத் தமிழகம் புரிந்துள்ளது.

1984-85ல் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரிய சாதனை புரிந்ததற்காக மத்திய அரசின் பரிசாக ரூ. 2·5 கோடியைத் தமிழகம் பெற்றது. அடுத்து 1985-86ஆம் ஆண்டிலும் இத்தகைய சாதனைக்கான பரிசாக ரூ. 2.5 கோடியைத் தமிழக அரசு பெறவிருக்கிறது.

தற்காலிகக் கருத்தடை முறைகளைக் கடைப்பிடிப்பதில் முந்திய ஆண்டுகளைவிடத் தற்போது அதிக அளவில் தமிழகம் சாதனை புரிந்துள்ளது. பெண்கள் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவது, குடும்ப நலத் திட்டம் தொடங்கிய காலம் முதல் 1985-86ஆம் ஆண்டில் தான் மிகவும் அதிக அளவில் நடைபெற்றுள்ளது.

தற்காலிகக் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவதில் 1985-86ல் தமிழகத்தின் சாதனை விவரம்.

| குடும்ப நல முறைகள் | இலக்கு | சாதனை | சதவிகிதம் |
|---|---|---|---|
| கருத்தடை வளையம் | 1,68,000 | 1,92,120 | 114.4 |
| வழக்கமான கருத்தடைச் சாதனங்கள் | 2,00,000 | 1,77,214 | 88.6 |
| உட்கொள்ளும் மாத்திரைகள் பயன்படுத்துவோர் | 76,000 | 47,885 | 63.0 |

# நோயற்ற வாழ்வு



கண் பார்வையின்மையைக் கட்டுப்படுத்துதலுக்கான தேசிய திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில், மதுரை, இராஜாஜி மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் தஞ்சாவூர் இராசா மிராசுதார் மருத்துவமனை ஆகிய மூனறு இடங்களிலும் மத்திய அரசின் 100 சதம் முழு உதவியுடன் 3 நடமாடும் கண் முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன.

சென்னை மருத்துவக் கல்லூரி இயக்குநர் அலுவலகத்தில் ஒரு மாநிலக் கண் ஆய்வுக்குழு நிறுவ ஆணை வழங்கபபட்டுள்ளது.

**தேசியத் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டின் கண் புரை நோய் அறுவைச் சிகிச்சை சாதனை விவரம்:**

| | |
|---|---|
| மத்திய நடமாடும் கண் முகாம் | 963 |
| மருத்துவக் கல்லூரிகளைச் சார்ந்த மருத்துவ மனைகள் | 14023 |
| மாநில அரசு இலவசக் கண் முகாம் | 17457 |
| மாவட்ட மற்றும் தாலுகா மருத்துவமனைகள் | 6375 |
| தனியார் நிலையங்கள் | 63399 |
| | 102217 |

30-6-1986 முடிய கண் புரை நோய் அறுவைச் சிகிச்சைச் சாதனை 22,323 ஆகும்.

தொழுநோய் மைக்கோ-பாக்டிரியம் என்னும் கிருமியால் நீண்ட காலமாக உள்ள தொற்றும் வகையைச் சேர்ந்த நோயாகும்.

தமிழகத்தில், கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் சராசரி 1000 பேருக்கு 13 பேர் என்ற விகிதத்தில் தொழுநோய் இருப்பதாக 1971இல் கணக்கிடப்பட்டது.

தேசிய தொழுநோய்த் தடுப்புத் திட்டம், தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டமாகப் பெயர் மாற்றம் பெற்று 20 அம்சத் திட்டத்தில் 14ஆம் அம்சமாகச் சேர்க்கப்பட்டது.

**மக்களுக்குச் சுகாதார வசதிகளை மிகுவித்தல். தொழுநோய், காசம், பார்வையிழப்பு ஆகிய வற்றைக் கட்டுப்படுத்துதல்.**

**அடிப்படைச் சுகாதார வசதிகளைக் கணிசமாக அதிகப்படுத்த இலக்கு 300 நிர்ணயிக்கப்பட்டு 216 சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. துணை நிலையங்கள் 613க்கு 500 துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.**

கூட்டு மருந்து சிகிச்சை: கூட்டு மருந்து சிகிச்சையின் நோக்கங்கள் கீழ்வருமாறு:

டாப்சோன் மாத்திரைக்கு எதிர்க்கும் சக்தி பெற்ற தொழுநோய்க் கிருமிகளை ஒழித்தல்.

மிகக்குறைந்த காலக்கட்டத்திற்குள் தொற்றும் வகையைச் சேர்ந்த நோயாளிகளைத் தொற்றா வகை நோயாளிகளாக மாற்றி அவ்வியாதியிலிருந்து மக்களைக் காப்பாற்றுதல்.

ஆரம்ப நிலையிலேயே கூட்டு மருந்து சிகிச்சை அளித்து அங்கஹீனம் ஏற்படுவதைத் தடுத்தல்.

இந்தியத் துணைக் கண்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பனிரண்டு மாவட்டங்களில் வடார்க்காடு மாவட்டமும் ஒன்றாகும்.

சுவீடன் பன்நாட்டு முன்னேற்ற நிறுவனமும் ( SIDA ) உலகச் சுகாதார நிறுவனமும் இணைந்து இம்மாவட்டத்தின் கூட்டுச் சிகிச்சைமருத்துவமனைக்குப் பண உதவியும் ஆலோனையும் வழங்கி வருகின்றன.



# ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து



தமிழக அரசு செயல்படுத்தி வரும் அனைத்து ஊட்டச் சத்துத் திட்டங்களும் தாய் சேய் நலப் பணிகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகின்றன. இத்திட்டங்களில் உலக வங்கி உதவியுடன் மதுரை, காமராஜர், அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கம், திருநெல்வேலி, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு ஆகிய 9 மாவட்டங்களில் (மொத்தம் 173 வட்டாரங்களில்) நடைபெற்று வரும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டமும் ஒன்றாகும். 6.79 இலட்சம் 6-36 மாதக் குழந்தைகளும், 1.59 இலட்சம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பயனடையும் இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.56 கோடியாகும். ஊட்டச் சத்துக் குறைபாட்டின் அடிப்படைக் காரணங்களை அறிந்து நீக்குவதில் இத்திட்டம் முனைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மற்ற ஊட்டச் சத்துத் திட்டங்களோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கையில் மிக உன்னதமான சில அம்சங்கள் இதில் உள்ளன என்பது நமக்குப் புலப்படும்.

கிராமப் பகுதிகளிலுள்ள 6 முதல் 36 மாதக் குழந்தைகள் அனைவரும் கண்டறியப்பட்டு, ஒவ்வொரு மாதமும் முறையாக எடை எடுக்கப்பட்டு அவர்களது ஊட்டச்சத்து நிலை கண் காணிக்கப்படுகிறது.

குழந்தை ஆரோக்கிய நிலை அடையும்வரை இணை உணவு வழங்கப்படுகிறது.

ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வியும் தீவிரமாக அளிக்கப்படுகின்றது.

1. ஊட்டச் சத்துப் பணிகள், 2. கிராம சுகாதாரப் பணிகள், 3. தொடர்புப் பணிகள், 4. முறைப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

—ஆகிய பணிகளின் கீழ் இத்திட்டம் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றது.

முதன் முதலில் 1981ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டியில் மாதிரித் திட்டமாக இத்திட்டம் செயல்பட ஆரம்பித்தது.

இப்பணிகளைச் செயல்படுத்த ஒவ்வொரு 1500மக்கள் தொகைக்கும் ஒரு சமுதாய ஊட்டச்சத்து மையம் அமைக்கப்பட்டு அதற்குப் பொறுப்பாக ஒரு ஊட்டச் சத்துப் பணியாளர் அந்தக் கிராமத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் திட்டப் பணிகளுக்கும் சமுதாயத்துக்கும் இடையே இணைப்புப் பாலமாக உள்ளார்.

இப்பணிகளை அளிக்க ஒவ்வொரு 5000 மக்கள் தொகைக்கும் ஒரு சுகாதாரத் துணை நிலையம் அமைக்கப்பட்டு அதற்குப் பொறுப்பாக ஒரு சுகாதாரப் பணியாளர் அமர்த்தப்பட்டுள்ளார்.

இத்திட்டம் கிராமப்புறங்களில் கடந்த 5 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்தக் குறுகிய காலத்திற்குள் இந்தத் திட்டம் செயல்பட்டுவரும் கிராமங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வியக்கத்தக்கதாக இருக்கின்றன. உதாரணமாக மாதிரி வட்டாரமான 'கொட்டாம்பட்டியில்' மார்ச் 84 முடிவில் மதிப்பீடு செய்ததில் ''வைட்டமின் ஏ'' குறைவினால் பாதிக்கப்பட்டோரின் சதவிகிதம் 21.4% இருந்து 11.4% ஆகக் குறைந்துள்ளது. குழந்தைகளின் இறப்பு விகிதமும் 76.3 / 1000 இருந்து 73.1 / 1000க்குக் குறைந்துள்ளது. இதேபோல் திட்ட நடவடிக்கைகளில் மக்களின் பங்கு மிகவும் அதிகரித்துள்ளது.

எந்த ஒரு திட்டமும் வெற்றிகரமாகச் செயல்பட யாருக்காக அத்திட்டம் செயல்படுத்தப்படுகிறதோ அம்மக்களின் பூரண ஒத்துழைப்பைப் பெற வேண்டும். தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தில் ஊட்டச் சத்துப் பணியாளருக்கும் சுகாதாரப் பணியாளருக்கும் 10 நாட்களுக்கு இணைப்புத் தகவல் கூட்டம் நடத்தப்படுகிறது. அச்சமயம் 7-10 ஊட்டச் சத்துப் பணியாளர்கள் மற்றும் 2-3 சுகாதாரப் பணியாளர்கள் தங்கள் மேற்பார்வையாளரின் உதவியுடன் ஒரு மாதிரி கிராமத்தைத் தேர்ந்தெடுத்து, கிராம மக்களுடன் நெருங்கிப் பழகி, அக்கிராமத்தில் செல்வாக்கும் ஆர்வமும் நிறைந்த சிலபெண்களைத்தேர்ந்தெடுத்து, பெண்கள் தொடர்புக் குழுவை ஏற்படுத்துகின்றனர். இப்படித் திட்டம் செயல்படும் ஒவ்வொரு கிராமத்திலும் பெண்கள் தொடர்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஊட்டச் சத்துக்கு உலக வங்கி பாராட்டு**

பிறந்தது முதல் பள்ளிக்குச் செல்லும் காலம் வரையிலான பருவத்தில் உள்ள குழந்தைகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் தேவையான ஊட்டச்சத்து அளிப்பதுடன், சுகாதாரப் பராமரிப்பு மற்றும் மன வளர்ச்சிக்குத் தேவையான மருத்துவ உதவி வழங்குவதும் ஊட்டச் சத்து திட்டத்தின் முக்கிய கூறுபாடுகளாகும்.

இந்தப் பருவத்தில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்குவது மிகவும் இன்றியமையாதது ஆகும். தமிழ்நாட்டில் மிகக் குறைந்த செலவில் இத்திட்டம் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று 1986ஆம் ஆண்டின் உலக வளர்ச்சி பற்றிய உலக வங்கியின் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அம்சம் : 16

அடிப்படைக் கல்வி-வயது வந்தோர் கல்வி ஆகியவைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவது 20 அம்சத் திட்டத்தின் 16வது அம்சமாகும்.

தமிழகத்தின் கல்வித்துறையானது பள்ளிக் கல்வி, பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, பொது நூலகங்கள் என ஐந்து பெரும் பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்த ஐந்து துறைகளிலும், கடந்த பத்தாண்டுகளில் தமிழக அரசு செய்து வருகின்ற சாதனைகள் தமிழகத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்துள்ளன.

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் விடுப்புச் சலுகைகள் அனைத்தும் தனியார் நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும் வகையில் ஆணை இடப்பட்டது.

பணியிலிருக்கும்போது இறந்து விடும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் தமிழ்நாடு குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டம், தனியார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

# கல்விப்பணி

1982-83ல் இளஞ்சிறார்கள் கல்விக்கெனப் பெரிய அளவிலான திட்டம் தொடங்கப்பட்டது. இளஞ்சிறார்களுக்குப் பள்ளி செல்லும் மனப்போக்கைப் புகட்டுதல் மூலம் இளஞ்சிறார் கல்வியானது தொடக்கக் கல்வி வளரவும் உதவும். இத்திட்டத்தின்முதற்கட்டமாக இம்மாநிலத்திலுள்ள 4,433 குழந்தைகள் நல மையங்கள் (பால்வாடிகள்) ஒவ்வொன்றிலும் ஒரு நர்சரி பிரிவு ஏற்படுத்த வகை செய்யப்பட்டது.

1976-77ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வித்துறைக்கென அரசால் 127 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1985-86 நிதி ஆண்டிற்குப் பள்ளிக் கல்வித் துறைக்கென மட்டும் ரூ. 445 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

முதலமைச்சரின் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் 1.7.82 முதல் துவக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கூடுதலான மாணவர் சேர்க்கையில் முன்னேற்றம் காண்பதோடு ''பள்ளிக்கு வராமையும்'' இடையில் பள்ளியை விட்டு ''விலகுதலும்'' பெருமளவுக்குக் குறைய வழிவகுத்துள்ளது.

1984-85ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையினைத் தொடர்ந்து முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உணவு உண்ணும் மாணவர்க்கு இலவசப் பாடப்புத்தகங்கள் இந்தக் கல்வி ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இன்றைய தேசிய கொள்கையான 'எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி' என்ற இலக்கை அடைவதற்கான முயற்சியில் தமிழ்நாடு முன்னணியில இருக்கிறது. இவ்வளர்ச்சி, கடந்த பத்து ஆண்டுகளில் சீரிய திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செவ்வனே நிறைவேற்றிய தன் விளைவேயாகும்.

1979-80 ஆம்ஆண்டில் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டமானது முழுவதும் மாநில அரசின் நிதியுடன், தமிழ்நாட்டில் 61 தன்னிறைவுத் திட்டத்துக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் 140 இலட்ச ரூபாய் செலவில் 6100 மையங்கள் செயல்படுத்த ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டமானது 1983-84 ஆம் ஆண்டில் மேலும் 54 ஊராட்சி ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு தற்போது இந்த 5,400 மையங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர இத்திட்டம் 1985-86 ஆம் ஆண்டில் மேலும் 6 ஒன்றியங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு 600 மையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.



தற்போது மொத்தம் 121 ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் 100 மையங்கள் வீதம் 12,100 மையங்கள் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் 1981 ஆம் ஆண்டில் 61 இலட்சம் பேர் எழுத்தறிவு அற்றவர்களாக இருந்தனர். வயது வந்தோர் கல்வித் திட்டம் விரிவாக்கப்பட்ட பின்னர் தற்போது எழுத்தறிவு அற்றவர்கள் எண்ணிக்கை 32 இலட்சமாகக் குறைந்துவிட்டது.

தமிழ்நாட்டில் 21 ஆயிரத்து 800 முதியோர் கலவி மையங்கள் செயல்படுகின்றன. இதில் மாநில அரசு சார்பில் 12,100 மையங்களும், மத்திய அரசு சார்பில் 8,100 மையங்களும் செயல்படுகின்றன. மற்ற மையங்கள் தொண்டு நிறுவனம் சார்பிலும் பல்கலைக்கழகங்கள் மூலமும் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் வயது வந்தோர் கல்வித் திட்டம் சிறப்பாகச் செயல்படுவதைப் பாராட்டி யுனஸ்கோ நிறுவனமும் மத்திய அரசும் பரிசுகள் பல வழங்கி உள்ளன.



# ஒரு வருவாய்க் கிராமத்திற்கு ஒரு கடை

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டம் 'ஒரு கிராமத்திற்கு ஒரு கடை' என்ற திட்டத்தின் கீழ 1978ஆம் ஆண்டில் விரிவாக்கப்பட்டது. இவ்வாண்டில் ஒரு வருவாய்க் கிராமத்திற்கு ஒரு கடை திறந்து தமிழ்நாடு முழுவதிலும் பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு எடுத்த முடிவின்படி, ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடை திறக்கப் பட்டது.

இத்திட்டம் தொடங்குவதற்கு முன்பு கூட்டுறவு இயக்கத்தால் 4441 நியாய விலைகள் கடைகள் நடத்தப்பட்டு வந்தன. கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்காக ஒதுக்கப்பட்ட 12 மாவட்டத்தில் புதிதாக 6718 புதிய நியாய விலைக் கடைகளைத் திறந்தன. 500க்கு அதிகமான மக்கட் தொகையுள்ள கிராமங்களில் ஒரு முழு நேரக் கடையும், மக்கட் தொகை 100க்கும் 500க்கும் இடைப்பட்ட கிராமங்களில்பகுதி நேரம் செயல்படும் கடையும் திறக்கப்பட்டன். செப்டம்பர் 1984 வரை கிராமப்புறங்களில் 11,159 நியாயவிலைக் கடைகளும், நகர்ப்புறத்தில் 1,492 நியாய விலைக்கடைகளும் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப் பட்டு வந்தன.



15.4.86 அன்று மதுரை பாண்டியன் சூப்பர் மார்க்கெட்டுக்குச் சென்று மாண்புமிகு முதல்வர் பார்வையிட்ட போது

15.8.1984 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1000 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலைக்கடை திறக்கப்படும் என்று அறிவித்தபடி ,கூட்டுறவுச் சங்கங்கள் 1000க்கு மேற்பட்ட குடும்ப அட்டை கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தி வந்த கடைகளை பிரித்து புதிதாக 1347 நியாயவிலைக் கடைகளைக் கிராமப்புறத்திலும் 1584 நியாய விலைக் கடைகளை நகர்ப்புறத்திலும் திறந்தன. தற்போது 15,672 நியாயவிலைக் கடைகள் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்பட்டு வருகின்டன.

தமிழ்நாட்டிலுள்ள 120 இலட்சம் குடும்ப அட்டைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் 91 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்கின்றன.

மாநிலத்தில் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் 15,672 நியாய விலைக் கடைகளில் 311 நியாய விலைக் கடைகள் தொழிலாளர்கள் நலனுக்காக அவர்களது தேவைக்கு மட்டும் செயல்பட்டு வருகின்றன.

கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் 2,986 மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் மாணவ சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டில் சென்னை நகரைத் தவிர மற்ற மாவட்டங்களில் 3032 சில்லறைக் கடைகள் மூலம் 36,775 பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் விநியோகம் செய்கின்றன.

சென்னை நகரில் மட்டும் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனமே பாடப்புத்தக விநியோகத்தைச் செய்து வருகிறது.

# அம்சம் : 18



# கிராமத் தொழில் (பட்டு வளர்ச்சி)

இருபது அம்சத்திட்டத்தில் 18 மற்றும் 7-வது அம்சங்களைப் பட்டு வளர்ச்சித் துறை அமலாக்கிக் கொண்டிருக்கிறது. 18-வது அம்சத்தின் கீழ், கீழ்க்கண்ட செயல்களை இத்துறை கொண்டுள்ளது:

முசுக்கொட்டை பரப்பளவை அதிகப்படுத்துதல்; நோயற்ற முட்டைத் தொகுதி உற்பத்தியை அதிகப்படுத்துதல்; நூற்புப்பட்டுக் கூடு உற்பத்தியை அதிகப்படுத்துதல்; கச்சாப்பட்டு உற்பத்தியை அதிகப்படுத்துதல்.

இருபது அம்சத் திட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காகவே உள்ள 7 (அ) மற்றும் மலைவாழ் மக்களின் நலனுக்காகவே உள்ள 7 (ஆ) அம்சத்தையும் இத்துறை அமலாக்கியுள்ளது. சாதனை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1-4-85 வரை 67,062 ஏக்கர் நிலப்பரப்பில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டிருந்தது. முசுக்கொட்டை விரிவாக்கப் பணியின் கீழ் 1985-86-ஆம் ஆண்டுக்கு 5,500 ஏக்கர் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 5,600 ஏக்கர் நிலப்பரப்பில் முசுக்கொட்டை பயிரிடப்பட்டுள்ளது. இது 112 விழுக்காடு ஆகும். மேலும் 1-4-86-ன் படி தொடர் நிலப்பரப்பு 72,662 ஏக்கர் ஆகும்.

1985-86-ஆம் ஆண்டில் 150 இலட்சம் நோயற்ற முட்டைத் தொகுதி உற்பத்தி இலக்கை அரசு நிர்ணயம் செய்ததில், 130 இலட்சம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

1985-86-ஆம் ஆண்டில் 100 இலட்சம் கிலோ நூற்புப் பட்டுக் கூடு உற்பத்தி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில், அந்த இலக்கு அடையப்பட்டது. அதில் 36.10 இலட்சம் கிலோ பட்டுக்கூடுகள் கச்சாப்பட்டு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டன.

1985-86-ஆம் ஆண்டுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட கச்சாப் பட்டு உற்பத்தி இலக்கு 2.75 இலட்சம் கிலோ. ஆனால் சாதனை 3.00 இலட்சம் கிலோ கச்சாப்பட்டு. இது 109 விழுக்காடு ஆகும்.

1985-86-ஆம் ஆண்டில் 1,100 ஏக்கர் நிலப்பரப்பில் 1,100 தாழ்த்தப்பட்ட குடும்பங்களை முசுக்கொட்டைச்செடி பயிரிடுதலுக்குக் கொண்டுவர அரசு இலக்கை நிர்ணயம் செய்துள்ளது. இவ்வாண்டில் சாதனை 989 ஏக்கர் நிலப்பரப்பில் 1140 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் ஈடுபட்டதாகும்.

1985-86-ல் 300 தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்குப் பட்டு வளர்ச்சி பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்களுக்கு உதவித் தொகை மற்றும் விஞ்ஞானக் கருவிகளுக்காக ரூ. 1.50 இலட்சம் செலவிடப்பட்டது. மேலும் 169 தாழ்த்தப்பட்ட விவசாயிகள் ரூ. 0.845 இலட்சம் செலவில் புழு வளர்ப்பு தளவாடங்கள் வாங்க உதவி புரியப்பட்டது. 168 தாழ்த்தப்பட்ட விவசாயிகள் ரூ. 1.26 இலட்சம் செலவில் புழு வளர்ப்பு மனை கட்ட உதவி புரியப்பட்டது.

1985-86-ஆம் ஆண்டில் 300 ஏக்கர் நிலப்பரப்பில் முசுக்கொட்டைச் செடி பயிரிடுவதற்கான இலக்கை அரசு நிர்ணயம் செய்துள்ளது. இதில் சாதனை 332 ஏக்கர் ஆகும். மலைவாழ் மக்கள் சாகுபடி இலக்கான 300 ஏக்கரில், 335 மலைவாழ் மக்கள் குடும்பங்கள் முசுக்கொட்டைச்செடி சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

300 மலைவாழ்குடும்பங்களுக்குப் பட்டு வளர்ப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டதுடன், புழு வளர்ப்புத் தளவாடங்கள் வாங்க மானியமும், புழு வளர்ப்பு மனை கட்ட மானியமும் வழங்கப்பட்டன.

## அம்சம்-19

# கடத்தல்-பதுக்கல் ஒழிப்போம்!

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு'

—வள்ளுவரின் இந்த இனிய குறளுக்கேற்ப செயல்பட்டுச் செம்மையுற்றிருப்பது தமிழக அரசு.

ஏழை எளிய மக்கள் இன்னலுறாமலும், அதே நேரத்தில் ஏற்றம் பெற்றிருப்போர் அதிக அளவில் இடர்ப்படாமலும் வரி விதித்து இனிதே இயங்கும் இன்றைய அரசுதான் அகில இந்திய அளவில் -குறிப்பாக வணிகவரித்துறையைப்பொறுத்து மகாராட்டிரத்திற்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளது.

1976-77ஆம் ஆண்டில் 55,683 வரி ஏய்ப்புக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 43.71 கோடி விற்பனை மறைப்புத்தொகை வெளிக்கொணரப்பட்டது. இதன் மூலம் அரசுக்கு ஒரு கோடியே 74 இலட்சம் ரூபாய் அதிக வரி கிடைத்தது. 1984-85ல் அதேபோல 96,746 வரி ஏய்ப்புக் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ. 245 கோடி விற்பனைத்தொகை மறைப்பு வெளிக்கொணரப்பட்டதன் மூலம் அரசுக்கு 21 கோடியே 57 இலட்சம் அதிக வரி கிடைக்க வழி செய்யப்பட்டது.

வரி ஏய்ப்புத் தொடர்பான இரகசியத் துப்பு அளிக்கிறவர்களுக்கு வணிக வரித்துறை பரிசளிக்கிறது. அது போன்றே வரிதவிர்ப்பு அல்லது ஏய்ப்பு ஆராய்ந்து கண்டுபிடித்து அரசுக்கு வரி வசூலித்துத் தரும் இத்துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் திறமைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

வரி ஏய்ப்பு, பதுக்கல் நடவடிக்கைகளிலே ஈடுபடுவோரைக் கண்டு பிடித்துத் தண்டிக்கிற-கண்டிக்கிற தமிழ்நாடு அரசு, கள்ளக் கடத்தலை ஒழிப்பதிலும் கண்ணாயிருக்கிறது.

ஒரு நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கும், விலையேற்றத்திற்கும் வித்திடக்கூடியதல்லவா கள்ளக் கடத்தல்?

நெல்மூட்டைகள் கடத்தல், சாமிசிலைகள் கடத்தல், சந்தனக் கட்டைகள் கடத்தல், வெளிநாட்டுப் பொருட்கள் கடத்தல் என்று அடிக்கடி செய்தித் தாள்களிலே இடம்பெறும் செய்திகளைப் படிக்கிற நாம் - அடுத்த சில நாட்களிலேயே அப்படிக் கடத்தப்பட்ட பல்வேறு வகைப் பொருட்களும் அதிகாரிகள் மூலம் மீட்கப்பட்ட செய்திகளையும் பார்க்கிறோம்; படிக்கிறோம். அந்த அளவுக்கு இந்தஅரசு கள்ளக் கடத்தலைக் கண்காணித்து வருகிறது. கடத்தலில் ஈடுபடுவோரிடம் விழிப்பாயிருந்து கடுமையான பல நடவடிக்கைகளை உடனுக்குடன் எடுத்து வருகிறது.

கடந்த ஜனவரி, பிப்ரவரியில் கடத்தப்பட்ட 12,415,735 கிலோ சந்தனக் கட்டைகளும், மார்ச், ஏப்ரல் மாதங்களில் கடத்தப்பட்ட சுமார் 6,839,950 கிலோ சந்தனக் கட்டைகளும் வனப் பாதுகாப்புப் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டன. கடத்தியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

இந்த இரண்டு கடத்தல்களின் போதும் பிடிபட்ட சந்தனக்கட்டைகளின் மதிப்பு 10 இலட்சத்து 76 ஆயிரத்து 936 ரூபாயாகும்.

கடந்த 6 மாத காலத்தில் மட்டும் வரி ஏய்ப்பு கடத்தல் கண்டுபிடிப்பு மூலம் அரசுக்கு ரொக்கமாகவும் பொருட்களாகவும் கிடைத்தது ரூ. 1 கோடியே 33 இலட்சமாகும்.

எனவே-வரி ஏய்ப்பு, கள்ளக்கடத்தல், பதுக்கல் போன்ற கொடிய குற்றங்கள் விரைவிலேயே இந்த நாட்டைவிட்டு அடியோடு நீக்கப்பட்டுவிடும் என்பது உறுதி.

## அம்சம்-20




**திறன் உபயோகிப்பு, உள்வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளல் ஆகியவற்றின் மூலமாக, அரசு அமைப்புகளின் இயக்கத்தை மேம்படுத்துதல்.**

அகில இந்திய அடிப்படையில் 37 போக்குவரத்துக் கழகங்களின் திறன் ஆய்வு செய்யப்பட்டன. தமிழகத்தைப் பொறுத்தவரையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் அதனுடைய திறனை ஒரு நாளுக்கு 21,952 பயணிகள் என்ற அளவில் வெற்றி பெற்றுள்ளது.

# மதுரை மாவட்டம்

மதுரை மாவட்டம், நக்கலா பட்டி கிராமத்திற்குச் சுமார் 0.80 கி.மீ. தெற்கே அசுவமாநதி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணையானது, மாதரை மற்றும் உசிலம்பட்டி கண்மாய்களுக்குப் பாசன நீர் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இத்திட்டத்தின் வேலைகளை 1985-ல் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு முடிக்கப்பட்டது. இந்த அணை கட்டி முடிக்கப்பட்டதால் சுமார் 84.35 டன்கள் உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி கிடைக்குமெனக் கணக்கிடப் பட்டுள்ளது.

கொங்கம்பட்டி கிராமத்திற்கு மேற்கே சுமார் 1 கி.மீ.தூரத்தில் வேலைத்தளம் அமைந்துள்ளது. கொங்கம்பட்டி கிராமமானது மேலூர் திருப்பத்தூர் நெடுஞ்சாலைக்கு வடக்கே சுமார் 2. கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. மேற்கூறப்பட்ட வேலை முடிக்கப்பட்டதால் சுமார் 64.30 டன்கள் உணவுப் பொருட்கள் அதிகமாக உற்பத்தி கிடைக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

உசிலம்பட்டி வட்டத்தில், சிறுபட்டி கிராமத்திற்கு வடக்கே சுமார் 1.60 கி.மீ. தூரத்தில் சிறுபட்டி கண்மாய் அமைந்துள்ளது. இந்தக் கண்மாய் வேலை முடிக்கப்பட்டதனால் சுமார் 90.72 டன்கள் உணவுப் பொருள்கள் அதிகமாக உற்பத்தி ஆகுமெனக் கணக்கிடப் பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் பயறு வகைப் பயிர்கள் 40,000 எக்டேர் பரப்பளவில் பயிர் செய்யப்பட்டு 15,000 மெ.டன் பயறு உற்பத்தியாகிறது. ஒரு எக்டேரில் கிடைக்கும் சராசரி மகசூல் 350 கிலோ ஆகும். பயறு உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாநில, மத்திய அரசுகள் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, 20 அம்சத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 31.3.86 முடிய ரூ. 176.64 இலட்சம் மானிய குறியீட்டுக்கு எதிராக 176.17 இலட்சம் மானியம் செலவிட்டு வங்கியிலிருந்து ரூ.302.08 இலட்சம் கடன் பெறப்பட்டுள்ளது. இது ஆண்டு குறியீட்டில் 100.% ஆகும். இவ்வாண்டில் 11,311 குடும்பக் குறியீட்டிற்கு எதிராக 13,432 குடும்பங்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. இச்சாதனை குறியீட்டில் 118.8 சதவீதமாகும்.

1985-86ஆம் ஆண்டில் குறைந்தது 6430 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கிற்கு எதிராக 6,811 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு ரூ. 64.77 இலட்சம் மானியம் வழியோகிக்கப்பட்டு ரூ. 129.72 இலட்சம் கடன் வங்கியிலிருந்து பெறப்பட்டுள்ளது. இது குறியீட்டிற்கு 106 சதவீதம் சாதனையாகும். இந்த ஆண்டில் மதுரை மாவட்டத்தில் 56 மலைவாழ் பழங்குடியினருக்கு (அவர்களின் குடும்பங்களுக்கு) மானியம் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட 56 பழங்குடியினர் குடும்பங்களுக்கு ரூ. 0.90 இலட்சம் மானியம் விநியோகிக்கப்பட்டு ரூ. 1.89 இலட்



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்,



சம் கடன் வங்கியிலிருந்து பெறப் பட்டுள்ளது. இது குறியீட்டிற்கு 101 சதவீத சாதனையாகும்.

இந்த ஆண்டில் 4562 பெண்களுக்கு மானியம் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அதற்கு எதிராக 4,610 பெண்களுக்கு ரூ. 53.52 இலட்சம் மானியம் விநியோகிக்கப்பட்டு ரூ.107.52 இலட்சம் கடன் வங்கியிலிருந்து பெறப் பட்டுள்ளது. இது குறியீட்டிற்கு 101 சதவீத சாதனையாகும்,

ஊரக இளைஞர் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி 18 வயது முதல் 25 வயதுள்ள கிராமப்புற ஆண்-பெண் இரு பாலர்களுக்கும் வழங்கப்படுகிறது. பயிற்சி நடைபெறும் 6 மாதக் காலத்திற்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சியினை வெற்றிகரமாக முடித்த நபர்களுக்குத் தலா ரூ.500 மதிப்புள்ளகைக் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

சிறு விவசாயிகள் மற்றும் குறு விவசாயிகளுக்கான வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ் சிறு பாசனத்திற்கும், நிலச் சீர்திருத்தத்திற்கும் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மானியத் தொகையாக ரூ. 4.50 இலட்சம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகின்றது.

ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், 1985-86ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்திற்கு மட்டும் 7 வேலைக்கு இதுவரை 18.96 இலட்சம் செலவினமும், 106,138 மெ.டன் அரிசியும் 65,000 மெ. டன் கோதுமையும் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் 1.05 இலட்சம் மனித சக்தி நாட்கள் பெறப் பட்டுள்ளன. அனைத்து வேலைகள் முடிந்துள்ளது. இத்திட்டம் நெடுஞ்சாலைக் கிராமப்பணி மற்றும் கிராமச் சாலை துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாசனக் கால்வாய்கள் புனரமைப்பு மற்றும் பாசன ஏரிகள் சீர்திருத்தத் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் 18 வேலைகள 1985-86ஆம் ஆண்டு 224.26 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 161.27 இலட்சம் செலவினமாகவும், 799.868 மெ.டன் அரிசியும் 32.375 மெ.டன் கோதுமையும் கூலியாக வழங்கப்பட்டுள்ளது. இதில் 14 வேலைகள் முடிவு பெறப்பட்டுள்ளன. மீதி வேலைகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணியில் 7.98 இலட்சம் மனி சக்தி நாட்கள் பெறப்பட்டுள்ளன. இது பொதுப் பணித்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் 24 வேலைகள் 1985-86ஆம்ஆண்டில்தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், மண் அரிப்பு தடுக்கப்படுவதோடு நிலத்தடி நீர்வளம் பெருகி விவசாய உற்பத்தியும் பெருகும். வேளாண்மைப் பொறியியல் துறையினர் இதுவரை வேலைகள் மேற்கொண்டுள்ளார்கள். ரூ30.38இலட்சம் செலவினமாகவும், 99.178 மெ.டன் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஏழை எளிய ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ.6000 செலவினம் செய்யப்படுகிறது. மலைப்பகுதியாயின் ரூ. 9000 செலவாகிறது. இது முழுமையாக இலவசமாகக் கட்டித் தரப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி—ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1985-86ஆம் ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வேலைகள் எடுத்துச் செய்ய ரூ. 13.75 லட்சம் வீதம் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. இத்திட்டத்தினால் 1985-86ஆம் ஆண்டில் 1904 வேலைகள் எடுக்கப்பட்டு 1888 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு நிதி ஒதுக்கீடு ரூ. 222.68 இலட்சங்களாகும். 31.3.1986 முடிய ரூ.233.71இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 19.16 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 1985-86ஆம் ஆண்டில் 22.14 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் 2.98 இலட்சம் கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதி ஆண்டு 1985-86ல் மத்தியப் பிரதேசம் சாத்னா மாவட்டத்தில் கொத்தடிமைகளாக வாழ்ந்து வந்த 34 நபர்களைக் கொத்தடிமைத் தளையில் இருந்து நீக்கி அவர்களில் 16 நபர்களை, பிரிக்கப்பட்ட அண்ணா மாவட்டத்திலும், மீதமுள்ள 18 நபர்களை மதுரை மாவட்டத்தில் உள்ள பெரியகுளம் வட்டத்தில் 14 நபர்களையும், மேலூர் வட்டத்தில் 4 நபர்களையும் குடி அமர்த்தப்பட்டது. அவர்களின் அனைத்துக் குடும்பங்களுக்கும் இலவச வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி கொத்தடிமைத் தளையிலிருந்துநீக்கப்பட்டவர்களுக்குக் குடும்பம் ஒன்றுக்கு ரூ. 4000 வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்குப் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையர்கள் மூலம் ஆடுகள் வளர்க்கும் திட்டம் மற்றும் உழவு மாடுகள் வாங்குவதற்கு நடவடிக்கையில் உள்ளது. இந்த இனத்தில் குறியீட்டு அளவுக்கு மேலாக 106 சதவீதம் சாதனை அளவு எட்டிப் பிடிக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டடி மனை வழங்கும் திட்டத்தின் கீழ் சென்ற நிதி அண்டு 1985-86ல் அரசு நிர்ணயித்த குறியீட்டு அளவு 1300 பட்டாக்கள் ஆகும். சென்ற நிதியாண்டில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டடி நிலம் கையகப்படுத்தும் திட்டத்தின் கீழ் பட்டா நிலங்கள் கையகப் படுத்தப்பட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள 1348 ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே இந்த இனத்திலும் மதுரை மாவட்டத்திற்கு இடப்பட்ட குறியீட்டு அளவுக்குமேல் சாதனை அளவு எட்டிப் பிடிக்கப்பட்டுள்ளது.

1985-86ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்டத்திற்கு கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட 2313 குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. குறியீடு முழுமையாக 1985-86ஆம் நிதியாண்டில் எய்தப்பெற்றுள்ளது.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :




நில உடைமையில் வேளாண்மைக்குரிய அமைப்பையும், பெரு நிலக்கிழார் மற்றும் குடிவாரதார் உறவு முறைகளை மாற்றியமைத்து நேரடியாக ஊரக ஏழமை நிலையிலுள்ள நிலமற்ற மக்களுக்குச் சமூக பொருளாதார நீதி வழங்குவதே நிலச் சீர்திருத்தத்தின் தலையாய குறிக்கோளாகும். அதன் அடிப்படையில் பெரு நிலக்கிழார்களிடமிருந்து உபரியாகக் கையகப்படுத்தப்பட்ட 92 ஏக்கர் நிலங்களை, 111 நிலமற்றோருக்குக் கன்னியாகுமரி மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டில் ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 9 வட்டாரங்களிலும் உள்ள 81 வருவாய்க் கிராமங்களுக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்-வறுமை ஒழிப்புத் திட்டம் அமல்படுத்தப்படுகிறது. விவசாயக் கூலிகள், விவசாயம் அல்லாத கூலிகள், சேவை மற்றும் வியாபாரம் செய்பவர்கள், ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினரும் பயன் பெற்று வருகின்றனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் மானியம் அதிகபட்சமாக ரூ. 3000 வரையும், பழங்குடியினருக்கு அதிகபட்சமாக மானியம் ரூ.5000 வரையும் வழங்கப்படுகிறது.

சிறு விவசாயிகளுக்குக் கடனில் 25% மானியமும், ஏனையோர்களுக்கு 33 1/3 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கறவைமாடு நீங்கலாக ஏனைய இனங்களுக்கு 33 1/3% மானியமும், கறவைமாட்டிற்குச் சிறப்புத் திட்டத்தின்கீழ் 16 2/3%. கூடுதல் மானியத்துடன் மொத்தம் 50%. மானியமும், பழங்குடியினருக்கு 50 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. கடன் தொகையை அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், விவசாயப் கூட்டுறவுச் சங்கங்களும் வழங்குகின்றன.

1985-86ஆம் ஆண்டில் 4215 குடும்பங்களுக்கு அரசு இலக்கு நிர்ணயித்திருந்தது. ரூ. 72.05 இலட்சம் அனுமதி அளித்திருந்தது. 5008 குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன. இதில் 1980-81 மற்றும் 1981-82ஆம் ஆண்டில் பயன்பெற்றும், வறுமைநிலை நீங்கப்பெறாத 1809 குடும்பங்கள் இரண்டாவது முறையாகப் பயன் பெற்றவர்களும் அடங்குவர். மொத்தம் 62.80 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 1985-86ஆம் ஆண்டு 500 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மொத்தம் 695 வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1985-86ஆம் ஆண்டு ரூ. 127.30 லட்சம் ஒதுக்கீடு செய்ததில் ரூ. 127.17 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

நிலமற்ற ஏழையின் வேலைக்கு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டு முடிய 31 கிராமச்சாலைகள் செப்பனிடப்பட்டு முடிவடைந்துள்ளன. கூட்டு வீடுகள் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டு ஆதிதிராவிடர்களுக்கு 550 வீடுகளும், மலைவாழ் மக்களுக்கு 174 வீடுகளும் கட்டிக்கொடுக்கப்பட்டன. மேலும் இத்திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டு 110 கழிப்பிடங்கள் கட்டிக் கொடுக்கும் ஏற்பாடுகள் செயல்பட்டு வருகின்றன. சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 5,44,000 இளஞ்செடிகள் வளர்க்கப்பட்டு அவைகளைத் தற்பொழுது நடுவதற்குரிய ஏற்பாடுகள் அனைத்தும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் 1986-87ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ.38.80 லட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 34.41 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமிய செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் 1984 மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இத்திட்டமானது 1984-மார்ச் முதல் 1985 பிப்ரவரி முடிய ஒரு சுற்று (ஒரு கட்டம்) முடிந்துள்ளது. முதல் சுற்றில் அகஸ்தீஸ்வரம், இராசாக்கமங்கலம், குருந்தங்கோடு, கிள்ளியூர் ஆகிய நான்கு ஒன்றியங்களில் தலா 75 மையங்கள் வீதம் 300 மையங்கள் நடைபெற்றன. இதிலும் குறிப்பாக ஆரம்பிக்கப்பட்ட மையங்கள் அனைத்தும் பெண்கள் மையங்களே. இதில் 182 மையங்களில் முக்கியமாக ஆதிதிராவிடர்கள் அதிகம் பயனடைந்தார்கள்.

முதல் கட்டத்தில் நான்கு ஒன்றியங்களிலுமாக 10,198 பெண்கள் பயனடைந்தார்கள். இதில், 5,472பேர் ஆதிதிராவிடர்களாவர்.

இரண்டாம் கட்டம் 1985-86ல் ஏப்ரல் 85ல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் முஞ்சிறை, கிள்ளியூர், குருந்தங்கோடு, இராசாக்கமங்கலம், அகஸ்தீஸ்வரம் ஆகிய

# தமிழ்நாட்டில் சீரிய விவசாயப் பணி

தமிழகத்தில் புதுக்கோட்டை அருகே குடுமியான் மலையில் உள்ள விவசாயப் பண்ணையை உலக வங்கியின் புதுடெல்லி பிரிவு வேளாண்மை ஆலோசகர் டாக்டர் ஏ. எஸ். இராமாராவ் பார்வையிட்டார். தமிழக அரசு வேளாண்மைப் பயிற்சித் திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருவதற்குப் பாராட்டுத் தெரிவித்தார். வேளாண்மைத் துறையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள நவீன முறைகள், இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தி, சீரிய முறையில் விவசாயம் நடப்பதாகத் தெரிவித்த அவர், குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள கிராம சேவகிகள் நல்ல முறையில் பயிற்சி பெற்றுள்ளதாகவும், மற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் முறையில் திட்டங்கள் நடந்து வருவது மகிழ்ச்சி தருவதாகவும் தெரிவித்தார்.

5 ஊராட்சி ஒன்றியங்களில் தலா 60 வயது வந்தோர் கல்வி மையங்கள் வீதம் 300 மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதில், 9,140 கற்போர்கள் சேர்ந்து பயனடைந்தார்கள். இதில் 3342 பேர்கள் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள்.

மூன்றாம் கட்டமாக மையங்கள் 1.4.86 முதல் ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் ஆரம்பிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இதிலும் 9,000 கற்போர்கள் சேர்க்கப்பட்டுப் பயின்று வருகிறார்கள். இதில் 2667 ஆதிதிராவிடர்களாவர். மலைச்சாதியினர் 27 பேர் ஆகும்.

இதுவரை நடைபெற்ற இரண்டு கட்டங்களிலும், இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூன்றாம் கட்டம் ஆகிய வற்றிலுமாகச் சேர்த்து மொத்தம் 28,328 கற்போர்கள் பயனடைந்து உள்ளனர். இதில் 11,481 பேர்கள் ஆதிதிராவிட இனத்தைச் சார்ந்தவர்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நஞ்சை தரிசிலும், மரச்சீனியுடனும், வாழையுடனும் ஊடுபயிராகப் பயறுவகைகள் சாகுபடி செய்யப்படுகின்றது. புதிய 20 அம்சத்திட்டத்தில 1985-86ஆம் ஆண்டில் 6000 எக்டேர் பரப்பில் பயறுவகைகள் சாகுபடி செய்யக் குறியீடு வழங்கப்பட்டது. சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளைப் பயறு வகை உற்பத்தியில் ஊக்குவித்து அதிக உற்பத்தி செய்வதற்காக 6,997 சிறு தழைகள் இலவசமாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு சிறுதழைப் பொட்டலத்திலும் 4 கிலோ விதை, ஒரு நுண்ணுயிர்ப் பொட்டலம், ஒரு சாகுபடிக் குறிப்பு அடங்கியிருக்கும்.

ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்ட மையங்களில் தயாரிக்கப்பட்ட பொருள்கள்



இவ்வாறு சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளை ஊக்குவிப்பதனாலும், உரிய காலத்தில் தேவையான விதைகள் மற்றும் பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டதனால் சென்ற ஆண்டு பயறு உற்பத்திக்கு ஒதுக்கப்பட்ட குறியீடான 1200 மெ.டன்னுக்கு 1190 மெ.டன் உற்பத்தி செய்ய முடிந்தது.

ஆதிதிராவிட மற்றும் மலை சாதி மக்களின் குழந்தைகள் கல்வியில் ஆக்கமும், ஊக்கமும் பெற்றிட சிறப்பு மேற்பார்வைத் திட்டம் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் 11 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்காக 11 அரசு மேல் நிலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டது.

''சிறுதுளி பெருவெள்ளம்'' என்ற பழமொழிக்கேற்ப சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க இம் மாவட்டக் கல்வித் துறைக்கென அரசினரால் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 15 இலட்சத்தை இலக்காகக் கொண்டு பணிபுரிந்ததில் ரூபாய் பதின்மூன்று இலட்சத்துப் பதினைந்தாயிரத்து எழுபத்திரண்டு அடையப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1986-87ல் பாலூர், பத்தரை, உடையடி ஆகிய இடங்களில், ஆதிதிராவிடர்களுக்கு மொத்தம் 36 வீடுகள் கட்டிக் கொடுக்க ரூ. 2,16,000 அனுமதிக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறத் திட்டத்தின் கீழ் சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த 162 நபர்களுக்கு ரூ. 3,36,536 வழங்கப்பட்டுள்ளது.

தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தில் அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்தில் இலுப்பையாடி கிராமத்தில் நூல் நூற்கும் தொழில் 15 ஆதிதிராவிடர்களுக்கும், கற்காடு கிராமத்தில் 15 ஆதிதிராவிடர்களுக்குப் பயிற்சியுடன் நிரந்தர வேலைவாய்ப்பும் வழங்க ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்குப் பயிற்சியுடன் வேலை வாய்ப்பு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆறு காணி கிராமத்தில் 40 மலை சாதிப் பெண்களுக்கு இவ்வாண்டில் தையல் பயிற்சி நடைபெற உள்ளது.

# தென்ஆர்க்காடு மாவட்டம்

புதிய இருபது அம்சத் திட்டத்தில் முதலாவது அம்சம் பாசன வசதியை அதிகரித்தலாகும். இந்தியாவின் முக்கியத் தொழிலாக விளங்குகிற விவசாயம்தான் தென்னார்க்காடு மாவட்டத்தின் முக்கிய தொழிலாகும். எனவே, பாசன வசதியைப் பெருக்குவது எல்லா வகையிலும் மாவட்டத்தை முன்னேற்றுகிற பணியாகும்.

நடப்பாண்டில் 4,900 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதியைப்புதிதாக அளிக்கவேண்டும் என்பது இலக்கு ஆகும். இதில் இவ்வாண்டு ஆகஸ்டு திங்கள் முடிய 2,664.2 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளது. இது இலக்கில் 54 விழுக்காடு சாதனையாகும்.

இரண்டாவது அம்சமான பருப்பு எண்ணெய் வித்துக்கள் இம்மாவட்டத்தில் 9 டன் விதைகளும் 24.8 டன் எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

கிராமங்கள் பெரிதும் நிறைந்த தென்னார்க்காடு மாவட்டத்தில் மூன்றாவது அம்சமான ஒருங்கிணைந்த கிராமவளர்ச்சி மற்றும் தேசீய கிராம வேலைவாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்துவது, விரிவுபடுத்துவது ஆகிய பணிகள் சிறப்பாக நடந்து வருகின்றன. இவ்வாண்டு ஆகஸ்டுத் திங்கள் வரை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 7,196 குடும்பங்கள் பயனடைய எடுத்துக் கொண்டதில் இதுவரை 1,659 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. தேசீய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் 2,52,000 மனித வேலை நாட்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான திட்டங்களை வேகப்படுத்துதல் இத்திட்டத்தின் ஏழாவது அம்சமாகும். தென்னார்க்காடு மாவட்டத்தில் நடப்பாண்டில் 9,555 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவியளிக்க வேண்டுமென்பது இலக்கு ஆகும். இதுவரை 1,610 ஆதிதிராவிடர் குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ஆதிதிராவிடர் நலம் பேணுகின்ற இத்திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நடப்பாண்டில் 179 நபர்களுக்கு ஆடுகள் வாங்கி வழங்கப்பட்டு ரூ. 3,74,086.15 செலவிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இலக்கு 400 ஆடு அலகுகள் ஆகும். நடப்பாண்டில் இதுபோக மீதமுள்ள 221 இந்து ஆதிதிராவிட அங்கத்தினர்களுக்கு 50 சதவீத மானியத்தில் ஆடுகள் வாங்கி வழங்கப்படவுள்ளது.

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கல்வராயன் மலைப் பகுதியில் 1985-86-ல் 18 இணை கறவை மாடுகளும், 50 வீடு அலகுகளும் 150 இணை வேலை எருதுகளும் ஆக மொத்தம் 228 மலைவாழ் மக்களுக்கு ரூ. 4,22,066.25 செலவில் வழங்கப்பட்டன.

குடிநீர்த் தட்டுப்பாடுள்ள கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட





குடிநீர் வழங்குகின்ற எட்டாவது அம்சத்தின் கீழ் இம்மாவட்டத்தில் இதுவரை 15 கிராமங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

ஒன்பதாவது அம்சமான வீட்டு வசதியைப்பெருக்குகின்றதிட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கான இலக்கு 10,000 ஆகும். இதுவரை இத்திட்டத்தின் கீழ் 6,607 வீடுகள் நலிந்தோர்க்கு வழங்கப்பட்டுள்ளன. இலக்கில் இது 66 விழுக்காடு சாதனை ஆகும். இம்மாவட்டத்தில் கூட்டுறவு வீட்டு வசதித்துறை மூலம் 1985-86-ல் 626 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

கிராமங்களுக்கு மின்சார வசதி அளித்தல் என்ற 11வது அம்சத்தின் கீழ் தென்னார்க்காடு மின் திட்டம் தெற்குப் பிரிவில் 1985-86-ல் மொத்தம் 28,394 புதிய மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன. 1986-87-ல் 84 விவசாய நீரேற்று இயந்திரங்களுக்கும் 1,244 குடிசைகளுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது. மேலும் தென்னார்க்காடு மின் திட்டம் தெற்குப் பிரிவில் அனைத்துக் கிராமங்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

காடு வளர்ப்பு மற்றும் மாற்று எரிசக்தியைப் பெருக்குகின்ற 12-வது அம்சத்தின் கீழ் இம்மாவட்டத்தில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 83,32,000 மரங்கள் நடவேண்டுமென்பது இம்மாவட்டத்திற்கான இலக்கு ஆகும். இதுவரை 34,72,000 மரங்கள் நடப்பட்டுள்ளன. இதுவரை 202 சாண எரிவாயு கலங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

புதிய 20 அம்சத் திட்டத்தில் 13வது அம்சமாக விளங்குவது குடும்பநலத் திட்டமாகும். நடப்பாண்டில் குடும்பநல அறுவைச் சிகிச்சைக்கான இலக்கு 48,252 ஆகும். லூப் பொருத்துவதற்கான இலக்கு 17,000 ஆகும். இதுவரை 9,346 பேருக்கு அறுவைச் சிகிச்சையும், 5,342 பேருக்கு லூப் பொருத்துகின்ற சிகிச்சையும் அளிக்கப்பட்டுள்ளன.

வயது 6-லிருந்து 14 வரையிலுள்ள குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியை அளித்தலும், வயது வந்தோரிடையே எழுத்தறிவின்மையை அகற்றுவதும் புதிய 20 அம்சத் திட்டத்தின் சிறப்புக்குரிய 16வது அம்சமாக விளங்குகிறது. இந்த அம்சத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கான இலக்கு 6 வயதிலிருந்து 14 வயது வரையுள்ள 19,100 குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி அளிக்க வேண்டும் என்பதாகும். இதில் இம்மாவட்டம் இலக்கினை மிஞ்சி சாதனை நிகழத்தியுள்ளது. நடப்பாண்டில் இதுவரை 20,000 குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வி வசதி அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 69,900 நபர்களுக்கு முதியோர் கல்வி அளிக்கப்படல் வேண்டுமென்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 63,647 பேருக்கு முதியோர் கல்வி அளிக்கப்பட்டுள்ளது. இது இலக்கில் 91 விழுக்காடு சாதனை ஆகும்.

சிறு தொழில் வளர்ச்சியை வேகப்படுத்துகிற 18வது அம்சத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கான இலக்கு மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் 300 சிறு தொழில்களை ஏற்படுத்துவது ஆகும். இது வரை 131 சிறு தொழில்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இலக்கில் இது 44 விழுக்காடு சாதனை ஆகும்.

வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் விவசாயத்தையே சார்ந்திருக்கின்ற தென்னார்க்காடு மாவட்டம் புதிய இருபது அம்சத் திட்டப் பணிகளை வேகமாக நிறைவேற்றுவதன் மூலம் எல்லாத் துறைகளிலும் முன்னேறிய மாவட்டமாகத் திகழுகின்ற வகையில் வளர்ந்து வருகின்றது.

## தமிழ்நாடு அரசின் முயற்சியால் சர்க்கரை உற்பத்தி உயர்வு
## பிரதமர் பாராட்டு

தமிழ்நாடு சர்க்கரைக் கழகமும் தமிழக அரசும் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வெளி நாடுகளிலிருந்து ரூ. 30 கோடி அளவுக்கு சர்க்கரை இறக்குமதி செய்வது தவிர்க்கப்பட்டு அந்நியச் செலாவணி மிச்சப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக மாண்புமிகு பிரதமர் திரு இராஜீவ்காந்தி அவர்கள் தமிழக அரசுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

இருபது அம்சத் திட்டத்தின் முதல் அம்சம் பாசன வசதியை அதிகரித்தல் ஆகும்.

மழையை நம்பி இருக்கும் விளை நிலங்களுக்குத் தண்ணீரைச் சேமிக்கும யுக்தி மூலம் பாசன வசதியை ஏற்படுததுவதற்கு இம்மாவட்டததில் மானூர் ஒன்றியத்தில் அழகிய பாண்டியபுரம், கட்டாரங்குளம் ஆகிய இரு கிராமங்களிலும் மேல நல்நல்லூர் ஒன்றியத்தில் மேல நீலித நல்லூர், தேவர்குளம் ஆகிய இரு கிராமங்களிலும் சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு ஆணை எண்.1423, வேளாண்மை (ஏ.எஸ்.சி) துறை, நாள் 9.8.85 மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி மழை நீர் ஓட்டத்தினைத் தடுத்து வேகத்தினைக் குறைத்து நீர் நிலத்தில் உப்புச் சம உயர் வரப்புகள் அமைத்தல், பண்ணைக் குட்டைகள் கட்டுதல், சம உயர அகழிகள் கட்டுதல், கசிவு நீர்க் குட்டைகள் அமைத்தல், மண் அரிப்பினைத் தடுக்க தடுப்பு அணைகள் கட்டுதல், நிலத்தைச் சமப்படுத்தி விளை நிலங்களாக்குதல் ஆகிய பணிகள் செய்யப்பட்டுவருகிறது.

இத்திட்டத்தின் மூலம் வீணாகச் செல்லும் 566 மி.ம. மழை நீரில் சுமார் 466 மி.மீ. மழை நீர் சேமிக்கப்பட்டு, பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. 1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 6,61,812 செலவு செய்யப்பட்டுள்ளது. 1986-87ஆம் ஆண்டில் 15.70 இலட்சம் ரூபாய் செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1985-86ஆம் ஆண்டில் 186.67 எக்டேர் நிலம் பாசன வசதி பெற்றுள்ளது. 1986-87ல் 60 எக்டேர் நிலம் பாசன வசதி செய்யப்படும். இத்திட்டம் பூர்த்தியானால் இந்நிலத்தின் வருவாய் இரண்டு மடங்காக உயரும். இத்திட்டம் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### பருப்புவகை உற்பத்தியும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியும்

இரண்டாவது அம்சமான பருப்பு வகை உற்பத்தி மற்றும் எண்ணெய் வித்து உற்பத்தியில் பத்தி செய்யப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்களை நிலககடலை 17,430 எக்டேரிலும், எள் 9,736 எக்டேரிலும், சூரியகாந்தி 23,322 எக்டேரிலும், பயிரிடப்பட்டது. உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் உயர் ரக எண்ணெய் வித்துக்கள், ஜிப்சம், புதிய வேளாண் கருவிகள் உரமிடுதல் ஆகியவைகள் மான்யம் மூலம் வழங்கப்பட்டு, குறியீட்டு உற்பத்தியான 42,425 டன்னை விட கூடுதலாக 42,470 டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். எண்ணெய் வித்துத்துறை மூலம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ரூ.7,21,426 மானியமாக வழங்கப் பட்டுள்ளது.



## திருநெல்வேலி மாவட்டம்

நிர்ணயிக்கப்பட்ட இலக்கைப் பூர்த்தி செய்ய, கீழ்க்கண்ட முயற்சிகள் இம்மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றியும் அதிக மகசூல் தரும் வித்துக்கள் வழங்கியும் மானாவாரியில் புதிய சாகுபடி முறையைப் புகுத்தியும் புதிய வேளாண் கருவிகள் வழங்கியும் 20,500 டன் இலக்கு நிர்ணயித்ததற்கு 32,405 டன் பருப்பு வகைகள் 1985-86ல் உற்

### உபரி நிலங்கள் விநியோகித்தல்

நிலமற்ற ஏழைகளின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மலர, உபரி நிலங்களை ஆர்ஜிதம் செய்து விநியோகிப்பது இதன் நோக்கமாகும். 1985-86ஆம் ஆண்டில் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 555 ஏக்கர் ஆகும். இதில் 557 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, 344 விவசாய நிலமற்றோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒரு மாஜி இராணுவத்தினரும், 127 தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் அடங்குவர்.

### வீட்டுமனை வழங்குதலும், வீடு கட்ட உதவுதலும்

இத்திட்டத்தின் ஒன்பதாவது அம்சம் வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை வழங்குவதும், அதில் வீடு கட்டப் பொருளுதவி செய்வதும் ஆகும். இம்மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டில் 12,800 இலக்கு நிர்ணயிக்கப்பட்டதற்கு 13,216 நபருக்கு வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளது. வீடு கட்டும் பணிக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 650 பேருக்கும், தமிழ் நாடு அரிசன வீட்டு வசதிக்கழகம்



சுந்தர பாண்டியபுரம் கிராமப்புற வீட்டு வசதி.



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மூலம் பெற்ற கலப்பின எருமையுடன் பனஞ்சாடி திரு. கணபதி.

மூலம் 50 நபருக்கும் தேசிய கிராம வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டம், நெசவுத் தொழிலாளர்கள் வீடு கட்டும் திட்டம் ஆகியவைகள் கீழ் 1319 வீடுகளும் ஆக மொத்தம் 2019 வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன. இம் மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 2015 ஆகும். இலக்கை விஞ்சிய சாதனை ஆகும். இத்திட்டத்திற்குக் கடனாகவும், மானியமாகவும் ரூ. 111.39 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**மரக்கன்றுகள் நடுதல் காடுகள் வளர்த்தல்**

மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி வனப்பகுதியாக இருப்பது சிறந்தது என்பது வனக்கொள்கையாகும். ஆனால், நமது நாட்டில் வனத்தின் அளவு மிகக் குறைவான பகுதியே ஆதலாலும், எரிபொருள் தேவைக்காக மரங்களை அதிக அளவில் உபயோகிப்பதனாலும் இதனால் வன அழிவு ஏற்படுவதைத் தடுக்கவும் வன அழிவினால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்பட்டு, மழைக்குறைவு ஏற்படுவதைத் தடுக்கவும் மரம் நடும் திட்டம் 12-வது அம்சமாக எடுக்கப்பட்டு தீவிரமாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் சமூகக் காடுகள வளர்த்தலிலும், வனப்பகுதி விரிவாக்கம் செய்தலிலும் மரம் நடுவதில் மக்கள் ஈடுபாடு கொள்ளச் செய்வதிலும் தீவிரமாகச் செயலாற்றப் பட்டது. 1985-86ல் இம்மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 10,78,000 மரக்கன்றுகள் நடுதல் ஆகும். ஆனால் 15,17,400 கன்றுகள் நடப்பட்டு சாதனை புரியப்பட்டுள்ளது. 2531 எக்டேரில் காடுகள் புதிதாக வளர்க்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ரூ. 70.43 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

**துணைச் சுகாதார மையங்கள் ஏற்படுத்துதல்**

மக்கள் நல்வாழ்வுக்கு அடிப்படை சுகாதார வசதிகளைக் கிராம அளவில் வழங்கவும், நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் 5000 ஜனத்தொகைக்கு ஒரு துணைச் சுகாதார மையம் நிறுவ இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் 1985-86ல் 78 துணைச் சுகாதார மையங்கள் நிறுவ குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அதனைப் பூர்த்தியும் செய்தாகிவிட்டது. இம்மையங்களில் பெண் சுகாதாரப் பணியாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு பேறுகால உதவி, கர்ப்பிணிகளுக்கும், குழந்தைகளுக்கும் நோய்த் தடுப்பூசி-குடும்ப நல முறைகள் எடுத்துக்கூறல், சாதாரண நோய்களுக்கு மருந்து கொடுத்தல் ஆகிய பணிகள் செவ்வனே நடந்து வருகின்றன.

**சிறு தொழில்கள் ஏற்படுத்துதல்**

மாவட்டத் தொழில் மையம் மூலம் 1985-86ஆம் ஆண்டில் 566 சிறு தொழில்கள் ஆரம்பிக்க நிதி உதவி, மானியம், தொழில் நுட்ப உதவி ஆகியவைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 400 ஆகும். இம் மாவட்டத்தைச் சேர்ந்த இராதாபுரம், விளாத்திகுளம், நான்குனேரி, ஆகிய தாலுகாக்கள் தொழிலில் பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டு, இங்கு தொழில் தொடங்க முனைவோருக்கு நிலம், கட்டிடம், இயந்திரம் ஆகிய முதலீடுகளில் 15 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. ஆறேகால் சதவிகித வட்டியில் கடன் வழங்குகிறது. தொழில் துவங்கியபின் முதலாண்டு மின் கட்டணத்திற்கு 30 சதவிகிதத்தையும், இரண்டாம் ஆண்டுக்கு 20 சதவிகிதம், மூன்றாம் ஆண்டு செலவில் 10 சதவிகிதம் மானியமாகக் கொடுத்தும் ஊக்குவிக்கப்படுகிறது. சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 449 பேருக்கு ரூ. 69.81 இலட்சம் கடனாக வங்கியிலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. விற்பனை வரி கடனாக மூன்று நிறுவனங்களுக்கு ரூ.158 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. நடைமுறை மூலதலன்க் கடனாக 97 நிறுவனங்களுக்கு ரூ. 16.04 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மேலும் பல நபர்கள் தொழில் துவங்க உதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மானியத் திட்டம் மூலம் பயன் பெற்ற முக்கூடல் மாணிக்கம் ஆசாரி.





# தருமபுரி மாவட்டம்



**சே**லம் மாவட்டத்தோடு இணைந்திருந்த தருமபுரி 1965ல் தனி மாவட்டமாகப் பிரிக்கப்பட்டு 21 ஆண்டுகள் ஆகியுள்ளன. மிகவும் பின் தங்கிய தருமபுரி மாவட்டம் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் அரவணைப்பினால் பல்வேறு துறைகளில் உரிய வளர்ச்சியினைப் பெற்று வருகிறது.

வளரும் தருமபுரி புதிய 20 அம்சத்திட்டத்தின் கீழ், பல்வேறு சாதனைகளைப் புரிந்துள்ளது. குறிப்பாக 1985-'86ஆம் நிதியாண்டில் குறியீட்டையும் தாண்டிச் சாதனைச் சரித்திரம் படைத்துள்ளது.

### பாசன வசதிகளை அதிகரித்தல்

சிறுசிறு மலைகளாலும், காடுகளாலும் சூழப்பட்டுள்ள இம்மாவட்டத்தில், மழைக்காலங்களில் பெய்யும் மழைநீர் எவ்விதப் பயனுமின்றி வீணாகும் நிலையினை மாற்றிச் சிறுசிறு அணைகளைக் கட்டி மழைநீரைச் சேமித்து விவசாயத்திற்குப் பயன்படுத்திட நீண்டகாலத் திட்டத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் 1985-86ஆம் ஆண்டில் 6,664-32 எக்டேர் நிலப்பரப்பு கூடுதலாக நீர்ப்பாசன வசதியினைப் பெற வகை செய்யப்பட்டுள்ளது. அரசு நிர்ணயித்த குறியீடான 4,629 எக்டேர் நிலப்பரப்பை விடக் கூடுதலாக 2,035.32 எக்டேர் பாசன வசதி செய்யப்பட்டு 143 சதவிகிதம் எய்தப்பட்டுள்ளது.

### பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க விசேட முயற்சி மேற்கொள்ளல்.

பொதுவாக மானாவாரிப் பயிர்களையே நம்பியிருக்கின்ற இம்மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியில் பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. 1985-'86-ல் பயறு வகை உற்பத்தியை அதிகரிக்கக் குறியீடான 34 ஆயிரம் டன்களை விஞ்சி 66.53 ஆயிரம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு 174 சதவிகிதம் எய்தியுள்ளது. மேலும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் முயற்சியில், குறியீடான 71.705 ஆயிரம் டன்களைத் தாண்டி, 93.392 ஆயிரம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு 130 சதவிகிதம் எய்தியுள்ளது இம்மாவட்டம்.

### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றை வலுப்படுத்துதலும் விரிவாக்கலும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சிததுட்டம் இம்மாவட்டத்தின் ஏழை எளியவர்க்கு ஒரு வரப்பிரசாதமான திட்டமாகும். ஏனெ

னில், எவ்விதச் சொத்தும் இல்லாத ஏழையர்க்கு இத்திட்டத்தின் மூலம் ஆடு மாடுகள், கோழி இனங்கள் வளர்க்கவும், சிறு தொழில் செய்யவும் எவ்வித ஜாமீனும் இன்றிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் வாயிலாக 1985-'86ல் இம்மாவட்டத்தில் 10,248 குடும்பங்கள், வறுமையின் கோரப்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டு வளம் மிகும் வாழ்வு நோக்கி அடியெடுத்து வைத்துள்ளன. குறியீடு 7567 தான் என்றாலும் 10,248 குடும்பங்களை உய்வித்த இச்சாதனை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

**'தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்ற விவசாயத் தொழிலாளர் பணி உறுதியளிப்புத் திட்டம்**

இம்மாவட்டத்தின் பெரும் பகுதி 'வானம்பார்த்த பூமியாய்' வறண்டு கிடப்பதன் காரணமாக மழைக்காலங்களில் மட்டுமே விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்து வரும் பரிதாப நிலை இருந்துவந்தது. ஆனால், இத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்ட பின்பு ஓரளவுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு ஏனைய காலத்தில் வேலை வாய்ப்புக் கிடைத்து வருகிறது. இதில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1984-85ன் குறியீடான 9,56,000 மனித வேலை நாட்களுக்கு மேல் 11,73,000, மனித வேலை நாட்களை உண்டாக்கி, 123 சதவிகிதச் சாதனை படைக்கப்பட்டுள்ளது. மேலும், ஊரக நிலமற்ற விவசாயத் தொழிலாளர் பணி உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ், இதே நிதியாண்டின் குறியீடான 9,67,000 மனித வேலை நாட்களுக்கு மேல் 19,14,000 மனித வேலை நாட்கள் உண்டாக்கப்பட்டு, 198 சதவிகிதம் எய்தியுள்ளது.

**உபரி நில விநியோகம்**

நில உச்ச வரம்பின் கீழ், உபரி நிலங்களைக் கையகப்படுத்தல் மற்றும் கையகப்படுத்தப்பட்ட நிலங்களை விநியோகிக்கும் பொருட்டு இம்மாவட்டத்தில் 1985-'86-ன் குறியீடு 70 ஏக்கர். ஆனால் 71 ஏக்கர் விநியோகிக்கப்பட்டு 100 சதவீதம் சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**கொத்தடிமைகள் மறுவாழ்வு**

இம்மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் கொத்தடிமைகளாக இருக்கிறார்கள் என்ற ஆதாரபூர்வமான செய்திகள் எப்பொழுது கிடைத்தாலும் உடனடியாக அவர்களை விடுவிக்க அனைத்து முனைப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் அவர்கள் விடுவிக்கப்பட்டு, காவல்துறையின் துணையோடு இங்கு வரவழைக்கப்பட்டவுடன் அவர்களுக்கு இலவச உணவும், தற்காலிகத் தங்குமிடமும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. பின்னர் அவர்களில், சொந்த ஊரில் இருப்பவர்களைச் சொந்த ஊருக்கும், அப்படி இல்லாதவர்களுக்கு உடனடியாக இலவச வீட்டு மனைப்பட்டாக்களும் வழங்கப்படுகின்றன. மேலும், அவர்களுக்குத் தேசிய ஊரக வேலைவாய்ப்பு மற்றும் ஊரக நிலமற்ற விவசாயத் தொழிலாளர் பணி உறுதியளிப்புத் திட்டங்களின் கீழ் முன்னுரிமை தரப்பட்டு, வேலை வாய்ப்பளிக்கப்படுகின்றது. அத்துடன் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், கால்நடை வளர்ப்பு மற்றும் சிறுதொழில் துவங்கக் கடனுதவிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இம்மாவட்டத்தைப் பொருத்தவரையில், கல் உடைக்கும் தொழிலாளர்கள் தான் அதிக அளவில் கொத்தடிமைகளாக மீட்கப்பட்டுள்ளனர் என்ற காரணத்தால், 2 இடங்களில், விடுவிக்கப்பட்டவர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டு 'கல் உடைக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்' நிறுவி அவர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்திட முயற்சிகள் மிக முனைப்போடு செய்யப்பட்டு வருகின்றன. 1985-'86ல் 90 பேர்கள் என்ற குறியீட்டை மிஞ்சி 103 கொத்தடிமைகள் மீட்கப்பட்டு 114 சதவிகிதத்தை எய்தியுள்ளது குறிப்பிடத்தகுந்தாகும்.

**ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் நல வளர்ச்சித் திட்டங்களை முடுக்கிவிடுதல்**

ஆதிதிராவிட மக்களில் அதிலும் குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக இம்மாவட்டத்தில், இலவசத் தொழில் கருவிகள் வழங்குதல், இலவச இல்லங்கள் கட்டித் தருதல், கால்நடை வளர்த்தல், சிறுதொழில் ஆகியவற்றிற்கு எளிய வட்டியில் மானியத்தோடு கூடிய கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 1985-86ல் 113 சதவிகிதத்தை எய்திக் குறியீடான 7573ஐத் தாண்டி 8572 குடும்பங்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மலைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக இலவச இல்லங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகளைப் பெருக்குவதோடு அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, இலவசமாகவும் மானிய விலையிலும் பலன் தரும் மரச் செடி வழங்கல், பட்டு வளர்ப்புக் கடனுதவி, கால்நடை வளர்க்க, சிறுதொழில் துவங்கக் கடனுதவிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. 1985-86-ல் குறியீடான 872ஐத் தாண்டி 1042 மலைவாழ் குடும்பங்களின் பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்தி 119 சதவிகிதம் எய்தப்பட்டுள்ளது.



**கிராமப்புற வீட்டுவசதி இலக்கை தமிழ்நாடு விஞ்சியது**

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. ஆறாவது திட்ட காலத்தில் கிராமப்புறங்களில் இரண்டு இலட்சம் வீடுகள் கட்ட வேண்டும் என்ற இலக்கை தமிழ்நாடு விஞ்சி உள்ளது.

**பிரச்சினைக் கிராமங்கள் அனைத்துக்கும் குடிநீர் வசதி**

மனிதனின் மிக முக்கிய அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீர், குடியிருப்புப் பகுதிகளிலேயே கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், இம்மாவட்டத்தில் 1984-85ல் 31 பிரச்சினைக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கக் குறியிடு நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி 31 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

**கிராமங்களில் வீட்டுமனை இல்லாத குடும்பங்களுக்கு வீட்டு மனை ஒதுக்குவதும், வீடுகட்ட நிதி வழங்குவதும்**

குடியிருப்பு மனையும், வீடுகளும் இல்லாத ஏழை எளியவர்களுக்கு உதவிடும் வகையில் இம்மாவட்டத்தில் 1985-86ல் வீட்டு மனை வழங்க ஒதுக்கப்பட்ட குறியீடான 11,000ஐத் தாண்டி 11,777 பேர்களுக்கு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு 170 சதவிகிதச் சாதனை எய்திடப்பட்டுள்ளது. மேலும் வீடுகட்ட உதவிடும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 1674ஐத் தாண்டி 1776 குடும்பங்களுக்கு உதவி 104 சதவிகிதம் எய்தப்பட்டுள்ளது.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

# புதுக்கோட்டை மாவட்டம்

புதிய 20 அம்சத் திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் மகச் சிறப்பாகச் செயல்படுத்தப் பட்டு வருகிறது. 1985-86ஆம் ஆண்டில் 14 அம்சங்களில் 100 சதவீதத்திற்கு மேல் சாதனை செய்துள்ளது குறிப்பிடத்தக்க தாகும்.

1986-87ஆம் ஆண்டில் கடந்த ஆகஸ்டுத் திங்கள் முடிய கீழ்க் கண்டவாறு சாதனைகள் அடை யப்பட்டுள்ளன.

**அம்சம் 1**

பாசனத்தை மேம்படுத்தும் பணியில் ஆண்டு இலக்கு 714 எக்டேர் ஆகும். இதில் 369 எக் டேர் நிலம் பாசனம் பெறும் வகையில் மேம்படுத்தப்பட்டுள் ளது.

**அம்சம் 2**

பயறுவகை உற்பத்தியில் ஆண்டு இலக்கு 7,000 டன் ஆகும். இதில் 3,000 டன் உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. எண்ணெய் வித்துக் கள் உற்பத்தியில் 52,000 டன் ஆகும். 11,433 டன் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**அம்சம் 3**

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச் சித் திட்டத்தின் கீழ் 5,255 ஏழைக் குடும்பங்கள் பயன்பெறத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஆகஸ்டு திங் கள் முடிய 1,838 ஏழைக் குடும் பங்கள் பயனடைந்துள்ளன. தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 5,43,000 மனித சக்தி உழைப்பு நாட்கள் உற் பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு, 1,70,000 மனித சக்தி உழைப்பு நாட்கள் உற்பத்தி செய்யப்பட் டுள்ளன.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத் தின் கீழ் 1,06,951 மனித சக்தி உழைப்பு நாட்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு 41,070 மனித சக்தி உழைப்பு நாட்கள் உற்பத்தி செய்யப்பட் டுள்ளன.

**அம்சம் 7**

7,735 தாழ்த்தப்பட்ட குடும் பத்தை முன்னேற்றும் பணியில் 1,041 குடும்பங்கள் பயன்பெற் றுள்ளன.

**அம்சம் 8**

40 பிரச்சினைக் குடிநீர் கிரா மங்களில் 20 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

**அம்சம் 9**

5,300 ஏழைகளுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கத் திட்ட மிடப்பட்டு 702 வீட்டுமனைப் பட்டாக்கள்வழங்கப்பட்டுள்ளன.

**அம்சம் 10**

30 ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகள் இலவசமாக வழங்கத் திட்டமிடப்பட்டு, 119 ஏழைக் குடும்பங்களுக்கு இலவசமாக வீடுகள் வழங்கப்பட்டு சாதனை செய்யப்பட்டுள்ளன.

**அம்சம் 11**

985 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க இலக்கு நிர் ணயிக்கப்பட்டதில், 146 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**அம்சம் 12**

57,000 மரக்கன்றுகள் நடுவ தற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்ட தில் 74,000 மரக்கன்றுகள் நடப் பட்டு 131 சதவீதம் சாதனை செய்யப்பட்டுள்ளது. 700 சாண எரிவாயுக் கலன்கள் அமைத்திடத் திட்டமிடப்பட்டு, 119 சாண எரி வாயுக் கலன்கள் ஆகஸ்டு திங் கள் முடிய அமைக்கப்பட்டுள்ளன.

**அம்சம் 13**

13,529 குடும்பநலச் சிகிச்சை கள் செய்யப்பட வேண்டியதில், 3,764 குடும்பநலச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.




**அம்சம் 14**

சுகாதாரத்தைப்பேணும் வகை யில் 13 துணைச் சுகாதார நிலை யங்கள் அமைக்கப்பட உள்ளன.

**அம்சம் 15**

தாய்மார்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட் டும் தாய்மார்கள் நலத்தைக் காக்கத் தீவிர கால்நடை அபி விருத்தித் திட்டத்தின் கீழ் 9 வட் டாரங்கள் துவக்கத் திட்டமிடப் பட்டு, 3 வட்டாரங்கள் துவக்கப் பட்டுள்ளன.

**அம்சம் 16**

6 முதல் 14 வயதுள்ள குழந் தைகளுக்கான கல்வி 6,900 குழந் தைகளுக்கு வழங்கத் திட்டமிடப் பட்டு 449 குழந்தைகளுக்குக் கல்வி வசதியளிக்கப்பட்டுள்ளது. இலக்கினை அடைய 7 சதவீதம் மீதி இருக்கிறது. 30,650 முதி யோர்களுக்கு, கல்வி வழங்கப் படும் இலக்கில், 29,258 முதி

யோர்களுக்குக் கல்வி அளிக்கப் பட்டுள்ளது. இதில் இலக்கை அடைய 5 சதவீதமே மீதி உள்ளது.

**அம்சம் 18**

100 சிறு தொழில்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு 62 சிறு தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திட்டங்களில் எஞ்சிய பணிகளை முடிக்கத் தீவிரமாகச் செயல்கள் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு திட்டங்களிலும் முனைப்புடன் செயலாற்றிடும் புதுக்கோட்டை மாவட்டம் இருபது அம்சத் திட்டத்திலும் தனது சீரிய பணியினைச் செவ்வனே செய்து, புதுக்கோட்டை மாவட்ட மக்களின் வாழ்வை வளப்படுத்திட, அயராது பாடு பட்டு வருகிறது.

**அயராது உழைக்கும் நற்சாந்துபட்டி ஆரோக்கியசாமி**

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் நற்சாந்துப்பட்டி சிறு கிராமம். இங்கு திரு ஆரோக்கிய சாமி என்ற ஒரு இளைஞர் சைக்கிள் கடை ஒன்றில் தினசரி ரூ. 3 சம்பாதிக்கும் வேலையாளாகப் பணிபுரிந்து வந்தார். இவரின் வயதான தாயாரை வைத்துக்கொண்டு, குடும்பத்தின் உணவுத் தேவைகளுக்குக்கூட ஊதியம் ஈட்ட முடியாத நிலையில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

இவருக்கு வங்கியின் மூலமாக ரூ. 5,000 கடனாக வழங்கப்பட்டது. இதில் 1 1/3 பங்கு மான்யம் 1,983 பிப்ரவரி மாதம் சைக்கிள் கடை துவக்கி, கடுமையாக உழைத்து வருமானத்தைப் பெருக்கிக் கொண்டார். விளைவு மிகவும் ஆச்சரியகரமானது. 15 மாத காலத்திற்குள் இக்கடனை முழுவதுமாக அடைத்துவிட்டார்.

இவரின் ஆர்வம் அத்துடன் நின்று விடவில்லை. மாவு ஆட்டும் எந்திரங்கள் நிறுவிட விரும்பிய இவருக்கு மீண்டும் அதே வங்கி மூலம் ரூ. 5,000 கடனாக வழங்கப்பட்டது. தற்போது இவரின் மூன்று மாவு ஆட்டும் மிஷின்களும் ஓயாது ரீங்காரம் செய்கின்றன.

தற்போது இவர் சைக்கிள் கடையிலிருந்து தினசரி ரூ.20ம் மாவு ஆட்டும் மிஷினிலிருந்து ரூ. 10ம் ஆக தினசரி ரூ. 30க்கு மேல் சம்பாதிக்கிறார். இரண்டு கடைகளுக்குச் சொந்தக்காரர் என்ற பெருமையுடன் திகழும் இவர் ,ரூ. 75 மாத சம்பளத்தில் ஒரு ஏழை விதவைப் பெண்ணுக்கும், இரண்டு பையன்களுக்கும் வேலை கொடுத்துள்ளார்.

**செயற்கை வைரம் செதுக்கும் பரம்பூர் பாலமுத்து**

அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஒரு சிறு கிராமம் பரம்பூர். இங்கு அதிகமான அளவில் மக்கள் செயற்கை வைரம் செதுக்கும் தொழிலில் ஈடுபட்டு உள்ளனர். இவர்களில் பெரும் பாலோர் தனிப்பட்ட முதலாளிகளிடம் மிகவும் குறைவான தினக் கூலிக்கு வேலைசெய்து வருபவர்கள்.



இப்பகுதியிலுள்ள தொழிலாளிகளுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி செய்து, அவர்களின் வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்திடத் திட்டமிட்டு, பலருக்கு வங்கி மூலம் கடன் வாங்கி வழங்கப்பட்டது. பரம்பூர் பாலமுத்துவும் அதில் ஒருவர். இவருக்கு ரூ. 1,500 கடன் வழங்கப்பட்டது. இக்கடனில் இவர் செயற்கை வைரம் செதுக்கும் இயந்திரம் ஒன்று வாங்கி நிறுவி, தானே செயற்கை வைரக் கற்களை வாங்கிச் செதுக்கி விற்பனை செய்திடும் பணியில் ஈடுபட்டார். அவரின் வருமானம் தற்போது தினசரி ரூ. 20.இவரின் கடனில் ரூ. 500 மானியமாக வழங்கப்பட்டது. இவர் கடனை முழுதும் திரும்பச் செலுத்திவிட்டார். அடுத்த கடனையும் வாங்கி மேலும் ஒரு இயந்திரம் நிறுவி, வருமானத்தை மேலும் பெருக்கிக் கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

இவரின் வளமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்த இருபது அம்சத் திட்டத்தினைப் பெரிதும் நன்றி உணர்வுடன் பாராட்டுகிறார்.

**உடுப்பியிலிருந்து புதுக்கோட்டை வரை...**

கர்நாடக மாநிலத்திலுள்ள உடுப்பி மாவட்டத்தில் ஜெய ராமன் என்ற ஏழை இளைஞர் வேலைதேடி அலைந்துகொண்டிருந்தார். ஒவ்வொரு இடமாக அலைந்து வேலை கிடைக்காத நிலையில் இவர், தமிழ்நாட்டிலுள்ள புதுக்கோட்டை மாவட்டம், வந்து சேர்ந்தார். பெருஞ்சினை என்ற குக்கிராமத்தில் ஒரு விவசாயப் பண்ணையில் வேலைக்குச் சேர்ந்தார். இங்குள்ள மக்களிடம் பழகி நட்பை வளர்த்துக் கொண்டார். தமிழ்மொழியையும் எழுதி, பேசப்பழகிக் கொண்டார். இவர் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு செயல்படுத்தும் பல நல்ல திட்டங்கள் பற்றி உள்ளூர் ஊர்நல அலுவலர் மூலம் தெரிந்துகொண்டார். இத்திட்டங்களில் பயன்பெற அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய ஆணையரையும், வங்கியையும் அணுகினார்.

1½ ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கி விவசாயத்தைத் துவக்கிவிட்டார். வேளாண்மைப் பெருக்குத் திட்டத்தின் கீழ் இவருக்கு ஆயில் இஞ்சின் வாங்கிட ரூ.7,200 கடன் வழங்கப்பட்டது. வங்கி தனியாக ரூ. 1,000 பயிர்க் கடனாக வழங்கியது. தொடர்ந்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 5,000 சைக்கிள் கடை வைக்க வழங்கப்பட்டது. இக்கடன்களில் இவர் இது வரை ரூ. 5,000க்கு மேல் திரும்பச் செலுத்திவிட்டார்.

இவர் தற்போது இவ்வூர் ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் உள்ளார். இச்சங்கத்தின் மூலம் 58 மந்தை ஆடுகள் (1,218 ஆடுகள்) வாங்கி வழங்கப்பட்டுள்ளன. இவ்வூரில் உற்பத்தியாகும் பாலை வாங்கி சிறு லாபத்திற்கு விற்கிறார். இவ்வூரிலுள்ள இத்திட்டங்களின் கீழ் கடன் வாங்கிய அனைவரின் கடன் மற்றும் தவணை விவரங்களை முறையாகப் பதிவேடுகள் போட்டுப் பதிந்து தேவையான எந்த விவரத்தையும் உடனுக்குடன் தெரிவிக்கும் நிலையில் உள்ளார்.

இவர் வீட்டில் பின்புறம் சாண எரிவாயு ('பயோ கேஸ்') அடுப்பு ஒன்றும் நிறுவி இவரின் மனைவி புகையாத அடுப்பில் சமையல் செய்திட வகை செய்துள்ளதுடன் சாண எரிவாயு மூலம் எரியும் ஒரு (பயோ கேஸ்) விளக்கும் வீட்டில் பொருத்தியுள்ளார். எங்கேயோ இருந்து வந்த ஓர் ஏழை இளைஞன் இன்று, தான் மகிழ்ச்சி நிறைந்த வசதியான வாழ்க்கை வாழ்வதற்குக் காரணமான இருபது அம்சத் திட்டத்திற்கும் வங்கிக்கும் நன்றி கூறுகிறார்.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

# திருச்சி மாவட்டம்



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இருபது அம்சத்திட்டத்தில் 1985-86ஆம் ஆண்டின் இலக்கு பற்றி இக்கட்டுரை விவரிக்கிறது:

அம்சம் 1: பாசன வசதியை அதிகரித்தல்:

1956-86ம் ஆண்டில் இத்திட்டத்திற்காக அரசு நிர்ணயித்த குறியீடு 6,925.30 எக்டேர்.

குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய் கள், சிறிய மற்றும் பெரிய நீர்ப்பாசனங்கள் கட்டுதல், கிணறுகளை ஆழப்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொண்டு பாசன வசதியை அதிகரித்து, விளைச்சல் நிலங்களுக்கும் தரிசு நிலங்களுககும் பாசன வசதி அளித்து சுமார் 23,510.49 எக்டேர் நிலங்களைச் சாகுபடிக்கு கொண்டுவந்துள்ளது. அதாவது அரசு குறி யீட்டிற்கும் அதிகமாக சாதனை நிகழ்த்தி 339 விழுக்காட்டைப் பெற்றுள்ளது.

அம்சம் 2 (1) பயறு வகைகள் உற்பத்தி:

பயறு வகைகள் உற்பத்திக்கு அரசு குறி யீடு 16,000 மெட்ரிக் டன்கள் ,இத்திட்டத் தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டவை 29,718 மெட்ரிக் டன்களாகும். (இதில் முக்கியப் பயறு வகைகள் துவரை, உளுந்து, பச்சைப்பயறு, கொள்ளு மற்றும் இதர பயறு வகைகளாகும்) சாதனை விழுக்காடு 186 ஆகும்.

அம்சம் 2 (2): எண்ணெய்வித்துக்கள்;

இம்மாவட்டத்திற்கு இத்திட்டத்தில் அரசு குறியீடு 1,30,700 மெட்ரிக் டன்கள். இத்திட்டத்தில் 1,37,786 மெட்ரிக் டன்கள் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகி உள் ளன.

அம்சம் 3(1) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட் டத்தின் கீழ் 18,369 குடும்பங்கள் பயனடைய வேண்டும் என்பது அரசு குறியீடு. (பழைய குடும்பங்கள் எண்ணிக்கை 12.763, புதிய குடும் பங்கள் எண்ணிக்கை 5,606 ). இதில் 19,739 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. (பழைய குடும்பங்கள் எண்ணிக்கை 12,763, புதிய குடும்பங்கள் எண்ணிக்கை 6,976 ஆகும்.)

அம்சம் 3 (2): தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் அரசுகுறியீடு 19,35,000 மனித சக்தி நாட்கள். இதில் 22,64,000 மனித சக்தி நாட்கள் பயன்படுத்தப்பட்டன.

அம்சம் 3 (3) ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் அரசு குறியீடு 19,32,000 மனித சக்தி நாட்கள். இதில் சாதனையாக 25 லட்சம் மனித சக்தி நாட் கள் பயன்படுத்தப்பட்டன. இதன் விழுக்காடு 129 ஆகும்.

அம்சம் 4: உபரி நில விநியோகம் பூர்த்தி செய்தல்

இத்திட்டத்தின் கீழ் அரசு குறியீடு 45 ஏக்கர்களாகும். இத்திட்டத்தில் 48.29 ஏக்கர் உபரி நிலம் விநியோகிக்கப்பட்டது.

அம்சம் 6: பிணைத் தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளித்தல்

பிணைத் தொழிலாளர்கள் 190 பேருக்கு மறுவாழ்வு அளிக்க அரசு குறியீடு நிர்ணயிக்கப் பட்டது. 190 பிணைத் தொழிலாளர்களுக்கும் மறுவாழ்வு அளிக்கப்பட்டு குறியீடு முழுமை யாக எய்தப்பட்டது.

அம்சம் 7(1): தாழ்த்தப்பட்டோர் வளர்ச்சிக் கான திட்டங்களை துரிதப்படுத்துதல்

இம்மாவட்டத்திற்கு அரசு குறியீடு 12,595 தாழ்த்தப்பட்டோர் குடும்பங்களா கும். மண்வளப் பாதுகாப்பு அளவுகள், ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட உதவிகள், பால்பண்ணை அபிவிருத்தி, கிராமக் கைத் தொழில்கள், பட்டு வளர்ப்பு, கால்நடை பராமரிப்பு மற்றும் இதர திட்டங்கள் மூலம் பயனடைந்த தாழ்த்தப்பட்டோர் குடும்பங் கள் எண்ணிக்கை 29,562 ஆகும். சாதனையின் விழுக்காடு 230 ஆகும்.

அம்சம் 7(2): பழங்குடியினர் வளர்ச்சிக்கான திட்டங்களை துரிதப்படுத்துதல்

1985-86ஆம் ஆண்டின் அரசு குறியீடு 734 ஆகும். ஒருங்கிணைந்த மலைவாழ் வளர்ச்சித் திட்டம் மற்றும் பல்வேறு திட்டங்கள் மூலம் பயன் அடைந்த பழங்குடியினரின் எண்ணிக்கை 2,855 ஆகும். இதின் விழுக்காடு 389 ஆகும்.

அம்சம் 8: நீர் ஆதாரமற்ற கிராமங்கள் அனைத்துக்கும் குடிநீர் வழங்கிடுதல்

இத்திட்டத்தில் 1985-86ம் ஆண்டில் பயனடையவேண்டிய கிராமங்கள் என அரசு குறியீடு செய்த எண்ணிக்கை 220 கிராமங்களாகும். தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் 220 கிராமங்களுக்கும் குடிநீர்த் திட்டம் முழுமையாக்கப்பட்டது.

அம்சம் 9(1) வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டுமனை வழங்குதல்

1985-86ஆம் ஆண்டிற்கு அரசின் குறியீடு 37,000 ஆகும். 54,684 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. சாதனையின் விழுக்காடு 148 ஆகும்.

அம்சம் 9 (2): வீடற்ற கிராம குடும்பங்களுக்கு வீடுகட்ட உதவிடுதல்.

1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் அரசு குறியீடு 3,289. கிராம வீட்டுவசதி, கூட்டுறவு, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீடு வசதித்திட்டம் ஆகிய திட்டங்கள் மூலம் 3,948 வீடுகள் வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டன. இதன் விழுக்காடு 120 ஆகும்.

அம்சம் 10(1) சேரிகளில் சுற்றுப்புற சூழ்நிலை மேம்படுத்தல்

இத்திட்டத்தில் 1985-86ஆம் ஆண்டில் பயன்பெற வேண்டியோர் குறியீடு 2,520. இத்திட்டத்தினால் குடிசைப் பகுதிகளுக்கு சாலை வசதி, குடிநீர், கழிப்பிடம், மின் விளக்கு போன்ற அடிப்படை வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதனால் இம்மாவட்டத்தில் நகராட்சிகளில் சேரி வாழ்மக்கள் 17,185 பேர்கள் பயன்பெறும் வகையில் வேலைகள் முடிக்கப்பெற்றுள்ளன.

அம்சம் 10(3) பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ள எளிய பிரிவினருக்கு வீடு கட்டும் திட்டம் அமுலாக்கிடுதல்

1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் அரசு குறியீடு 214க்கு 411 வீடுகள் புனர் வாழ்வு திட்டத்தின் கீழும்,கைத்தறித் துறைத் திட்டத்தின் கீழும், நலிவடைந்தோர் பிரிவினருக்கு கட்டிக் கொடுக்கப்பட்டன. சாதனையின் விழுக்காடு 171 ஆகும்.

அம்சம் 11(2) பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்குதல்

1985-86ஆம் ஆண்டில் 4,124 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டுமென்பது குறியீடு. இதில் 3,533 பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டன.



அம்சம் 12 (1) மரங்கள் நடுதல்

இம்மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டின் குறியீடு ஒரு கோடியே பன்னிரண்டு லட்சம் மரங்கள் நடுதலாகும். இவ்வாண்டில் ஒரு கோடியே எண்பத்திரண்டு லட்சம் மரங்கள் நடப்பட்டன. சாதனை 163 விழுக்காடு ஆகும்.

அம்சம் 12(2) சாண எரி வாயு கலன்கள் அமைத்தல்

1985-86ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் அரசு குறியீடான 2,015க்கு, 2,082 சாண எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

அம்சம் 13 குடும்ப நலத்திட்டத்தை ஒரு மக்கள் இயக்கமாக பரப்புதல்

குடும்பநலத் திட்டத்தில் 1985-86ம் ஆண்டிற்கு அரசின் குறியீடு 41,400 நபர்களுக்கு குடும்பநல அறுவை சிகிச்சை செய்வதாகும். இதில் இலக்கை விஞ்சி 41,754 நபர்களுக்கு குடும்பநல அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

அம்சம் 14(1) ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

1985-86ஆம் ஆண்டில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்று அமைக்க குறியீடு அரசிடம் இருந்து பெறப்பட்டு, திருவரம்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் துவாகுடி கிராமத்தில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் நிறுவப்பட்டுள்ளது.

அம்சம் 15(1) 6 லிருந்து 14 வயது வரை உள்ள குழந்தைகளை பள்ளியில் சேர்த்தல்

1985-86ஆம் ஆண்டில் 6-14 வயது குழந்தைகளை பள்ளியில் சேர்ப்பதில் அரசின் குறியீடு 18,300 (இதில் 6-11 வயது 7,900, 11-14 வயது 10,400) இம்மாவட்டத்தில் 9 வயது முதல் 13 வயது முடிய உள்ள 19,181 குழந்தைகளை பள்ளியில் சேர்த்து குறியீடு விஞ்சப்பட்டது. (6-11 வயது 7,981 ) (11-14 வயது 11,200 )

அம்சம் 16(2) வயது வந்தோர் கல்வி

1985-86ஆம் ஆண்டு வயது வந்தோருடைய எழுத்தறிவின்மையை அகற்றும் திட்டத்தின் கீழ் 48,800 நபர்களுக்கு கல்வி புகட்டப்பட்ட அரசு குறியீடுநிர்ணயித்ததில்59,628 நபர்களுக்கு கல்வி அறிவு புகட்டப்பட்டது. இதன் விழுக்காடு 120 ஆகும்.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

# காமராஜர் மாவட்டம்

நாடு முன்னேற நம் பாரதப் பிரதமர் மறைந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் நமக்களித்த திட்டம்தான் 20 அம்சத் திட்டம். இந்தியாவில் பொதுவான வளர்ச்சித் திட்டங்களைத் தவிர, பல்வேறு பிரிவினரின் இன்னல்களைக் குறைக்கவும், மக்களின் பொருளாதார சமூக வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் பல்வேறு குறைகளை சரி படுத்தவும், தினந்தோறும் ஏற்படும் புதிய சவால்களை சமாளிக்கவும் அரசு 20 அம்சத் திட்டத்தினை வகுத்தது. இத்திட்டத்தில் காமராசர் மாவட்டம் தனது குறியீட்டினை எட்டி சாதனை புரிந்துள்ளது.

1985-86ஆம் ஆண்டிற்கு இம்மாவட்டத்தில் குறியீடான 361 எக்டேரைத் தாண்டி, 1,036 எக்டேருக்குப் பாசன வசதியை அதிகரித்துள்ளது. 1986-87 நடப்பாண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் 338 எக்டேர் என அரசு நிர்ணயிததுள்ளது. பாசன வசதி அதிகரிக்க இம்மாவட்ட பொறியாளர்கள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இதுவரை 216 எக்டேர் பாசன வசதி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1985-86ஆம் ஆண்டிற்கு அரசு நிர்ணயித்த குறியீடான 4,000 மெட்ரிக் டன்னுக்கு மேல் 6,820 மெட்ரிக் டன் பயறு வகைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1986-87ஆம் ஆண்டிற்கு அரசு 9,000 மெட்ரிக் டன் குறியீடாக நிர்ணயித்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியினை அதிகரிக்க அரசு 1985-86ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 37,000 மெட்ரிக் டன்னுக்கு மேல் 37,215 மெட்ரிக் டன் அடைதுள்ளது. 1986-87ஆம் ஆண்டிற்கு அரசு 14,100 மெட்ரிக் டன் குறியீடு நிர்ணயித்துள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 80 இலட்சமும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 115 இலட்சமும், தீவிர வேளாண்மை உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின் கீழ் ரூ. 50 இலட்சமும், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 75 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களின் மூலமாக 7,500 நலிந்தோர் பயன்பெற்றுள்ளனர். சுமார் 24.5 இலட்சம் மனிதவேலை நாட்கள் கிராமப்புறப் பகுதிகளில் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 110 இலட்சமும், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 143 இலட்சமும், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்-



டத்தின் கீழ் ரூ. 163 இலட்சமும், தீவிர வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ் ரூ. 50 இலட்சமும், வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 89 இலட்சமும், ஆக மொத்தம் ரூ. 5.5 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் மூலமாக 9,300 நலிந்தோர் பயனடைவார்கள். 6 இலட்சம் மனித வேலை நாட்கள் கிராமப்புறங்களில் வளர்ச்சிக்கு கொடுக்கப்படவுள்ளது.

1985-86 ஆண்டின் திட்டங்களின் வாயிலாக 4,413 ஆதிதிராவிடர்கள் ரூ. 4.84கோடி மதிப்புள்ள திட்டங்களின் பயனாக பயன் பெற்றுள்ளனர்.

நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டளவான 15 ஏக்கருக்கு மேல், 16.93 ஏக்கர் உபரிநிலம் விநியோகம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்காக திட்டங்களைத் துரிதப்படுத்தும் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டிற்கு தாழ்த்தப்பட்டோர் 4,610 பேரும், பழங்குடியினர் 18 பேரும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் பயன்பெற வேண்டும். ஆனால் இக்குறியீட்டைத் தாண்டி தாழ்த்தப்பட்டோரில் 4,962 பேரும், பழங்குடியினரில் 23 பேரும் பயன் பெற்றுள்ளனர். 1986-87ல் 2,405 தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் பயன்பெற உள்ளனர்.

குடிநீர் பிரச்சினையுள்ள 75 கிராமங்களுக்கு குடிநீர் வழங்குதலில் முழுமையாகக் குறியீட்டை இம்மாவட்டம் எட்டியுள்ளது. நடப்பாண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் 40 குடிநீர் பிரச்சினையுள்ள கிராமங்கள் குடிநீர் வசதி பெறவுள்ளன.

1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 6,000 என்ற குறியீட்டளவைத் தாண்டி 6,918 வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு, வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வீடுகட்ட உதவும் திட்டத்தின் கீழ் அரசு நிர்ணயித்த குறியீடான 820க்கு மேல் 1,468 பேர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது.

1986-87ல் இத்திட்டத்தின் கீழ் 6,600 வீடற்ற கிராமக் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டாவும், 2,000 பேர்களுக்கு வீடுகட்டுவதற்கு உதவும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 1985-86ல் 345 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிப்பதென குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் குறியீட்டளவை தாண்டி 773 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு 700 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புத் தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டில் 23,56,800 மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் 171 கரிம வாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 32,44,000 மரக்கன்றுகள் நடப்படவுள்ளன. 200 கரிமவாயு கலன்கள் அமைக்கப்படவுள்ளன.



1985-86ல் இம்மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் சிறு குடும்பநல இயக்கம் நடத்தப்பட்டு 16,010 நபர்களுக்கு குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, குறியீட்டளவிற்கு மேல் சாதனை எய்தப்பட்டது.

1985-86ஆம் ஆண்டின் குறியீட்டளவான 50 கிளை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் முழுவதும் திறக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 11 கிளை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

1985-86ல் இத்திட்டத்தின் கீழ் 6 வயதிலிருந்து 14 வயது வரையிலுள்ள குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும் திட்டத்தின் குறியீடாக அரசு நிர்ணயித்த 7,500 தாண்டி 11,992 குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். 1985-86ல் 24,603 பேர்களுக்கு முதியோர் கல்வி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 7,300 குழந்தைகளை பள்ளிகளில் சேர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுபோல் 32,800 முதியோர்களுக்கு முதியோர் கல்வி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சிறுதொழில்கள் அமைத்தல்**

1985-86ல் 308 சிறு தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது அரசின் குறியீடான 200க்கு மேல் 154 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பால் உற்பத்திப் பெருக்கத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் துறை திட்டத்தின் கீழ் 150 இந்து ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு 1985-86ல் கறவை மாடுகள் வாங்கிட மானியமாக ரூ. 1,250 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மதம் மாறிய ஆறு கிறித்துவ குடும்பங்களுக்கு ரூ. 0.05 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி கழகத்தின் மூலம் ,பால் கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த 310 இந்து உறுப்பினர்களுக்கு கறவை மாடுகள் வாங்கிட மான்யமாக ரூ. 2.58 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

ஏர்மிகும் இருபது அம்சத் திட்டங்கள் செயலாக்கம் செய்யப்பெற்றதிலிருந்து செங்கை மாவட்டத்தில் பயறு வகைகள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

இம்மாவட்டத்தில் பயறுவகைகளில் இயல் பரப்பு 18,000 எக்டேர் ஆகும். ஆனால் தற்போது பரப்பு 30,000 எக்டேர் வரையிலும் உயர்ந்துள்ளது. பயறு வகைகளில் துவரை, உளுந்து, பாசிப்பயிறு, காராமணி, மொச்சை, கொள்ளு ஆகியவை பயிராகின்றன. துவரை நீங்கலாக ஏனைய பயறுகள் 65 முதல் 85 நாட்கள் வரை வயதுடையவை. இவற்றில் டி.9 உளுந்து, கே.எம். 2 பாசிப்பயறு சி.152 காராமணி எஸ்.ஏ. 1 மற்றும் கோ.1 துவரை போன்ற ரகங்கள் இம்மாவட்டத்தில் பிரபலமாக உள்ளன.






### 1985-86ஆம் ஆண்டில் பயறுவகை திட்டத்தின்கீழ் பிற சாதனைகள்

விநியோகிக்கப்பட்ட நுண்ணுயிர்ப் பொட்டலங்கள் 25,000 எண்கள். 1985-86ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 8500 மெ.டன்கள் பயறு வகை உற்பத்தி குறியீட்டுக்கு 11200 மெ. டன்கள் வரை சாதனை அடையப்பட்டது.

டி.ஏ.பி. இலை, தெளிப்பு செய்தது 100 எக்டேர்.

பயறு மினி கிட்டுகள் வழங்கியது (4 கிலோ) 16,649 எண்கள்.

பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் வழங்கியது 15 எண்கள்.

பயறுவகைகளில் உழவர்க்குப் பயிற்சி 2700 நபர்கள் பயனடைகிறார்கள்.

இவை தவிர, செயல் விளக்கத் தளைகள் பல அமைக்கப்பெற்றன. உழவர்களுக்குப் பயறுவகைச் சாகுபடியில் பயிற்சி அளிக்கப்பெற்றது. சுமார் 6 இலட்சம் ரூபாய் பெருமானமுள்ள பயறு (மினிகிட்டுகள்) விநியோகிக்கப்பட்டது.

### பட்டு வளர்ச்சித் துறை 1985-86

43 தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு மல்பரி பயிர் செய்ததற்காக ஏக்கருக்கு ரூ.100 வீதம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 400 மதிப்புள்ள சிறப்புத் தளவாடங்கள் வழங்கப்பட்டுள்ளன. 23 விவசாயிகளுக்குப் பட்டு விவசாயத்தில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 14 நபர்களுக்குத் தொழில் செய்வதற்கான தளவாடசாமான்கள் வாங்குவதற்கு ரூ. 500 வீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. 7 நபர்களுக்குப் புழு வளர்ப்பு மனை கட்ட ரூ. 750 வீதம் மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

1986-87ன் மொத்தக் குறியீடு 40 நபர். அதில் ஜூன்'86 வரை 10 சதவீதம் சாதனை செய்யப்பட்டுள்ளது. 1986-87ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு பெறப்படவில்லை. பட்டு வளர்ச்சித் துறையால் தாழ்த்தப்பட்ட, நிலமுடைய பட்டு விவசாயிகள் ஆண்டிற்கு, ஏக்கருக்கு ரூ. 10,000க்கு மேல் வருமானம் பெற்றுள்ளனர்.

கூடுதல் மாணவர் சேக்கை 1986-87 :

இம்மாவட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட குறியீடு 16,700 எண்ணிக்கை: 20,765 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்த்து 124 சதவீத இலக்கை மிஞ்சியுள்ளது. 6-11 வயதுப் பிரிவில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட பிள்ளைகள் 9766ல் 8036 பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்களாவா. 11-14, வயது பிரிவில் 4860 பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். 292 மாணவர்கள் 14-18 வயதுப் பிரிவில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவர்களிலிருந்து சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1985-86ல் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவர்களில் 75 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்கள்.

### வயது வந்தோர் கல்வி

இத்திட்டத்தில் 15 முதல் 35 வயதுடைய அனைவரும் சேர்ந்து பயனடையலாம். இத்திட்டத்தின் குறிக்கோள் மூன்றாகும். 1. எழுத்தறிவு, எண்ணறிவு பெறுதல், 2. விழிப்புணர்ச்சி பெறுதல், 3. செயல் திறன் மேம்பாட்டைதல.

1985-86ஆம் ஆண்டில் மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்

தின் கீழ் வாலாசாபாத், அச்சரப்பாக்கம், சித்தாமூர், ஆர்.கே. பேட்டை, பூந்தமல்லி, திருத்தணி, பள்ளிப்பட்டு, இலத்தூர், ஆகிய ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் ஊரக செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்தின் கீழ் மீஞ்சூர், சோழவரம், எல்லாபுரம், கடம்பத்தூர், ஈக்காடு, திருவாலங்காடு ஆகிய பகுதிகளிலும், தொண்டு நிறுவனங்களின் கீழ் இதர ஒன்றியப் பகுதிகளிலும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

**மாநில வயது வந்தோர் கல்வித் திட்டம்**

மொத்தம் பயனடைந்த கற்போர் எண்ணிக்கை 24,200 பேர். இதில் தாழ்த்தப்பட்டோர் 12,100 பேர் பயன் அடைந்துள்ளனர். மலைவாழ்வோர் 375 பேர்கள் பயன் அடைந்துள்ளனர். மொத்த ஊக்குநர்களின் எண்ணிக்கை 800 ஆகும். மேற்பார்வையாளர்கள் 24 பேர்கள்.

**ஊரகச் செயல்முறை எழுத்தறிவுத் திட்டம்:**

மொத்தம் பயனடைந்தோர் 19,700 பேர்கள். இதில் 11,700 பேர் தாழ்த்தப்பட்டோர்களும், 230 பேர் மலைவாழ்வோர்களும் பயனடைந்துள்ளனர்.

600 ஊக்குநர்களும், 20 மேற்பார்வையாளர்களும் எண்ணிக்கையாகும்.

**தாட்கோ 85-86**

மத்திய அரசின் உதவி பெற்ற ஆதிதிராவிடர்களுக்கு 65 தொகுப்பு வீடுகள் மானிய விலையில் சிறுவாக்கம் (காஞ்சிபுரம்) பெருமாள்சேரி (திருக்கழுக்குன்றம்) நொச்சிலி (திருத்தணி) ஆகிய இடங்களில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. மொத்த மதிப்பு ரூ. 3,90,000 ஆகும். சிறு பெட்டிக் கடைகள் வைக்க ஆதிதிராவிடர்களுக்கு ரூ. 70,750 கடன், 25 சதவீதம் மானியமாகக் கொடுக்கப்பட்டது. இதனால் 79 பேர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**நகர்ப்புறப் பொருளாதார வளர்சித் திட்டம் (சுயவேலை வாய்ப்பு)**

326 ஆதிதிராவிடர்களுக்கு வங்கிகள் மூலமாக மானியமாகக் கடன் கொடுக்கப்பட்டுள்ளது. ரூ.440 இலட்சம் ஆதிதிராவிடர்களுக்கு 33⅓ சதவீதம் மானியமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு மானியமாக 'தாட்கோ' மூலமாக ரூ.



2.46 இலட்சம் வேளாண்மை இணை இயக்குநர் மூலமாக விவசாய மக்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**தாட்கோ**

ஆதிதிராவிடர்களுக்கு காஞ்சிபுரம், சிறுவாக்கம், திருக்கழுக்குன்றம், பெருமாள்சேரி, திருத்தணி, நொச்சிலி ஆகிய இடங்களில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் உதவி பெற்று ஆதிதிராவிடர்கள் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டிற்கு ரூ. 6.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு 220 நபர்கள் பயன்பெறப் பணிக் குறியீடும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 40,000 மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. திருக்கழுக்குன்றம் அருகே 'நெய்குட்டி'யில் சவுக்குக்கன்று 15 எக்டேரில் நடப்பட்டுள்ளது.

குடும்ப நல அறுவைச் சிகிச்சை இந்த ஆண்டில் 2,604 செய்யப்பட்டுள்ளன. சென்ற ஆண்டு இலக்கு 41,140. அறுவைச் சிகிச்சைகள் சாதனையோ 45,813. இது இலக்கை மிஞ்சிய 111.3 சதவிகித சாதனையாகும். குடும்ப அறுவைச் சிகிச்சையில் சென்ற ஆண்டில் செங்கை மாவட்டம் தமிழ்நாட்டில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இதுபோலவே கண்புரை நோய் அறுவைச் சிகிச்சையிலும் மாவட்டம் மாநிலத்தில் மூன்றாவது இடத்தைச் சென்ற ஆண்டில் பெற்றது. அரசு முகாம்களில் 1,724 புரை நீக்கு அறுவைகளும் தனியார் முகாம்களில் 427 புரை நீக்கு அறுவைகளும் செய்யப்பட்டன. இந்த ஆண்டில் இதுவரை 731 தொழுநோயாளிகளுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது. 164 புரை நீக்கு நோய்ச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செங்கற்பட்டு மாவட்டத்தில் 85-86ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 232.34 இலட்சம் செலவிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டதில் மொத்தம் ரூ. 222.26 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதனால் மொத்தம் சுமார் 14,320 பேர் பயனடைந்தனர். இவர்களில் சுமார் 8,000 பேர் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர். சுமார் 5,000 பேர் மகளிர் ஆவர்.

சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கான மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 85-86ஆம் ஆண்டில், மொத்தம் ரூ. 60 இலட்சம் செலவு செய்யப்பட்டதால் சுமார் 1,000 தாழ்த்தப்பட்டவர்களும் மற்றவர்கள் சுமார் 2,000 பேரும் பயனடைந்தனர்.

ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 85-86ஆம் ஆண்டில் மொத்தம் சுமார் 247 இலட்சம் செலவு செய்யப்பட்டது. சுமார் 2200 மெட்ரிக் டன் அரிசியும், சுமார் 900 மெட்ரிக் டன் கோதுமையும் விநியோகிக்கப்பட்டது. மொத்தம் சுமார் 22 இலட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டன. சுமார் 300 கி.மீ கிராமச் சாலைகள் போடப்பட்டன. சமுதாயக் கடன்கள் தொகுப்பு வீடுகள் சுமார் 600 ஆகியவை கட்டப்பட்டன.

**தொழில் மையம்**

மத்திய அரசின் உதவி பெற்று ஏனைய திட்டத்தின் கீழ் மே '86ஆம் மாதம் முடிய 99 தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன.

**கால்நடை**

மத்திய அரசின் உதவி பெற்ற ஏனைய திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு அம்மை நோய்த் தடுப்பு இயக்கத்திற்கு ரூ. 2.25 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 0.165 இலட்சம் நிதி செலவழிக்கப்பட்டுள்ளது. இதன் சாதனை 7 சதவீதம். இத்திட்டத்திற்குப் பணி குறியீடு எதிர்பார்க்கப்படுகிறது. 3917 கால்நடைகளுக்குச் செயற்கைக் கருவூட்டப்பட்டுள்ளது.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

# கோவை மாவட்டம்

**கோ**வை மாவட்டம், இந்தியப் பிரதமரின் 20 அம்சத் துட்டத்தைச் செயல்படுததியதுல் 1985-86ஆம் ஆண்டில் 100 சதவீதமும் அதறகு மேலும் சாதனை புரிந்து மாநிலத்துல் முதலிடம் பெற்று அரசின் பாராட்டுச் சான்றிதழைப் பெற்றது பெருமைக் குரியதொன்றாகும். அத்தோடு இம் மாவட்ட மக்களுக்குப் பயன் தருகின்ற வகையில் செலவிடுவதற்காக ரூ. 7.5 இலட்சம் அரசு பரிசாக வழங்கியுள்ளது.

1985-86ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தில் முதல் அம்சமான பாசன வசதியைப் பெருக்குதலில் இம்மாவட்டத்திற்கான குறியீடு 6,004 எக்டேராகும். இதில் 6,387 எக்டேருக்குப் பாசன வசதியைப் பெருக்கி இம்மாவட்டம் 106 சதவீதம் சாதனை புரிந்துள்ளது.

இரண்டாம் அம்சத்தில் பயறு வகை உற்பத்தியைப் பெருக்குதலில் குறியீடான 33 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் மேலாக 51 ஆயிரம் மெட்ரிக் டன் பயறு வகை உற்பத்தியினைப் பெருக்கி 155 சதவீதம் சாதனை படைத்துள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் குறியீடான 107 ஆயிரம் மெட்ரிக் டன்னை விஞ்சி 111 ஆயிரம் மெட்ரிக் டன் உற்பத்தி செய்து 104 சதவீதம் சாதனை அடைந்துள்ளது.

3வது அம்சத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே இத்திட்டத்தின் கீழ் உதவி பெற்றவர்களில் 5,375 பேர்களுக்கு உதவி வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டிற்கு எதிராக 5,379 பேர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் புதிதாக 3,800 பேர்களுக்கு உதவி வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டினை விஞ்சி 4,557 பேர்களுக்கு உதவி செய்யப்பட்டு 120 சதவீதம் சாதனை எய்தப்பட்டது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 15 இலட்சத்து 44 ஆயிரம் மனித சக்தி நாட்களை உருவாக்குவதற்கான குறியீட்டினை விஞ்சி 20 இலட்சத்து 38 ஆயிரம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு 132 சதவீதம் சாதனையும், ஊரக நில மற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 17 இலட்சத்து 66 ஆயிரம் மனித உழைப்பு நாட்களுக்கு மேலாக 20 இலட்சத்து 16 ஆயிரம் மனித உழைப்பு நாட்களும் உருவாக்கப்பட்டு 114 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது.

4வது அம்சத்தில் 355 ஏக்கர் உபரி நிலம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 366 ஏக்கர் உபரி நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு 103 சதவீதம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

6வது அம்சத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட 46 பிணைத்தொழி



வாளர்களுக்குப் பல்வேறு உதவிகள் செய்யப்பட்டு மறுவாழ்வு வழங்கப்பட்டதன் மூலம் நூற்றுக்கு நூறு வெற்றி காணப்பட்டது.

7வது அம்சத்தின் கீழ் 8,104 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டிற்கும் மேலாக 43,313 குடும்பங்களுக்குப் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு 534 சதவீதம் சாதனை புரியப்பட்டுள்ளது.

இதுபோன்ற குறியீடாக நிர்ணயிக்கப்பட்ட 176 மலைவாழ் மக்களின் குடும்பங்களுக்கும் அதிகமாக 740 குடும்பங்களுக்குப் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு இதிலும் 420 சதவீதம் சாதனை அடையப்பட்டுள்ளது.

8வது அம்சத்தில் பிரச்சினைக் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் 14 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டும் என்ற குறியீட்டிற்கேற்ப 14 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு இதில் 100 சதவீதம் சாதனை செய்யப்பட்டது.

9வது அம்சத் திட்டத்தின் கீழ் 6,500 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படுதல் வேண்டும் என்ற குறியீட்டுக்கு மேலாக 7,165 நபர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கி 110 சதவீதம் சாதனை புரியப்பட்டது.

1,823 பேர்களுக்கு வீடுகள் கட்ட உதவி வழங்க வேண்டும் என்ற குறியீட்டினைத் தாண்டி 2,138 பேர்களுக்கு வீடுகள் கட்ட உதவிகள் வழங்கப்பட்டு 110 சதவீதம் சாதனை அடையப்பட்டது.

10வது அம்சத்தின் கீழ் 5,680 குடிசைவாழ் மக்களுக்கு வசதி செய்யப்படவேண்டும் என்ற குறியீட்டினுக்கேற்ப 5,680 பேர்களுக்கும் வசதிகள் வழங்கப்பட்டு இதுல் 100 சதவீதம சாதனை எயதப்பட்டுள்ளது.

வாழ்வில் நலிவுற்றோர்க்கு வீட்டு வசதி செய்வதில் குறியீடான 305 பேர்களுக்கும் மேலாக 365 பேர்களுக்கு வழங்கப்பட்டு 120 சதவீதம் சாதனை புரியப்பட்டுள்ளது.

11வது அம்சத்தின் கீழ் இம் மாவட்டத்தில் 1,713 நீரேற்றிகளுக்கு மின்விசை வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 1,725 நீரேற்றிகளுக்கு மின்விசை வழங்கப்பட்டு 101 சதவீதம் சாதனை எய்தப்பட்டுள்ளது.

12வது அம்சத்தின் குறியீடான 28 இலட்சத்து 30 ஆயிரம் மரங்கள் நடுவதற்கும் மேலாக இம்மாவட்டத்தில் 45 இலட்சத்து 46 ஆயிரம் மரங்கள் நடப்பட்டு 161 சதவீதம் சாதனை புரியப்பட்டுள்ளது.

1,575 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 1,654 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டு 105 சதவீதம் சாதனை செய்யப்பட்டுள்ளது.

13வது அம்சத்தின் கீழ் 35,300 பேர்களுக்குக் குடும்ப நலசிகிச்சை அளிக்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 37,102 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு 105 சதவீதம் சாதனை எய்தப்பட்டு இம்மாவட்டம் **மாநில அளவில்** குடும்ப நலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இரண்டாம் இடத்தினை அடைந்துள்ளது.

14வது அம்சத்தின் கீழ் ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்ற குறியீட்டிற்கேற்ப வால்பாறையில் முடிசில் ஒரு ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

16வது அம்சத்தின் கீழ் 6முதல் 14 வயதுவரையுள்ள குழந்தைகள் 10,800 பேர்களைப் பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 16,077 குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு இம்மாவட்டம் 149 சதவீதம் சாதனை புரிந்துள்ளது.

39,600 பேர்களுக்கு வயது வந்தோர் கல்வி வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டினை விஞ்சி 118 சதவீதம் சாதனை படைத்து 46,684 வயது வந்தோர்களுக்குக் கல்வி வழங்கப்பட்டுள்ளது.

18வது அம்சத்தின் கீழ் 750 சிறுதொழில்களை நிறுவ உதவி வழங்க வேண்டும் என்ற குறியீட்டிற்கும் மேலாக 245 சதவீதம் சாதனை புரிந்து இம் மாவட்டத்தில் 1,838 சிறு தொழில்கள் நிறுவ உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

வறுமைக்கோட்டிற்குக் கீழே வசதியற்று வாழ்வோருக்கு ஒளி விளக்காய்த் திகழும் இருபது அம்சத் திட்டம் இம்மாவட்டத்தில் நூற்றுக்கு நூறு சாதனை படைக்கும் விதத்தில் சீரோடும் சிறப்போடும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மக்கள் நலனுக்காக இத்திட்டம் வரும் ஆண்டுகளில் தொடர்ந்து மேலும் சிறப்பான முறையில் செயல்படுத்த தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



## கோவை மாநகராட்சி 1985-86-ல் 20 அம்சத் திட்டச் சாதனைகள்

**கோவை மாநகராட்சியில் குடிசைப் பகுதி அபிவிருத்தித் திட்டம் 1985-86ல் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது. அம்மன்குளம், மணியகாரம் பாளையம், நல்லாம்பாளையம், காமராஜ்புரம் (கணபதி) சொக்கம்புதூர், பனைமரத்தூர், வெங்கிட்டாபுரம், பூசாரி பாளையம் மற்றும் கமலா மில் குட்டை ஆகிய ஒன்பது பகுதிகளில் இப்பணி நிறைவேற்றப்பட்டது. இந்தப் பகுதியில் பதின்மூன்று குடிநீர்க் குழாய்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. குழாய்கள் அமைக்கும் பணிக்காக செலவு ரூ. 2.93 இலட்சம் ஆகும். இதனால் 14,586 மக்கள் பயனடைந்துள்ளனர்.**

**1985-86ஆம் ஆண்டில் இம்மாநகராட்சி எல்லைக்குள் உள்ள 9 இடங்களில் 2,045 சாலை மரங்கள் ரூ. 2.98 இலட்சம் செலவில் நடப்பட்டுள்ளன.**

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

# சேலம் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில் எண்ணெய் வித்துப்பயிர் சுமார் 1.25 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் மானாவாரிப் பயிராகவும், இறவைப் பயிராகவும் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இது பயிர் செய்யப்படும் மொத்தப் பரப்பில் 25 சதவீகிதம் ஆகும்.

சிறு-குறு விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், புதிய புதிய கண்டுபிடிப்புக்களின் பயனை அவ்வப்பொழுது உணர்ந்து உற்பத்தியினைப் பெருக்கவும், சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த ரூபாய் 9,34,500 செலவிட்டு 9,551 சிறு-குறு உழவர்களுக்கு இடு பொருள் இனாமாக வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1985-86-ஆம் ஆண்டுக்கு முதலில் ரூ. 257.29 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அரசு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு 1985-86-ஆம் ஆண்டுக்கு ரூ. 280.210 இலட்சம் புதிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. மத்திய மற்றும் மாநில அரசுகளால் 50 : 50 அளவில் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

சேலம் மாவட்டத்தில் 1985-86-ஆம் ஆண்டிற்கு 1266 நபர்களுக்குப் பயிற்சி அளிக்க அரசு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களின் மூலம் மின்சாரப் பம்ப் பழுது பார்க்க ஒரு மாதக் கால பயிற்சி அளித்து, அவர்களைக் கொண்டு கிராமத்திலுள்ள நபர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 964 நபர்களுக்குப் பல்வேறு தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. 1985-86-ஆம் ஆண்டு நாளது வரை 10.53 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு 1985-86-ஆம் ஆண்டில், இம்மாவட்டத்திற்கான ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 296.40 இலட்சத்தில் 31-3-86 வரை ரூ. 245.44 இலட்சம் மட்டும் அரசினரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ. 36.81 இலட்சம் பேரூராட்சிகளுக்கும் ரூ. 207.88 இலட்சம் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. மீதித்தொகையான ரூ. 75,000-ஐ சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பணியாளருக்குரிய நிர்வாகச் செலவினங்களுக்காக வைத்துக் கொள்ளப்பட்டது. மேலும் ரூ. 210.69 இலட்சம் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவும் ரூபாய் 23.96 இலட்சம் பேரூராட்சிகள் மூலமாகவும் ஆக மொத்தம் ரூ. 234.65 இலட்சம் செலவடைப்பட்டுள்ளது. (உணவுப் பொருட்கள் நீங்கலாக).

1985-86-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில உருவாக்கப்பட வேண்டிய மனித சக்தி நாட்களின் இலக்கு 18.62 இலட்சம். தேசீய கிராமிய வேலைவாய்ப்புத் திட்டத்தில் 1985-86ஆம் ஆண்டில் 23.67 இலட்சம் மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டன.

''சமூகக் காடுகள்'' தலைப்பில் 1985-86-ல் ரூ. 60.42 இலட்சம்

ஓலைப்பட்டி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க நெசவாளர் குடியிருப்பு கட்டுமானப்பணி





நலிந்தோர்க்கான இல்லம் இராசிபுரம்

செலவிடப்பட்டுள்ளது. 1046 எக்டேர் பரப்பளவில் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. நாற்றங்கால்களில் வளர்க்கப்பட்ட மொத்தம் 81.63 இலட்சம் செடிகளில் 1985-86-ல் 20.87 இலட்சம் செடிகள் நடப் பட்டுள்ளன,

ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் 100 குடும்பங்களுக்கு 700 தேனீப் பெட்டிகளை வழங்கிட அனுமதி வழங்கப்பட்டது.

இத்திட்டம், சேலம் மாவட்டத்தின் கல்ராயன் மலைப் பகுதியிலுள்ள பண்டைய பழங் குடியினர் முன்னேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்டது.700 தேனீப் பெட்டிகளும், 100 பழங்குடி யினருக்கு 100 சதம் மானிய அடிப்படையில் வழங்கிட அனு மதிக்கப்பட்டதாகும்.

வீடற்ற ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கும் திட்டம் வருவாய்த் துறையில் மேற்கொள்ளப்படுகிறது. 1985-86-ஆம் ஆண்டில் நாமக்கல் வருவாய்க் கோட்டத்தில் 5560 நபர் களுக்கு 93.15 ஏக்கர் நிலத்திற்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

1985-86-ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் 4,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இந்த இலக்கீட்டிற்கு அதிகமாகவே, 4,186 பட் டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இராசிபுரம் கிராமத்தில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வருவாயில் நலிந்த பிரிவினருக்கான 61வீடுகள் கட்டி முடிக்கப்பெற்று உள்ளன.

1985-86-ஆம் ஆண்டில் 2000 கைத்தறிகள் கூட்டுறவின் கீழ் கொண்டு வரப்பட்டு ஆண்டு இறுதியில் 36,800 கைத்தறிகள் கூட்டுறவின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன. இது மொத்த கைத்தறிகளில் 46 சதவீதம் ஆகும். இச்சரகத்தில் மொத்தம் 79 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

குடியிருப்புத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு துறையில் உள்ள நெசவாளர்களுக்கு வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுக் கழகம் கடன் உதவியுடன் ரூ. 12ஆயிரம் மதிப்பில் வீடுகள் கட்டி கொடுக்கப்படுகின்றன. இதற்கென ஒரு வீட்டிற்குக் கடன் ரூ.9,600-ம் தமிழ்நாடு அரசு மானியம் ரூ. 1,000 வழங்குகிறது. மீதமுள்ள தொகை ரூ. 1,400 உறுப்பினர் ஏற்க வேணடும்.

1985-86-ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் தலைவாசல் ஒன்றியம் ஆரகளூரில் ரூ. 12.90 இலட்சம் திட்டத்தில் 100 இந்து ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் பொருட்டு ஒரு தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

தாரமங்கலம் தந்தை பெரியார் தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 'ட்ரைசம்' திட்டத்தில் 20 ஆதிதிராவிடர்களுக்குக் கைத்தறி நெசவுத் தொழிலில் பயிற்சி அளிக்கப்பட்டு மொத்தம் ரூ. 0.18 இலட்சம் மானியம் பெறப்பட்டு உதவித்தொகையாக வழங்கப்பட்டது.

1985-86-ஆம் ஆண்டில் 3 கிராமங்களுக்கு மின்வசதி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், 7 கிராமங் களுக்கு 1985-86-ஆம் ஆண்டில் மின்வசதி அளிக்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் உள்ள 237 துணைச் சுகாதார நிலையத் துடன் இந்த ஆண்டில் புதியதாக 37 புதிய சுகாதாரத் துணை நிலையங்கள் திறக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இம்மாவட்டத்தில் 1874 ஆரம்பப்பள்ளிகளும், 209 நடு நிலைப்பள்ளிகளும், 141 உயர் நிலைப் பள்ளிகளும், 107 மேல் நிலைப்பள்ளிகளும் உள்ளன. 1985-86-ஆம் ஆண்டில் 6-14 வயது வரம்பில் 17,764 மாணவ மாணவியர் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். இப்பள்ளிகளில் 1976 பள்ளிகளில் ரூ. 2,81,454.45 மதிப்புள்ள 1,55,952 புத்த கங்கள் உள்ளன. புத்தக வங்கிகள் மூலம் 10,345 ஆதிதிராவிட மாணவ, மாணவியர்களும், 1869 பழங்குடி மாணவ மாணவியர் களும், 69,281 இதர மாணவ மாணவியர்களும் பயனடை கின்றனர்.

1985-86-ஆம் ஆண்டில் மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் புதிதாக 550 தொழிற் சாலைகள் துவங்க குறியீடு நிர்ண யிக்கப்பட்டிருந்தது. அந்தக் குறி யீட்டிற்கு எதிராக 1405 புதிய தொழிச்சாலைகள் சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ளன.

இதே போல் 1985-86-ஆம் ஆண்டில் இம்மாவட்டத்தில் 506 கைவினைக் கலைஞர்களுக்குக் கைவினைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை களின் மூலம் 2861 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதைத்தவிர 1985-86-ஆம் ஆண்டில் கிராமியக் கைவினை ஞர்கள் பயிற்சித் திட்டத்தின் கீழ் 78 ஆதிதிராவிட-பழங்குடி யினருக்கு பொறியியல், கயிறு தயாரித்தல், கவர் தயாரித்தல், அச்சுக் கோப்பு போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 40 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, குறி யீடான, 140 ஏக்கருக்கு, 160 ஏக்கர் பரப்பு பயனடைந்தது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் குறியீடான 400 குடும்பங்களுக்கும் உதவப்பட்டது. 319.67 ஏக்கர் பயனடையப் பெற்று ரூ. 1.7 இலட்சம் செல விடப்பட்டது.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

# பெரியார் மாவட்டம்

பொதுவாகப் பெரியார் மாவட்ட மக்களுள் அதிலும்குறிப்பாகக் கொங்கு வேளாள இனத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் விவசாயிகளே ஆவர். "அதிகக் குழந்தைகள் பிறப்பின், நிலங்கள் படிப்படியாகப் பிரிக்கப்படும். அப்படிப் பிரிக்கப்பட்டுச் சிறு தேங்காய்களாகிவிடும் என்பதை நன்கு உணர்ந்தவர்கள். எனவே தான் 'ஒரு குடும்பம் ஒரு வாரிசு' என்ற தாரக மந்திரத்தை உறுதியுடன் கடைப்பிடித்து ஒழுகுபவர்கள் அய்யம்புதூர் (கோபி அருகில்) கரட்டுப்பாளையம் (சென்னிமலை அருகில்) முதலிய ஊர் மக்கள் சான்றாகத் திகழ்கிறார்கள். ஆகவே இம்மாவட்டம் பிற மாவட்டங்களுக்கு இத்துறையில் முன்மாதிரியாகத் திகழ்கிறது.

இம்மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் 1985-86ல் மட்டும் 10382 பிரசவங்கள் நிகழ, அவற்றுள் 8907, குழந்தைகள் பிரசவித்த தாய்மார்கள் குடும்ப நல முறையை (60%) மேற்கொண்டு தமிழகத்தில் இம் மாவட்டம் முதல் நிலை வகிக்கிறது.

தகுதி வாய்ந்த தம்பதியினர் 41,980 பேர் உள்ளனர். ஒரே ஒரு குழந்தையுடன் உள்ளவர்களின் எண்ணிக்கை 73,736.

தற்காலிக முறைகளுள் ஒன்றான கருத்தடை வளையம் பொருத்துவதில் இம்மாவட்டத்திற்கு நிர்ணயித்த இலக்கு 6700 ஆகும். 5338 தாய்மார்கட்குக் கருத்தடை வளையம் பொருத்தப்பட்டுள்ளது. ஆக, இத்துறையில் சுமார் 80% சாதனையை இம்மாவட்டம் புரிந்துள்ளது.

கடந்த 1985-86 இல் மட்டும் இம்மாவட்டத்தில் 70 லேபராஸ்கோபிக் முகாம்கள் நடைபெற்றன. அவற்றின் வழி மட்டும் 4219 தாய்மார்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டனர். அத்தாய்மார்கட்கு அரசு வழங்கும் ஈட்டுத்தொகையுடன் பல்வேறு ஊக்கப்பரிசுகளும் (அடிஷனல் இன்செண்டிவ்ஸ்) அவ்வப்பொழுது செயலாண்மைக் கழகங்களால் (வாலண்டரி ஆர்கனைசேஸன்ஸ்) அன்புடன் அளிக்கப்பட்டன.

கிராமங்களில் பொருளாதார வளர்ச்சியையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தவும், வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதைக் குறிக்கோளாகவும் அதிக அளவில் வேலை வாய்ப்புள்ள தொழில்களை அங்கே தொடங்கச் செய்து அப்பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டும், தொழில் துவங்க உள்ள இடர்ப்பாடுகளை நீக்கி உதவவும் மேலும் ஒரே இடத்தில் அனைத்து வசதிகளைப் பெறவும் மாவட்டத் தொழில் மையம் தொடங்கப்பட்டது. பெரியார் மாவட்டத் தொழில் மையம் 1979-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

மத்திய அரசின் 20 அம்சத் திட்டத்தின் கீழ் புதிய சிறு தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்துதல், சிறு தொழில்களுக்கு அனைத்து வசதிகளைச் செய்து தருதல், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தீட்டி நிதியுதவி வழங்கல், தொழில் முனைவோர்க்கு சம்பந்தப்பட்ட தொழிலில் பயிற்சி அளித்தல், கைவினைஞர்களை இனங்கண்டு கொண்டு பதிவு செய்தல், அவர்களின் தொழில் முன்னேற்றத்திற்



கான நிதியுதவி வழங்குதல், படித்த வேலையில்லா இளைஞர்-யுவதிகளுக்கு அவர்கள் சுயமாகத் தொழில் துவங்க வங்கிகளின் மூலம் கடன் வசதி செய்து தருதல் ஆகிய பணிகளைச் சீரிய முறையில் செவ்வனே நடத்தி வருகிறது.

20 அம்சத் திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டின் சாதனை கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

புதிதாகத் தொடங்கப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 603.

இவற்றின் மூலம் வேலை வாய்ப்புப் பெற்ற நபர்களின் எண்ணிக்கை 4117.

இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் / பழங்குடி வகுப்பைச் சார்ந்த 12 நபர்கள் சிறு தொழில் நிறுவனங்களை ஏற்படுத்திப் பயனடைந்துள்ளனர்.

தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மூன்று நபர்களுக்கு ரூ. 15,297.35 விதைப்பணமாக இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ளது.

கைவினைஞர்களை இனம் கண்டு அவர்கள் தொழிலைப் பதிவு செய்து கைவினைத் தொழிலுக்கான சான்றிதழ் வழங்கப்படுகிறது. கைவினைஞர்களுக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்றுத் தருகிறது. மாநில விருது, தேசிய விருதுகளில் சிறந்த கைவினைஞர்கள் கலந்து கொள்ள ஏற்பாடு செய்து தருகிறது. பயிற்சி பெற விரும்பும் கைவினைஞர்கள் பயிற்சி பெறுவதற்கு வழிவகைகளைச் செய்கிறது. பூம்புகார் விற்பனை நிலையங்களில் விற்பனை செய்ய வழிவகை செய்து தருகிறது. 1985-86 ஆம் ஆண்டில் 252 கைவினைஞர்கள் இனம் கண்டு கொள்ளப்பட்டு அவர்களுடைய தொழில்கள் பதிவு செய்யப்பட்டன. 8 கை வினைஞர்களுக்கு வங்கிக் கடன் பெறப் பரிந்துரை செய்யப்பட்டது.

காங்கயத்தைச் சேர்ந்த திரு எம். பாஸ்கரன் என்ற கைவினைஞர், தேசிய கைவினைஞர் விருதில் கலந்துகொள்வதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டது.

கிராமப்புற வினைஞர் திட்டம் இம்மையத்தின் மூலம் நேரடியாகச் செயல்படுத்தப்படுகிறது. கிராமப்புறத்தில் புதிய தொழில் துவங்குவதற்கான தொழில் நுட்பப் பயிற்சியை அளித்து அதன் மூலம் சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்துவதும், பொருளாதார முன்னேற்றம் அடைய வகை செய்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

1985-86ஆம் ஆண்டில் 83 கிராமப் புற வினைஞர்களுக்கு விசைத்தறி, சர்க்கா, எம்பிராய்டரி, ஸ்கிரீன் மேக்கிங், பிரிண்டிங் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சி பெற்ற 83 நபர்களில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்தவர் 29 பேர் ஆவர். இத்திட்டத்திற்காக ரூ. 52,456.95 செலவிடப்பட்டுள்ளது.

பாரதப் பிரதமர் - படித்த வேலையில்லாத இளைஞர், யுவதிகளின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் 1983-84 முதல் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டில் 986 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடன் பெற வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. 602 நபர்களுக்கு ரூ.105.02 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட பழங்குடி வகுப்பைச் சார்ந்த 13 நபர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். ரூ.2.50 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**சிறப்பு மத்திய உதவியுடன் நடைபெறும் திட்டம்**

பெரியார் மாவட்டம் தாராபுரம் சரகத்தில் இந்து ஆதிதிராவிடர்களின் மேம்பாட்டிற்கென செம்மறியாடு அபிவிருத்தித் திட்டம் 1985-86-ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டது.

**திட்டத்தின் நோக்கம்**

இத்திட்டத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்து ஆதிதிராவிடர்களுக்குச் செம்மறியாடுகளை வளர்ப்பதன் மூலம் கூடுதலாக வருமானம் பெறுவதுதான் திட்டத்தின் தலையாய நோக்கமாகும். செம்மறியாடுகளை அறிவியல் முறையில் வளர்க்கவும் மற்றும் ஆடுகளின் தரத்தை அபிவிருத்தி அடையச் செய்வதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

**திட்டத்தினால் பயனடைந்தோர்**

கிராமங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்து ஆதிதிராவிடர்கள்தான் இத்திட்டத்தினால் பயனடைந்தோர்கள் ஆவர்.

மொத்தப் பயனடைந்தோர்களில் 50 விழுக்காடு, மகளிராக உள்ளனர்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள இந்து ஆதிதிராவிடர்கள் தான் இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**திட்டத்தின் பயன்**

ஒவ்வொரு பயனடைவோர்க்கும் மாதந்தோறும் சராசரியாக ரூ. 250 கூடுதலாகக் கிடைக்கும் வருமானந்தான் இத்திட்டத்தில் ஏற்பட்ட பயன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்வளித்தல்**

1985-86ம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் ரூ.25000- 10 தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கடனாக ரூ.2250, மானியமாக ரூ.250 நிதி உதவியாக சமமாகப் பகிர்ந்து அளித்து அவர்களை காலணிகள் தயாரிக்க ஊக்குவிப்பதின் மூலம் வறுமைக் கோட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ரூ.67,500 தோல் பதனிடுதலை குலத்தொழிலாகக் கொண்ட 15 நபர்களுக்கு ரூ. 3750 கடனாகவும் ரூ.750 மானியமாகவும் அளித்து அவர்களையும் வறுமைக்கோட்டிலிருந்து விடுவிக்க வழி செய்யப்பட்டது. மொத்தம் ரூ.92,500, வாரியக் கடன் நிதி உதவி மூலம் 1985-86ஆம் ஆண்டில் 25 தாழ்த்தப்பட்ட குடும்பங்களுக்கு அளிக்கப்பட்டு அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

**மானியம்**

யூனிட்டின் 50 விழுக்காட்டுத் தொகை தாட்கோவின் மூலம் சிறப்பு மத்திய உதவித் திட்டத்தினின்றும், மீதி 50 விழுக்காட்டுத் தொகை நிதியுதவி செய்யும் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளின் வழியாகவும் அளிக்கப்படுகிறது.

**காப்பீடு: (இன்ஸ்சூரன்ஸ்)**

இத்திட்டத்தில் வாங்கப்பெற்ற ஆடுகளுக்குக் காப்பீடு செய்யப்படுவதில் அரசும் திட்டத்தில் சேர்ந்த நபரும் சரிபாதியாகப் பங்கிட்டுக் கொள்கிறார்கள். அதிகப்படியாக ரூ. 65 வரை அரசு தனது பங்காகக் காப்பீட்டுத்தொகையை அளிக்கிறது.

இத்திட்டத்திற்கென வாங்கப்பெற்ற மருந்துகள் இத்திட்டத்தில் வாங்கப் பெற்ற செம்மறியாடுகளுக்கு முழுவதுமாகப் பயன்படுத்தப்பட்டன. குடற்புழு நீக்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட கால அட்டவணைப்படி தடுப்பூசி போடுதல் போன்ற பணிகளும் செம்மறியாடுகளின் தேக ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் பணிகளில் உள்ளடங்கியது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :



# அண்ணா மாவட்டம்

அண்ணா மாவட்டத்தில் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் 1985-86இல் புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டம் செயல்பட்டது.

இத்திட்டத்தின் 115 யூனிட்டுகள் பயன் அடைவோர்க்கு வழங்கப்பட்டது. புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டத்தில் ஒவ்வொரு யூனிட்டுக்கும் 10 கோழிகள் மற்றும் 1 சேவல் ஆகியவைகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு யூனிட்டுக்கும் இத்திட்டத்தில் ஒதுக்கிய தொகை ரூ. 210 ஒவ்வொரு யூனிட்டுக்கும் ரூ. 105 மான்யமாக வழங்கப்பட்டு மீதமுள்ள ரூ. 105ஐ சம்பந்தப்பட்டவரிடம் வசூலிக்கப்பட்டது. மேற்படி 115 நபர்களில் 64 நபர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள். 51 நபர்கள் இதர வகுப்பினரைச் சார்ந்தவர்கள்.

திரு.ப.ம. சுப்பிரமணியம், மாலைப் பட்டி (தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்) இவர் கருவி பொறியியல் பணியலகம், திண்டுக்கல் மூலம் பயிற்சி பெற்றுள்ளார்.

அவர் கனரா வங்கி நாகல் நகர் கிளையின் மூலம் ரூ. 41,000 கடன் பெற்று சுயமாகத் தொழில் ஆரம்பித்துள்ளார். அவர் சைக்கிள் ஸ்டாண்டு கேரியர் மற்றும் இரும்பு எஃகு மூலப்பொருள்களிலிருந்து பாகங்களைத் தயாரித்து கொடுக்கிறார். இப்பொருட்களுக்கு அருகாமையிலுள்ள மாவட்டங்களில் நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது. இராணிமங்கம்மாள்போக்குவரத்துக் கழகத்திற்குத் தேவையான வாசகர்களைத் தயாரித்து வழங்கி வருகிறார். இதன் மூலம் இவர் கூடுதலாக இரண்டு நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளார். இவரது மொத்த விற்பனை தோராயமாக ரூ.3,000.




இவருக்கு மாத வருமானம் ரூ. 600. இந்த நிறுவனம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

திரு எஸ்.எ.செபஸ்டியன் ஜெயக்குமார் (பி.ஏ.) 95 ஏ. ரயில்வே ஸ்டேசன் ரோடு, திண்டுக்கல் எஸ்.எ.எஸ். ஹோசரிஸ் என்னும் நிறுவனம் பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 25,000 கடன் உதவி பெற்று ஆரம்பித்துள்ளார்.

இவர் பனியன் மற்றும் துணியினால் ஆன ஆடைகளைத் தயாரித்து விற்பனை செய்கிறார். இந்நிறுவனத்தின் மூலம் இவர் கூடுதலான நபர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்துள்ளார். இதில் இவரது மாத வருமானம் ரூ. 600. இவ்விதமாக தொழில் நல்லபடியாக செயல்பட்டு வருகிறது.

**கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் அண்ணா மாவட்டம் செயல்படுத்திய திட்டங்கள் 1985-86 ஒரு சிறு கண்ணோட்டம்:**

கிராமப்புறங்களில் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள முக்கியமாக ஆதிதிராவிடர்களின் குடியிருப்பு வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்தில் 1977ம் ஆண்டு கிராமிய வீட்டு வசதித் திட்டம் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டது. இத்திட்டத்தில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு 1 லட்சம் வீடுகள் கட்ட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு பின்பு இந்த குறியீடு 1985ம் ஆண்டுவரை இரண்டு லட்சம் வீடுகள் கட்டுவதற்கு திருத்தியமைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுதும் வட்ட மற்றும் கோட்ட கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டது. அண்ணா மாவட்டத்தில் இம்மாதிரியான சங்கங்கள் கீழ்க்கண்ட இடங்களில் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

| சங்கத்தின் பெயர் | தலைமையிடம் |
|---|---|
| பழநி வட்ட கிராமிய கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் | பழனி |
| திண்டுக்கல் கோட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் | சின்னாளபட்டி |
| வேடசந்தூர் வட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் | வேடசந்தூர் |
| நிலக்கோட்டை வட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் | நிலக்கோட்டை |

ஏழாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்ப காலத்திலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 5,000 வீடுகள் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஆதிதிரா



விடரல்லாதவர்களுக்கு கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் கடன் வழங்க 1985-86ஆம் நிதியாண்டில் அண்ணா மாவட்டத்திற்கு 299 வீடுகள் கட்ட குறியீடு நிர்ணயிக்கப்பட்டது.

வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள ஆதி திராவ்டரில்லாதவர்களுக்கு வீடுகள் கட்ட கடன் உதவி வழங்கி சிமிண்ட் முதலிய கட்டடம் கட்ட தேவையான பொருள் களையும் சங்கம் மூலமே வழங்கி இவர்கள் நல்ல முறையில் அமைத்த வீட்டில் குடியிருக்க செய்யப்பட்டது. ஆதிதிராவிடரல்லாத வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள நபர்களின் வீடில்லாத பிரச்சினையை தீர்த்து அவர்களது வாழ்க்கைக்கு வளமூட்டியது கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் ஆகும்.

எனவே, பொருளாதாரத்தில் நலிவுற்ற ஏழை மக்களுக்கு கிராமத்தில் வாழும் ஆதி திராவிடரல்லாதவர்களுக்கு வாழ்க்கையில் மூன்று கட்டமாகிய உண்ண உணவு உடுக்க



உடை இருக்க உறையுள் (வீடு) என்ற மூன்றில் மூன்றாவது கட்டத்தினை இந்த கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் வழங்கி வருவது நினைவில் நிற்கக்கூடியது. வரும் ஆண்டுகளிலும் இத்திட்டத்தின் மூலம் இன்னும் அதிக மக்கள் பயனபெறத் திட்டம் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

**20 அம்சத் திட்டம் 16 (11) அண்ணா மாவட்டத்தில் கல்வி சாதனைகள்**

| | குறியீடு 1985-86 | மையங்களின் எண்ணிக்கை | பயனடைந்தோர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| கிராமிய செயல்முறை எழுத்தறிவுத் திட்டம் திண்டுக்கல் | 25968 | 300 | 9489 |
| மாநில வயதுவந்தோர்க் கல்வி திட்டம் | | 400 | 12400 |
| கல்லூரிகள் மற்றும் பல்கலைகழகம் | | 160 | 4841 |
| தொண்டு நிறுவனங்கள் | | 122 | 3660 |
| மொத்தம் | 24968 | 982 | 30390 |

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலையே பெரும்பாலான மக்கள் நாடி உள்ளனர். இம்மாவட்டத்தில் 5 இலட்சம் விவசாயப் பெருமக்களில் 80 சதவீதம் சிறு, குறு விவசாயிகளே. நிரந்தர நீர்ப் பாசனமற்ற இம்மாவட்டம், பாசனக் கிணறுகளான சுமார் 2 இலட்சம் கிணறுகளையே வேளாண்மைத் தொழிலில் நம்பியிருக்கிறது.

தாவர எண்ணெய் உற்பத்தியில் இந்திய நாடு பற்றாக்குறை நாடு. தானிய உற்பத்தியில் பற்றாக்குறை நாடாக இருந்த நமது இந்தியா தற்போது உபரி நாடாக விளங்கி பங்களாதேஷ் போன்ற நாடுகளுக்கு நெல், கோதுமை போன்ற தானிய வகைகளை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு நாம் முன்னேறி உள்ளோம். இம்முன்னேற்றம் விவசாயிகளின் தீவிர முயற்சி என்பதை யாரும் மறுக்க இயலாது.

அந்த நிலையில் கடந்த 85-86ஆம் ஆண்டில் 20 அம்சத் திட்டத்தின்கீழ், முக்கியத்துவம் வாய்ந்த மணிலா கீழ்க்கண்டவாறு மூன்றுபருவங்களிலும் சிறப்பாகப் பயிரிடப்படுகிறது-

| | எக்டேர் |
|---|---|
| மானாவாரிப் பருவம் | 2,03,000 |
| இறவைப் பருவம் | 44,000 |
| கோடை சிறப்புப் பருவம் | 6,000 |
| மொத்தம் | 2,53,000 |

இம்மாவட்டத்தில் அமைந்துள்ள 33 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மணிலா விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றால் - மாவட்ட அளவில் உற்பத்தி பெருகியுள்ளது என்பதை உணரலாம். ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களும் விவசாயிகளது தேவைக்கேற்றவாறு பெருகி உதவி செய்து வருகின்றன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் மானாவாரியில் கலப்புப் பயிராகத் துவரை, சோளம், பச்சைப் பயறு, மொச்சை, கொள்ளுப் பயறுகள் பயிரிட்டு வருகின்றனர். பயறு வகைகளில் மகசூலைப் பெருக்க, அதிக விளைச்சல் தரும் இரகங்கள் பயிரிடுதல், பயிர் எண்ணிக்கை பராமரித்தல், வரிசை விதைப்பு மேற்கொள்ளுதல், விதைகளுடன் நுண்ணுயிர் கலந்து விதைத்தல், சரியான விதையளவு மேற்கொள்ளுதல், இரசாயன உரம் இடுதல், பயிர்ப் பாதுகாப்பு, ஆகிய தொழில் நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கி பயறு உற்பத்தியினைப் பெருக்கிட ஊக்குவிக்கப்பட்டது.

கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் மலைவாழ் பழங்குடியினருக்காக 1985-86-ஆம் ஆண்டில் ஜவ்வாது மலையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி உள்ளது.

தமிழ்நாடு அரசு மலைவாழ் மக்கள் மேம்பாட்டுக்கென்றே பல்வேறு திட்டங்களைத் தமிழகமெங்கும் செயல்படுத்தி வருகின்றது. வடஆர்க்காடு மாவட்டத்தில் ஜவ்வாதுமலைத் தொடரில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு அரசின் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 1977-78 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

வட ஆர்க்காடு மாவட்டத்தின் பகுதியில் 7 தாலுக்காக்களை மட்டும் இக்கோட்டத்தினைச் சார்ந்த 6 வனச் சரகங்களின் கீழ் எல்லையாகக் கொண்டு வரப்பட்டு-வேலூர், ஆர்க்காடு, குடியாத்தம், வாலாசாப் பேட்டை, செய்யாறு மற்றும் அரக்கோணத்தின் சமூக வனவியல் வனச்சரகங்கள் செயல்பட்டு வருகின்றன.

1981-82 முதல் 1983-84வரை மூன்றாண்டுகளில் மட்டும் ரூபாய் 26,912.55ம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இது 1984-85ஆம் ஆண்டிலிருந்து உயி

# வட ஆர்க்காடு மாவட்டம்



ருள்ள செடிகள் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 2.50 வீதம் வழங்கப்படவுள்ளது. இக்கோட்டத்தில் இதுவரை 10,229 குடும்பங்கட்கு 26,50,121 செடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் குறைந்த விலையில், பொதுமக்களுக்குப் பழக் கன்றுகள் கொய்யா, நெல்லி, புளி, நாவல், சீதாப்புளி போன்ற செடிகளும் மற்றும் புங்கன், நீர்மத்தி, ஆச்சான், செம்மரம், தைலக்கன்றுகள், நிழல் தரும் மற்றும் அலங்காரப் பூக்களை வழங்கும் மயில்கொன்றை மரக்கன்றுகளும் விற்கப்படுகின்றன. இதுவரை 5 ஆண்டுகளில் 53,05,588 செடிகள் விற்கப்பட்டுள்ளன.

இக்கோட்டம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட 63 தோட்டங்கள் பத்தாண்டுகட்குப் பின்னர் நன்கு வளர்ந்த, முதிர்ச்சியடைந்த நிலையில் பொது ஏலத்தில் விடப்

பட்டு, இதுவரை ரூ. 24,36,226.90 வனத்துறைக்கு வருமானம் தேடித்தந்துள்ளது. சுமார் 8,906 மெட்ரிக் டன் விறகுகள் எரி பொருளாக இக்கோட்டத்தி லிருந்து கிடைத்துள்ளது.

இக்கோட்டத்தில் இதுவரை 1981-82லிருந்து 1985-86 வரை யிலான ஐந்தாண்டுக் காலத்தில் 10,115.73எக்டேர் பரப்பில் அடர் நடவு செடிகளும் 411.95 கி.மீ. தூரத்திற்கு சாலையோரம், கால் வாய் ஆற்றுப்படுகை மற்றும் இருப்புப் பாதையோரங்களிலும் அழகு மற்றும் நிழல்தரும் செடி களும் நடப்பட்டுள்ளன.

பொருளாதார நிலையில் நலி வுற்ற பிரிவினருக்கு வீடுகள் கட் டித் தருவதில் மறுவாழ்வுத் துறை யும் பெரும் பங்கு வகிக்கிறது.

இதுவரை 40,165 குடும்பங் களுக்கு வீட்டுக்கடன் வழங்கப் பட்டுள்ளது.

பர்மாவிலிருந்து இதுவரை 1,44,305 நபர்கள் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களில் 19,525 குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்ளக் கடன் வழங் கப்பட்டுள்ளது.

வியட்நாமிலிருந்து இதுவரை 501 குடும்பங்களைச் சார்ந்த 2055 நபர்கள் தாயகம் திரும்பி யுள்ளனர். இவற்றில் 25 குடும் பங்கள் வீட்டுக் கடன் பெற்றுள் ளனர்.

இவ்வாறு தாயகம் திரும்பியோ ருக்கு வழங்கப்படும் வீட்டுக் கடன்களைத் தவிர இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு இந்தியா திரும்பி யுள்ள அகதிகளைக் குடியமர்த்து வதற்காக இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபம் முகாமில் 1400 வீடுகளும், திருச் சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கொட்டப்பட்டு முகாமில் 100 வீடுகளும், தூத்துக்குடியில் 100 வீடுகளும் கட்டப்பட்டு முடியும் தருவாயிலுள்ளன.

**சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம் (ஆடு வளர்ப்பு)**

இத்திட்டம் 1976-77 முதல் செயலாக்கப்பட்டு வருகிறது.




**மாவட்டக் காசநோய்ச் சங்கத்தின் மூலம், காசநோய்க் கண்டுபிடிப்பு மற்றும் தடுப்பு முறைகளை மாவட்ட காசநோய் இயக்கத்தின் கீழ் சிறந்த முறையில் விளம்பரப்படுத்தி சாதனை புரிந்ததற்காகப் பாராட்டி, தமிழ்நாடு காசநோய்த் தடுப்புச் சங்கத்தினரால், டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் நூற்றாண்டு நினைவு சுழற் கேடயமும், தகுதிச் சான்றிதழும் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டது.**

**34 காசநோய் வில்லை இயக்கத்தின் கீழ், அதிக மதிப்புள்ள காசநோய் வில்லைகளை ஆர்வத்துடன் உற்சாகமாக விற்பனை செய்ததைப் பாராட்டி, தமிழ்நாடு காசநோய்த் தடுப்புச் சங்கத்தினால் சுழற்கோப்பையும், தகுதிச் சான் றிதழும் வடஆர்க்காடு மாவட்டத்திற்கு வழங்கப் பட்டன.**

ரூ. 4,500 மொத்த செலவில் 20 பெண் ஆடுகளும், 1 கிடாவும் அடங்கிய ஆட்டு அலகுகள் ஏற் படுத்துவதற்கு நிதி உதவி அளிக் கப்படுகிறது. சிறுவிவசாயிகளுக்கு ரூ. 1,125 மானியமாகவும், குறு நில விவசாயிகள் மற்றும் விவ சாயத் தொழிலாளர்களுக்கு ரூ. ரூ. 1,500 மானியமாகவும் வழங் கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் 1985-86ல் 400 குறியீடு அலகுகளில், 401 அலகுகள் பிரிவுகள் ஏற்படுத்தி, வெற்றிகரமாக இலக்கினை அடைந்துள்ளது.

1985-86ஆம் ஆண்டில் 170 அலகுகள் கொல்லைப்புறக் கோழி வளர்ப்பு பிரிவுகள் நிர் ணயம் செய்ததில், 182 அலகு கள் மானிய விலையில் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பய னடைந்தோர் ஒவ்வொருவருக் கும் ரூ. 105 வீதம் பிரிவு ஒன்று வீதம் ரூ. 17,802 மானியமாக அளிக்கப்பட்டுள்ளன.

1985-86ஆம் ஆண்டில் இம் மாவட்டத்தில் ஏலகிரி மற்றும் ஜவ்வாது மலைகளில் வாழும் பழங்குடியினரின் நல்வாழ்விற்குக் கீழ்க்கண்ட கால்நடைகள் 50 சத வீத மானியமாக வழங்கப்பட்டுள் ளன:

கறவை மாடுகள் 40 அலகுகள், ஆடு வளர்ப்பு பிரிவு 50 அலகுகள், எருதுகள் 40 அலகுகள் ஆக மொத்தம் 120.

இவ்வாண்டில் மானியமாக ரூ. 1,77,500 மேற்கூறிய பிரிவுகள் பழங்குடியினர்கள் ஏற்படுத்திய தற்காக வழங்கப்பட்டுள்ளன.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஊக்குநர் களைக் கொண்டு கிராமங்களில் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வயது வந்தோர் கல்வித் திட்ட மும், பள்ளிசாராக் கல்வித் திட்ட மும், சிறப்பாக நடைபெற்று வரு கின்றன.

இத்திட்டங்கள் மூலம் 1971ல் கற்றோர் 39 விழுக்காட்டிலிருந்து 1981ல் 46ஆக உயர்ந்ததால், ஐக்கிய நாட்டுச் சபையின் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் குழு தமிழகத்தைப் பாராட்டி, சான்றிதழும் ''நடேஸ்டா ரூப் ஸ்கயா'' பரிசும் வழங்கிக் கௌர வித்துள்ளது. மாவட்ட அளவில் இத்திட்டங்களின் குழுத் தலைவ ராக மாவட்ட ஆட்சித் தலைவர் சிறப்பாகச் செயல்புரிந்து வரு கிறார். 1976ஆம் ஆண்டு முதல் இன்று வரை 21,776 ஆண்களும், 67,182 பெண்களும் ஆக மொத் தம் 88,958 பேர் பயனடைந் துள்ளனர். 1985-86ஆம் ஆண் டில் 15-35 வயது பிரிவினரில் 9,162 ஆண்களும் 26,707 பெண் களும் ஆக மொத்தம் 36,319 பேர் எழுத்தறிவும், எண்ணறி வும் பெற்று வருகின்றனர். இவர் களில் பெரும்பாலோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். மற்றும் சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் உள்ள மக்கள் கல்விச் செல்வத்தை முதன் முதலாகத் தமிழக அரசு உதவி மூலம் பெறு கின்றனர்.

**வட ஆர்க்காடு மாவட்டத்தில் நிறுவப்பட்ட மொத்த புதிய தொழில்கள் 803**

**சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப் பட்ட இனங்கள் 2559 : ரூ. 634.98**
**எண்கள் இலட்சங்கள்.**

# தஞ்சாவூர் மாவட்டம்



ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியனர் முன்னேற்றத் திட்டத் தின் கீழ் 1985-86ஆம் ஆண்டுக்கு நிர்ணயித்த இலக்கான 314 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு மேலாக மொத்தம் 387 ஆதிதிரா விடர் குடும்பங்களுக்குச் சலுகை கள் வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிடர் கிறித்து வர்கட்கு உழவு மாடுகள் வாங்க ரூ. 600க்கு மேற்படாமல் 3ல் 1 பாகம் மான்யமாகவும் மீதி 3ல் 2 பாகம் கடனாகவும் வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள் ளன. இதற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 56 குடும்பங்களுக் கும் உதவி வழங்கப்பட்டு விட்டது.

பாசனக்கிணறு தோண்ட 3ல் 1 பாகம், மான்யமாகவும் 3ல் 2 பாகம் நிலவள வங்கி மற்றும் இதர முன்னணி வங்கி மூலம் கடனாகவும் ஆதிதிராவிடர் மற் றும் மதம்மாறிய ஆதிதிராவிடர் கிருத்துவக் குடுமபங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதற்கென நிர்ணயிக்கப்பட்ட குடும்பங்கள் 8. குடும்பம் ஒன்றுக்கு ரூ. 6000 வரை மான்யம் வழங்க இத் திட்டம் வகை செய்கிறது.

இவ்வகுப்பைச் சேர்ந்த தொழில் நுட்பக்கலைஞர்களுக்கு தச்சுப்பட்டறை, கொல்லுப்பட் டறை, தையல் இயந்திரம் மற் றும் 18 இன தொழிற்கருவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 206 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இதற்கென நிர்ணயிக்கப்பட்ட குடும்பங்கள் 200.

நகரப் பகுதிகளில் வாழும் இந்து ஆதிதிராவிடர்களுக்கு தொழில் செய்ய கடன் வழங்கும் திட்டம் 1984-85 முதல் தாட்கோ மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் 50 குடும்பங் களுக்கு சைக்கிள்கடை, சிற் றுண்டிக்கடை, பலசரக்கு கடை போன்ற சிறுதொழில்களுக்குக் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக் கப்பட்டது. ஆனால் இலக்கை மீறி இதுவரை 117 குடும்பங்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

1986-87ஆம் ஆண்டில் பிரச் சனையுள்ள 235 குடியிருப்பு களுக்கு குடிநீர் வழங்க திட்ட மிடப்பட்டு அவ்வேலை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இவ் வாரியம் 235 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் வேலையை முழுவதுமாக நிறைவேற்றி உள் ளது. ரூ. 193 இலட்சம் செலவி லான இத்திட்டத்தால் 1 இலட் சத்து 63 ஆயிரம் பேர் பயன் பெறுகின்றனர்.

சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் 1985-86ல் தஞ்சை சமூகக் காடுகள் கோட்டத்தால் 16,35,967 மரக்கன்றுகள் நடப் பட்டுள்ளன. மரவளாப்பு ஊக்கு விப்பு திட்டத்தின்கீழ் பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப் பட்ட 3,92,403 மரக்கன்றுகள் மற்றும் மரவளர்ப்பு விஸ்தரிப்பு திட்டம், மனமகிழ்காடுகள் திட் டம் ஆகியவற்றில் விற்பனை செய்யப்பட்ட 7,08,072 மரக் கன்றுகளை உள்ளடக்கியதாகும் இவை. ஏறத்தாழ 4,969 குடும் பங்கள் இதன் மூலம் பயனடைந் துள்ளன.

படுகை நிலம், கண்மாய்கள் ஆகியவற்றில் அடர் நடவு மூலம் 252 ஹெக்டேர்களிலும், சாலை யோரம், ஆறுகால்வாய் ஓரம் மற் றும் புகைவண்டித்தொடர் ஓரம் ஆகியவற்றில் 46 கி.மீட்டர் களிலும் மரக்கன்றுகள் நடப்பட்



டுள்ளன. 1985 காவிரிக்கரை கால்வாய்த் தோட்டம், பாபநாசம் ஒன்றியத்தில் கபிஸ்தலம் முதல் அண்டகுடி வரை உள்ள 5 கி.மீ. தோட்டம் இவை சமூகக்காடுகள் திட்டத்தின் கீழ் எடுத்துக்காட்டாய் விளங்கும் சிறந்த தோட்டங்களாகும். 28.7.85 அன்று நடப்பட்ட மரக்கன்றுகள் சுமார் 7 மாதங்களில் அதிகப்பட்சமாக 4.6 மீட்டர் உயரம் வளர்ந்துள்ளன.

இம் மாவட்டத்தில் 9 கோட்ட மற்றும் வட்ட அளவு கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழைகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் கிராமப்புறங்களில் வசிக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் ரூ.6,000 மதிப்பீட்டில் குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொள்ள கடனாக ரூ. 4,500 நிதி உதவி வழங்குகிறது.

இக்கடனுதவி வீடுகளின் கட்டுமானப்பணியின் முன்னேற்றத்தினை அனுசரித்து ரூ. 1,000, ரூ. 1,500, ரூ. 1,000, ரூ. 1,000 என்ற முறையில் நான்கு தவணைகளாக வழங்கப்படுகின்றன. கட்டப்படும் வீடுகளின் பூச்சுக்கு கட்டுப்பாடு விலையில் சிமெண்ட்டும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. வழங்கப்படும் இக்கடன் தொகை, உறுப்பினரின் வயது மற்றும் கடனை திருப்பி செலுத்தும் சக்தி ஆகியவற்றின் அடிப்படையில் 10 முதல் 20 ஆண்டுக்காலத்தில் திருப்பிசெலுத்தும் வகையில் வழங்கப்படுகிறது. 1985-86ஆம் ஆண்டுக்கு 3,758 வீடுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இக்குறியீடு முழுமையாக எய்தப்பட்டது.

மாநில வயது வந்தோர் கல்வித்திட்டம் 1980 முதல் மூன்று ஆண்டுகளில் பூதலூர், குத்தாலம், கீவளூர், கோட்டூர், திருத்துறைபூண்டி ஒன்றியங்களிலும் 1983 முதல் மூன்று ஆண்டுகளில் மயிலாடுதுறை, திருவாரூர், மன்னார்குடி, நீடாமங்கலம், தலைஞாயிறு ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டது. திருப்பனந்தாள், நன்னிலம், மதுக்கூர், வேதாரண்யம், நாகப்பட்டினம், ஆகிய பகுதிகளில் 54 இடங்களில் இத்திட்டம் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களும் இத்திட்டத்தால் பயன்பெற்றுள்ளன.

கற்போருக்கு எழுத்தறிவு, எண்ணறிவு, விழிப்புணர்ச்சி, செயல் மேம்பாட்டுத் திறன் போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மத்திய அரசின் முழுஉதவியுடன் இத்திட்டம் தஞ்சை மாவட்டத்தின் அடுத்தடுத்துள்ள 3 ஒன்றியங்களில் மொத்தம் 300 மையங்களில் செயல்படுகிறது. ஆண்டுக்கு 200 நாட்களும் நாள்தோறும் 2 மணி நேரம் வீதம் செயல்படும் இத்திட்டத்தால் ஒரத்தநாடு, திருவோணம், பட்டுக்கோட்டை, திருவையாறு, தஞ்சாவூர், அம்மாபேட்டை, பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், வலங்கைமான் ஆகிய ஒன்றியங்கள் பயன் பெற்றுள்ளன.

தேசிய கரிம எரிவாயுத்திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்திற்கு, 1985-86ஆம் ஆண்டிற்கு இலக்கு 1,230 என நிர்ணயிக்கப்பட்டது. நிர்ணயிக்கப்பட்ட 1,230 கலன்கள் முழுவதும் அமைக்கப்பட்டு, இலக்கு எய்தப்பட்டுள்ளது. கலன்கள் பரவலாக அமைப்பதைத் தவிர்த்து, தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் அதிக அளவில் கலன்கள் அமைக்கப்படுகிறது.

பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், கருப்பூர் கிராமத்தில் திரு கிருஷ்ணமூப்பனார் அவர்களின் இல்லத்தில் 6 க.மீ. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய வடிவமைப்பு கலன் அமைக்கப்பட்டுள்ளது. குடும்பங்களிலுள்ள 12 நபர்களுக்கும் சமைக்கப் பயன்படுவதோடல்லாமல், விளக்கு எரிக்கவும் இக்கலன்களிலிருந்து வரும் எரிவாயுவைப் பயன்படுத்துகிறார்கள்.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள்

# நீலகிரி மாவட்டம்



ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம் மாவட்டத்தில் கடந்த 1985-86ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 1830 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளார்கள். இதற்காகக் கொடுக்கப்பட்ட மானியம் ரூ. 21.40 இலட்சம் ஆகும். இதன் அடிப்படையில் 851 நபர்களுக்குக் கறவை மாடுகளும் 99 நபர்களுக்கு வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளும் 40 நபர்களுக்கு உழவு மாடுகள் மற்றும் வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவை தவிர 338 கைவினைஞர்களுக்குத் தொழில் தொடங்க கடனுதவியும் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குத் தொழில் துவங்க உதவியும். 138 இளைஞர்களுக்குப் பல்வேறு பிரிவுகளில் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்யும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் நீலகிரியில் தேயிலைத் தொழில் முக்கிய தொழிலாய் உள்ளதால் புதிதாகத் தேயிலை பயிரிடும் 29 நபர்களுக்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

1980-81 மற்றும் 1981-82 ஆண்டுகளில் பயன் அடைந்த 333 பேர்களுக்கு மீண்டும் கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது. பயன் அடைந்தவர்களில் 1,005 பேர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சார்ந்தோராகும். மொத்தத்தில் பயனடைந்த பெண்கள் 411 பேர். நடப்பு ஆண்டாகிய 1986-87-ல் 3,053 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 40.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1985-86-ஆம் ஆண்டில் அரசு ரூ. 31.40 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. ஆரம்ப இருப்புடன் சேர்த்து இதில் ரூ. 59.66 இலட்சம் சமூகக் காடுகள் வளர்ப்பதற்கும், சாலைகள் போடுதல், தடுப்புச் சுவர்கள் கட்டுதல் மற்றும் இதர வேலைகளுக்கும், ஆதிதிராவடர்களுக்கு வீடு கட்டுவதற்கும், சத்துணவு சமையல்கூடம், மற்றும் குழந்தைகள் காப்பகம் கட்டுவதற்கும் செலவிடப்பட்டுள்ளது. இதற்கு 2.75 இலட்சம் மனித சக்தி நாட்கள் உற்பத்தி செய்யப்



பட்டன. இதில் 43,000 ஆதி திராவிடர்கள் வேலை வாய்ப்புப் பெற்றனர். இதன் மூலமாகப் பயனடைந்தவர்கள் 1.09 இலட்சம் நபர்களாகும். நடப்பு ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு அரசு ரூ. 30.46 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் கடந்த 1985-86-ஆம் ஆண்டில், 145 தொகுப்பு வீடுகள் கட்டவும், 50 ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வாழுமிடங்களில் கழிவறைகள் கட்டவும், அரசு ஒப்புதல் அளித்தது. நடப்பு ஆண்டில் 286 வீடுகள் கட்டவும், 100 சுகாதாரக் கழிவறைகள் கட்டவும் ரூ. 32.39 இலட்சம் செலவிடத் தீர்மானிக்கப்பட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.



நீலகிரி மாவட்டத்தில் எதிர்கால நலனுக்காக உள்ள திட்டங்களில் சிறப்பானது சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டமாகும். இம்மலைப்பகுதியில் மழைவளம் பெருகி, மக்களின் வாழ்வு, எதிர் வரும் காலங்களில் சிறப்புடன் அமைவதற்காக இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1985-86-ஆம் ஆண்டில் 9,70,000 மரங்கள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டு 31,52,278 மரங்கள் நடப்பட்டு 325 சதவிகிதம் சாதனை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இதன் அடிப்படையில், மலைத்தோட்டங்கள் 91 எக்டேர் நிலத்திலும், சாலையோரத் தோட்டங்கள் 10 கி. மீட்டர் அளவிலும் இருப்புப் பாதையோரத் தோட்டம் 5 கி. மீட்டர் அளவிலும் அமைக்கப்பட்டுள்ளன. 1986-87-ஆம் ஆண்டு, 10 எக்டேர் நிலத்தில் மலைத்தோட்டங்கள் அமைப்பதற்கும், 5 கி. மீட்டர் அளவிற்கு இருப்புப்பாதை யோரத் தோட்டம் அமைக்கவும், இலவச நாற்றுகள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிராமக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் 10 குக்கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு 35.90 இலட்சத்திற்குப் பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மலைவாழ் மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு உதவி அளிக்கும் திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்களுக்காக 1985-86 ஆம் ஆண்டில் விவசாயக் கருவிகள், தையல் இயந்திரங்கள், கருமான் கருவிகள், உழவு மாடுகள், முர்ரா மாடுகள், சிறுதொழில் கடன் ஆகியவை 1834 நபர்களுக்கு ரூ. 2,24,650 செலவில் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் இத்திட்டங்களுக்கு ரூ. 8,90,750 செலவிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 1985-86-ஆம் ஆண்டில் 100 இடங்களில் சாண எரிவாயுத் தொட்டிகள் அமைக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் மேலும் 100 தொட்டிகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



1985-86-ஆம் ஆண்டில் பள்ளிகளில் 6 வயது முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களைச் சேர்க்கும் திட்டத்தில் 3,200 என்ற இலக்கிற்கு 4,950 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் வயது வந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் 13,200 என்ற இலக்கிற்கு 14,158 நபர்கள் பயற்றுவிக்கப் பட்டுள்ளனர். நடப்பு ஆண்டில் 6 முதல் 14 வயது மாணவர்கள் 3,200 என்ற இலக்கிற்கு 3,252 பேர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள். வயது வந்தோர் கல்வித் திட்டத்தின்கீழ் இதுவரை 11,600 பேர்கள் பயன் அடைந்துள்ளனர்.

1985-86-ஆண்டில் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் 6,561 நபர்களுக்கு குடும்ப நலச் சிகிச்சை அளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டிலும் குறியிடப்பட்ட இலக்கான 7,563-ஐ அடைய தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

1985-86-ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், அகதிகள், பிற்பட்டோர், முன்னாள் படைவீரர் உட்பட 1,709 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் இதுவரை 913 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 20 அம்சத் திட்டச் சாதனைகள் :

# சென்னை மாவட்டம்

சென்னை மாவட்டத்தில் 20 அம்சத் திட்டப் பணிகளில் எல்லாவற்றிலும் 1985-86ஆம் ஆண்டு குறியீட்டைவிடச் சாதனை கூடுதலாக அடையப்பெற்றுள்ளது.

குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதிலும் அம்சம் 7 (I) நலிந்த பிரிவினருக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதிலும் அம்சம் 10 (II) முறையே மூன்று மடங்கு (307.85%), இரண்டு மடங்கு (216.47%) சாதனை அமைந்துள்ளது.

அதேபோல் 1985-86ஆம் ஆண்டில் குடும்பநலத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சைக்கான குறியீடு 46,300 என்று நிர்ணயிக்கப்பட்டது. பொதுமக்களுடைய முழு ஒத்துழைப்புடன் சிறப்பான முறையிலே இந்தக் குறியீடு எட்டப்பட்டு, 54,321 குடும்பநல அறுவைச் சிகிச்சை சென்னை நகரத்தில் செய்யப்பட்டுள்ளது.

6 வயதிலிருந்து 14 வயதுவரை உள்ள வயதுக் குழந்தைகள் பள்ளியிலே சேர்ப்பதற்கான குறியீடும் அம்சம் 16 (i) முழுவதுமாக அடையப்பட்டுள்ளது. அதேபோல் முதியோர் கல்விக்கான குறியீடு, 21,750ல் சாதனை 23,174 அடையப்பட்டுள்ளது.

சிறு தொழில்கள் அமைப்பதற்கான குறியீடு 700 ஆக சென்னைக்குக் கொடுக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ்1985-86ஆம் ஆண்டில் 1,130 சிறு தொழில்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு 161.42% சாதனை அடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

மொத்தத்தில் சென்னை மாவட்டம் 20 அம்சத் திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டங்களில், கீழ்க்கண்ட சாதனை புரிந்துள்ளது:

### 1985-86ஆம் ஆண்டுக்கான 20 அம்சத் திட்டச் சாதனையின் விவரம்

| அம்சத் திட்ட எண். | | விவரம் | 1985-86-ஆம் ஆண்டுக் குறியீடு | 1985-86-ஆம் ஆண்டுச் சாதனை |
|---|---|---|---|---|
| 7 | (i) | தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவி | 420 | 1,293 |
| 10 | (i) | குடிசைவாழ் மக்களுக்கு உதவி | 7,080 | 7,080 |
| | (ii) | நலிந்தோருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் | 3,815 | 8,335 |
| 13 | | குடும்பநல அறுவைச் சிகிச்சை | 46,300 | 54,321 |
| 16 | (i) | 6 முதல் 14 வயது வரை குழந்தைகள் பள்ளியில் சேர்த்தல் | 7,300 | 7,807 |
| | (ii) | வயது வந்தோர் கல்வி | 21,750 | 23,174 |
| 18 | (i) | சிறுதொழில்கள் அமைத்தல் | 700 | 1,130 |



# லைப்பாய் இருக்குமிடம்... அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!




போராடிப் பொழுதெல்லாம்
உழைத்தபின்...ஜோராக ஆடிய பின்,
நீராடுவீர் லைப்பாய் கொண்டு...குளித்த
உடம்பிலே குலவக் காண்பீர் சுத்தமே
உருவான ஆரோக்கிய மலர்ச்சி!

**லைப்பாய்**
**அழுக்குடனே கிருமிகளை அறவே கழுவிக் களைகிறது**

LINTAS L 95 2317 TM.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

# கல்வி வளர்ச்சியில் பொதுமக்கள்

கல்வி வளர்ச்சியில் அன்று முதல் இன்றுவரை காமராஜர் மாவட்டம் தனக்கென ஒரு தன்னிகரில்லா இடத்தைப் பெற்று வருகிறது. ஒருங்கிணைந்த இராமநாதபுரத்தில் சேர்ந்து இருந்தபோதும் விருதுநகர் சிவகாசி, சாத்தூர், இராசபாளையம், பகுதிகள் கல்வி வளர்ச்சியில் மேலோங்கியே இருந்தன.

ஒரு நாட்டின் கல்வி வளர்ச்சியில் அரசின் பங்கு எவ்வளவுதான் இருந்தாலும், பொதுமக்களும் இணைந்து ஆதரவு காட்டி செயலபட முன்வரும்போது அப்போது கிடைக்கும் வெற்றிக்கும், முன்னேற்றத்திற்கும் ஈடுஇணை இல்லை! இதனை சிவகாசியல் 8-9-86 அன்று நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மாநாடு தெளிவாக எடுத்துக் கூறியது!...

இந்தப் புதிய மாவட்டத்தில் 57υ துவக்கப் பள்ளிகளும், 111 நடுநிலைப் பள்ளிகளும், 36 உயர்நிலைப்பள்ளிகளும், 32 மேல்நிலைப்பள்ளிகளும், ஒரு ஆசிரியர் பயிற்சி நிறுவனமும் உள்ளன. இவற்றில் மொத்தம் 5,420 ஆசிரியப் பெருமக்கள் பணிபுரிகிறார்கள். இம்மாவட்டத்தில் உள்ள 712 சத்துணவு மையங்கள் மூலம் 1,31,005 மாணவர்கள் சத்துணவு பெறுகிறார்கள். இவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்களும், சீருடைகளும் இலவசமாக விநியோகம் செய்யப்படுகின்றன. இவைகள் எல்லாம் தமிழக அரசின் சீரிய திட்டங்கள் மூலம் அரசின் நிதி உதவியோடு செயல்படுத்தப்படுபவை!

ஆனால் இதற்கு மாறாக விருதுநகர் கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும், பொதுமக்களும் சேர்ந்து அறச் சிந்தனையாளர்களை அணுகி, கிராமப் புறங்களில் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து, அதன் மூலம் கல்வித்தரம் உயரவும், ரூ. 44 இலட்சம் பெறுமானமுள்ள பொருட்களைத்திரட்டி, பல்வேறு பள்ளிகளின் வளர்ச்சிக்கும் தந்துள்ளனர்.

இராஜபாளையம் புறநகர் ரூ. 19,42,875-க்கும், இராஜபாளையம் நகாப்புறம் ரூ. 11,14,657-க்கும், திருவில்லிபுத்தூர் ரூ. 2,32,810-க்கும் விருதுநகர் ரூ. 2,09,080-க்கும், வெம்பக்கோட்டை ரூ. 2,15,655-க்கும், வத்திராயிருப்பு ரூ. 3,09,541-க்கும், சிவகாசி ரூ. 3,93,528-க்கும் ஆக மொத்தம் சேர்த்து ரூ. 44,18,146-க்கு கட்டடங்களாகவும், பொருள்களாகவும் சேர்த்துத் தந்துள்ளனர். நன்கொடையாளர்கள் அனைவரும் இத்தொகையை புதிய கட்டடங்களாகவும், கடிகாரங்கள் நூலகப் புத்தகங்கள், பாடபோதனைக் கருவிகள், தளவாடச்சாமான்கள் கழிப்பறைக் கட்டடங்கள், சத்துணவுக்கூடங்கள் கட்டுதல் போன்றவை மூலம் தந்துள்ளனர்.

வளர்ந்து வரும் சமுதாயத்தில் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அரசோடு இணைந்து பொதுமக்களும் உதவ முன்வந்திருப்பதைப் பார்க்கும்போது தமிழகத்தில் கல்வியில் மறுமலர்ச்சி இந்தச் சரித்திர நாயகனின் ஆட்சிக்காலத்திலேயே நிகழும் என்று கூறினால் மிகையில்லை!

**ரெ. இராவணன்,**
**உதவி மக்கள்-தொடர்பு அலுவலர்,**
**காமராசர் மாவட்டம்.**

# மேற்கு மாம்பலத்தில் 14 இலட்சம் செலவில் குடிநீர்

மேற்கு மாம்பலத்தில் குடிநீர் அமைப்புகளை மேம்படுத்த சென்னைக் குடிநீர் வாரியம் பல பணிகளை மேற்கொண்டுள்ளது.

இவற்றில் ஒன்றாக லேக்வியூ சாலைக்கு வடக்கு பகுதியில் 115, 117, 118 கோட்டங்களில் குடிநீர் அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்கு மாம்பலம் பகுதிக்கு தற்சமயம் யுனைடெட் இந்தியா காலனி, தவிர ரயில்வே பார்டர் சாலை ஆகிய இரு வழிகள் மூலம் போடப்பட்டுள்ள இரு துணை பிரதான குழாய்கள் மூலமாகவும் மற்றும் விநியோக குழாய்கள் மூலமாகவும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. யுனைடெட் இந்தியா காலனி வழியாக வரும் குழாய்கள் மூலம் விநியோகிக்கப்படும் பகுதிகளுக்கும், பிருந்தாவனம் தெரு வரைக்கும் குடிநீர் விநியோகம் திருப்திகரமாக இருப்பதாகத் தெரியவருகிறது.

பிருந்தாவனம் தெருவிற்கு தெற்கே உள்ள சுப்பிரமணியம் தெரு, ஜுபிலி ரோடு பகுதியிலும், ஆரிய கௌடா தெருவின் பக்கங்களிலும் குடிநீர் விநியோகம் திருப்திகரமாக இல்லை என்று மனுக்கள் சென்னைக் குடிநீர் வாரியத்திற்கு வந்துள்ளன. இந்த குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக ஒரு புதிய 250 மி.மீ. விட்ட அளவுள்ள துணை பிரதான குழாய் அஜீஸ் நகர் இரண்டாவது தெரு, இரயில்வே பார்டர் ரோடு சந்திப்பிலிருந்து ஆரிகௌடர் தெரு, ஜுபிலி தெரு சந்திப்பில் தெற்கு முனை வரை 1,610 மீட்டர் நீளத்திற்கு போடப்பட உள்ளது. இதன் தொடர்பாக 169 மி.மீ. அளவுள்ள பி.வி.சி. குழாய்கள் 210 மீட்டர் நிளத்திற்கும் போடப்படும். இந்த குழாய்கள் போடுவதன் மூலம் நீரழுத்தம் அதிகரிப்பதால் அதிகமான அளவு குடிநீர் கைப்பம்புகள் மூலம் பெறவும் முடியும்.

இந்த புதிய குழாய்கள் அஜீஸ் நகர் 2வது தெரு, விஸ்வநாதபுரம் மெயின்ரோடு, எல்.ஜி.சி. மெயின் ரோடு, தம்பையா சாலை, உமாபதி தெரு, ஆரிகௌடர் தெரு, சீனிவாசா தெரு வழியாக போடப்படும்.

இந்த மூன்று கோட்டங்களில் மக்கட் தொகை சுமார் 16,000 ஆகும். இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன் மூலம் கீழ்க்கண்ட தெருக்களில் குடிநீர் வசதி அபிவிருத்தியாகும்.

**கோட்டம் 115**

1. போஸ்டல் காலனி 1 முதல் 4 தெருக்கள் 2. மகாதேவர் தெரு, 3. பாலகிருஷ்ணா தெரு, 4. ஆதிகேசவ தெரு, 5. சீனிவாசதெரு 6. சுப்பிரமணிய தெரு, 7. ராஜகோபால் தெரு, 8. பாரதி தெரு. 9. விநாயகம் தெரு 10. மூர்த்தி தெரு விரிவு

**கோட்டம் 117**

1. ஆரிகௌடர் தெரு

**கோட்டம் 118**

1. காசி விஸ்வநாதர் காலனி 1 முதல் 6வது தெரு வரை.
2. வேலு தெரு,
3. பாலகிருஷ்ண தெரு.


மீண்டும் பார்க்கத் தூண்டும் ஜொலிப்பு...
மின்னலடிக்குது ஸுப்பர் ரின் வெளுப்பு.
SUPER
RIN
STRIKES WHITER
மின்னலடிக்கும் ஸுப்பர் ரின்– அதி வெண்மை.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.
LINTAS RIN 99 2015 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

## மலர்ந்தது

# சிதம்பரனார் மாவட்டம்



முத்துக் குளிப்புக்குப் பெயர் போன தூத்துக்குடி நகரம் விழாக் கோலம் பூண்டிருந்தது. நகரத்து மக்களின் அகங்களிலும் முகங்களிலும் மகிழ்ச்சி அலைகள்.

ஊரெங்கும் வளைவுகள்; சிதம்பரனார் மாவட்டத்தைத் தொடங்கி வைக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு வாழ்த்துகளை வழங்கும் வண்ணச் சுவரொட்டிகள்.

திரும்பும் திசை எல்லாம் தேசியப்பாடல்கள் ஒலித்துக்கொண்டிருக்க, விழா நடைபெறும் வ.உ.சி. கல்லூரியை நோக்கி மக்கள் ஆர்வத்துடன் சென்ற வண்ணம் இருந்தனர்.

அக்டோபர் 18-ஆம் நாள் (1986) காலை 9 மணியளவில் வ.உ.சி. கல்லூரி கலை அரங்கத்தில் திருநெல்வேலி திரு இராம கிருஷ்ண கம்பரின் நாயன இசையுடன் விழா தொடக்கமாகியது.

வ.உ.சி. வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொடர்பான புகைப்படங்களின் கண்காட்சியை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்.

விடுதலை வீரர் சிதம்பரனார் என்ற பொதுத் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கிற்கு மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு என். நல்லுசாமி அவர்கள் தலைமை ஏற்றார்.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியாளர் திரு பி.ஆர். பிந்து மாதவன், இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார்.

கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றிய மாண்புமிகு பொதுப்பணித்துறைஅமைச்சர் திரு யா.சை.மு.யூசுப் தெரிவித்தார்:

''பெரிய மாவட்டங்களைப் பிரித்துச் சிறிய மாவட்டங்களாக உருவாக்குவதன் மூலம் ஆட்சித் தலைவர்களைச் சாதாரண மக்கள் எளிதில் அணுக முடியும் என்ற முறையில் தான் புதிய மாவட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவர் உருவாக்கி வருகிறார்.''

செங்கோட்டை திரு சனார்த்தனம், திரு இல. இராமகிருஷ்ணன், திரு ஆலடி அருணா எம்.பி. திரு.சங்கர வள்ளி நாயகம், திருமதி இளம்பிறை மணிமாறன், திரு கடம்பூர் எம்.ஆர். சனார்த்தனம் எம்.பி., திரு எஸ்.என். இராசேந்திரன் எம்.எல்.ஏ. திரு. கி.சு.மணி ஆகியோர் கருத்தரங்கில் பங்குகொண்டு உரையாற்றினர்.

கருத்தரங்கத் தலைவர் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் திரு என்.நல்லுசாமி அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''அடிமைப்பட்ட நாட்டை விடுதலை செய்யப் பாடுபட்ட தலைவர்களில் சிறப்பானவர் சிதம்பரனார்.

''சிதம்பரனாரின் இலட்சியம் நாடுபிடிக்கும் இலட்சியமல்ல; சொந்த நாட்டை அடிமைத் தளையிலிருந்துவிடுவிக்கும் இலட்சியம்''

கருத்தரங்கிற்குப் பின்னர் அரசுக் கவிஞர் புலவர் புலமைப்பித்தன் அவர்களின் தலைமையில் 'சிதம்பரனாரின் சிந்தனைகள்' என்ற தலைப்பில் பாட்டரங்கம் நடைபெற்றது.

திருமதி மாலதி அரிந்திரன், திரு எம்.பி.அழகிய நம்பி, புலவர் ஆ. முத்துராமலிங்கம், திரு இளசை அருணா, திரு அ.ஜகதீசன், திருமதி விசயலக்குமி நவ



நீதன் ஆகியோர் தமது கவிதை களை அரங்கேற்றினர்.

பாட்டரங்கத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''வ.உ.சி. தொழிலாளர் தலைவர்; சிறந்த தேசாபிமானி; கூட்டுறவுப் பார்வை கொண்டவர்; தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்; அரசியல் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் -சமுதாய மறுமலர்ச்சிக்கு வழிவகை செய்தவர் என்று மகாகவிபாரதி யாராலேயே வாழ்த்தப் பெற்றவர்''.

பிற்பகல் 6 மணியளவில் ''வ.உ.சி.யின் வாழ்வில் விஞ்சி விளங்குவது தமிழ்த் தொண்டா? தேசியத் தொண்டா?'' என்ற தலைப்பில் பட்டி மண்டபம் நடைபெற்றது. திரு வலம்புரிஜான், எம்.பி. நடுவர் பொறுப்பேற்றார்.

பட்டிமண்டபத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் தொடக்கி வைத்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது:

''தியாகச் செயலில் தன்னைத் தானே ஒப்படைத்துக் கொண்டு, சிறைப்பட்டு, செக்கிழுத்து, வறுமைக்கு ஆளாகி, இறுதியில் காப்பாற்ற ஆளில்லாது, மரணத்தின் வாயிலில் விழுந்துவிட்ட உத்தம மனிதரின் பெயரால் ஒரு மாவட்டம் துவக்கப்படுகிறது. காலா காலத்துக்கும் இனி வ.உ.சி. நிலைத்திருக்கப் போகிறார்.

''தமிழ்த் தொண்டையும் தேசியத் தொண்டையும் தமது இரண்டு கண்களாக வளர்த்து வந்தவர் வ.உ.சி.''

பட்டி மண்டப அறிமுக உரையை நிகழ்த்திய சொல் விளங்கும் பெருமாள் குறிப்பிட்டார்.

''பட்டி மண்டபம் என்பது தற்காலத்தில் தோன்றிய ஒன்று என்று கருதுகிறார்கள். அது மிகவும் பழமையானது.''

'வ.உ.சியின் வாழ்வில் விஞ்சி விளங்குவது தமிழ்த் தொண்டே' என்னும் அணிக்குத் திரு பாண்டியன் தலைமை ஏற்றுப்பேசினார். திருமதி இந்திர பவானி, திரு பாளை உ. முருகன் ஆகியோர் அவருக்குத் துணை நின்று வாதிட்டனர்.

'தேசியத் தொண்டே' என்னும் அணிக்குத் திரு அ.பாஸ்கர



பால்பாண்டியன் தலைமை ஏற்றுப் பேச, திருமதி குருலக்குமி, திரு நெல்லை கண்ணன் ஆகியோர் துணை நின்று வாதிட்டனர்.

இரு அணியினரின் வாத உரைகளைக் கேட்டு நடுவர் அளித்த தீர்ப்பு வருமாறு:

'தாகூர் சிறந்த ஓவியர், ஆனால் அவரைக் கவிஞர் என்றுதான் நாடறியும். அருட்ஜோதி வள்ளலார் சிறந்த கவிஞர்; ஆனால் அவரை ஆன்மீக ஞானி என்று தான் உலகு சொல்லி வந்தது. அவர்களிடம் எந்தப் பண்பு விஞ்சி நின்றதோ அதனைத்தான் அனைவரும் புகழ்ந்தனர். சிதம்பரனாரிடம் தமிழ்ப்பற்றும் இருந்தது. தேசப் பற்றும் இருந்தது. என்றாலும் இந்த இரண்டிலும் தேசியத் தொண்டுதான் அவரிடம் விஞ்சியிருந்தது''

பட்டி மண்டப நிகழ்ச்சிக்குப் பிறகு, கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் நடத்திய 'வ.உ.சி.வந்தார் வில்லிசை நிகழ்ச்சி,பொது மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி 19.10.86 காலை 9 மணிக்கு, வ.உ.சி கல்லூரித் திறந்த வெளி அரங்கில் திரு பத்தமடை ராஜா வின் நாயன இசையுடன் தொடங்கியது.

அதன்பின்னர், 'வளர்ச்சித் திட்டங்களை வகுத்திடுவோம்' என்ற கருத்தரங்குக்கு, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தலைமை ஏற்றார்.

வரவேற்புரை ஆற்றிய செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தர பாண்டியன், இ.ஆ.ப. குறிப்பிட்டார்:

''சிதம்பரனார் மாவட்டம் 20வது மாவட்டமாக மலர்கிறது. நாட்டுக்குத் தொண்டு செய்த நல்லவரை நினைவுகூரும் நிகழ்ச்சி மகிழ்ச்சி அலையை எழுப்புகிறது''

கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டார்:

''வெள்ளையர்களை விரட்ட வேண்டுமானால், அவர்களது வர்த்தகத்தை நாம் கைப்பற்றியாக வேண்டும் என்ற முறையில் கப்பல் கழகத்தைத் தொடங்கி, கப்பல் போக்குவரத்தை முதன் முதலில் நடத்திய மாபெரும் தலைவர் வ.உ.சிதம்பரனார்.

''நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட சிதம்பரனார் தமிழ்த் தொண்டும் புரிந்தார் என்பதை நாம் இளைஞர்களுக்குச் சொல்லியாக வேண்டும்.

''அவரது நூல்களை மாண்புமிகு முதல்வர் அவர்களின் அனுமதியுடன், வெளியிடுவதற்குச் செய்தி மக்கள் தொடர்புத்துறை பாடுபடும்''

திரு.வி.வி.டி. நித்தியானந்தம், திரு எம்.எஸ். செல்வராஜ், தூத்துக்குடித் துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவர் திரு கே.ஏ. சுந்தரம், இ.ஆ.ப., திரு செவாலியர் சி.ஐ.ஆர். மச்சாது, திரு எஸ்.என்.ராமசாமி எம்.எல்.ஏ., திரு டேனியல்ராஜ்,எம்.எல்.ஏ., திரு ஆர்.எஸ்.ஆறுமுகம் எம்.எல்.ஏ., திரு டி.ஆர்.வெங்கடரமணன் எம்.எல்.ஏ., திரு ஆர்.ரங்கசாமி எம்.எல்.ஏ., திரு எஸ்.பாலசுப்பிரமணியம் எம்.எல்.ஏ., திரு எஸ். ஆர்.சுப்பிரமணிய ஆதித்தன் எம்.எல்.ஏ., திரு ஜான் வின்செண்ட் எம்.எல்.ஏ., முன்னாள் சபாநாயகர் திரு.செல்ல பாண்டியன் ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றினர்.

முந்திய நாள் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கு பெறவேண்டிய திரு குமரி அனந்தன் அன்று வராமல், வளர்ச்சித் திட்டக் கருத்தரங்கிற்கு வந்து சேர்ந்தார். 'செக்கிழுத்த செம்மல்' என்ற பொருளில் உரையாற்றிய அவர் தெரிவித்தார்;

''பாரதியின் பாடலுக்குக் கருக் கொடுத்தவர் சிதம்பரனார்.

இந்திய மக்கள் அனைவரும் சேர்ந்து ஒற்றுமையாக விடுகின்ற மூச்சுக்காற்றினாலேயேவெள்ளையர்களை அவர்களது நாட்டுக்கு அனுப்பி விடலாம்' என்று சிதம்பரனார் சொல்ல, அந்த மூச்சு என்ற சொல்லை வைத்து, 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' என்று பாடினார் பாரதி''.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.க. இராசாராம் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:




''குமரி மாவட்டத்திலிருந்து திருச்செந்தூர் வரை கிடக்கும் அற்புதமான மணலில் சோடியம் கிடைக்கிறது. இந்த மணலை வளப்படுத்த வேண்டும்.

''வறண்ட பகுதியில் உடை மரம் வளர்த்தால், காகித ஆலைகள் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும்''

கருத்தரங்கிற்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தமது உரையில் தெரிவித்ததாவது:

''இந்தியா ஏற்றம் பெறுவதற்கு அதன் தற்சார்புக் கொள்கைதான் காரணம். தலை சிறந்த இந்தக் கொள்கையை அன்றே உணர்ந்து வழிகாட்டிய பெருமை சிதம்பரனாருக்கு உண்டு.

''சோறும் போட வேண்டும்; வேலையும் கொடுக்க வேண்டும். இதுதான் இந்த அரசின் கொள்கை. பசி வேதனையைத் தீர்த்த பெருமை இந்த அரசுக்கு உண்டு. உழைப்போரே உயர்ந்தவர் என்பது புரட்சித் தலைவரின் முதல் முழக்கம். புரட்சித் தலைவர் தீட்டும் பொருளாதாரத் திட்டம் தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே வழிகாட்டும் திட்டம் ஆகும்''.

பிற்பகல் 4 மணி அளவில் தூத்துக்குடி நகரமே அதிர்ந்து போகும் அளவுக்கு பள்ளி, கல்லூரி மாணவ மாணவியரின் அணி வகுப்பு ஊர்வலம் நடைபெற்றது. அது,தூய சவேரியார் பள்ளியிலிருந்து புறப்பட்டு வ.உ.சி. கல்லூரித் திடலை அடைந்தது. இந்த அணி வகுப்பு ஊர்வலத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாளையங்கோட்டை குரூஸ்பர்னாந்து சிலை அருகில் அமைக்கப்பட்டிருந்த தனிமேடையில் நின்றவாறு பார்வையிட்டார்.

பிற்பகல் 5 மணி அளவில், வ.உ.சி. கல்லூரி திறந்தவெளி அரங்கில் திரு டி.பி.எஸ்.எச். அமர்நாத் பிரபாகர் ராம்சேட் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பிற்பகல் 6 மணியளவில், சிதம்பரனார் மாவட்டத் தொடக்க விழா தொடங்கியது.

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு ஏ.பத்மநாபன், இ.ஆ.ப. தமது வரவேற்புரையில் தெரிவித்தார்:

''மாவட்ட அதிகாரம் ஆங்கிலேயர்களின் காலத்தில் சட்டம், அமைதி என்ற நிலையில் இருந்தது.பின்னர் அவை அபிவிருத்திப் பணிகளுக்காக என்ற நிலை மலர்ந்தது. அதன் விளைவுதான் பெரிய மாவட்டம், சிறிய மாவட்டங்களாக உருவாக்கப்படும் திட்டம் ஆகும். மற்ற மாநிலங்களில் சிறிய மாவட்ட அமைப்புகள் ஏற்கனவே உருவாகியுள்ளன.''

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பிந்து மாதவன்,இ.ஆ.ப. சிதம்பரனார் மாவட்டம் குறித்த விளக்கவுரை ஆற்றினார்;

''மீன்பிடி தொழிலில் 20 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் 23 இங்கே உள்ளன. சங்கு குளிக்கும் தொழில் இங்கே மிகவும் புகழ் பெற்றதாகும். சிவகாசிக்கு அடுத்து தீப்பெட்டித் தொழில் இந்த மாவட்டத்தைச் சேர்ந்த கோவில்பட்டியில் சிறந்து விளங்குகிறது''

வ.உ.சி.யின் குமாரர் வ.உ.சி. சுப்ரமணியம் உரையாற்றுகையில் தெரிவித்தார்:

''சிதம்பரனார் மாவட்டத்தை உருவாக்கியமைக்காகத் தமிழக முதல்வர் அவர்களுக்கு, தேச பக்தர்களின் சார்பிலும் விடுதலை வீரர்களின் சார்பிலும் வ.உ.சி குடும்பத்தினரின் சார்பிலும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''சுங்கவரி இல்லாத விற்பனை மையம் ஒன்று இங்கு அமைக்கப்பட வேண்டும். பல்கலைக் கழகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.




## சென்ற இதழ்........

வ உ. சிதம்பரனார் திருவுருவப்படத்தை, சென்ற இதழ் (16.10.86) அட்டை அலங்கரித்தது.

நாவாய்ப் பயிற்சி கற்றுத் தரப் பட வேண்டும்''

திரு எஸ்.எம். சோமயாஜுலு உரையாற்றுகையில் தெரிவித்தார்:

''கள்ளுக்கடை மறியலில் நானும் பலரும் கலந்துகொண்ட போது கைது செய்யப்பட்டோம். ராஜாஜி அவர்கள் எதிர்த்து வாதாடச் சொன்னார். எங்களுக்காக வ.உ.சி. ,, வாதாடுவதற்கு முன் வந்தார்.'

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச்.பாண்டியன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''ஒரு ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் நெஞ்சுரம் கொண்டவர் வ.உ.சி. வெள்ளையர்களை ஆட வைத்தவர் அவர்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''சிதம்பரனார் வீறுகொண்ட விடுதலை வீரர்: தியாக ஒளிவீசத் தூண்டிய மணி விளக்கு; தளர்வடையாத அடலேறு, தளராத தொழில் முனைவோர், அறநெறி காத்த ஆண்மையாளர், நீதிக்கு வாதாடிய வழக்கறிஞர், கொள்கையில் குன்றாத கோமான், சீர்திருத்த உணர்வு கொண்ட செம்மல், அஞ்சா நெஞ்சம் படைத்தவர்.''

நாவலர் உரையாற்றிக் கொண்டிருக்கும்போதே,'' சிதம்பரனாரின் பேத்தி சேது லட்சுமியின் மகள் திருமணத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25 ஆயிரம் ரூபாய் உதவி செய்கிறார்கள்'' என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டார்:

''சிவாவுக்கும் சிதம்பரனாருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. சிதம்பரனாருக்கு ஜாமீன் கிடைத்தது. சிவாவுக்கு ஜாமீன் தர யாரும் வரவில்லை. உடனே, சிதம்பரனார் 'எனக்கு ஜாமீன் வேண்டாம்' என்று சொல்லிச் சிறைக்குள் புகுந்தார்.''

பின்னர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள், வ.உ.சி. மாவட்டத்தைத் தொடக்கி வைத்தார்.

தமிழக அரசின் செய்தித்துறை வெளியீடான 'வ.உ.சிதம்பரனார் வரலாறு' என்னும் கையேட்டினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார்.

வ.உ.சி. அவர்களின் குமாரர்களான வ.உ.சி.சுப்ரமணியம், வாலேஸ்வரன் இருவருக்கும் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார் மாண்புமிகு முதல்வர்.

பின்னர், திட்டப் பணிகள் பலவற்றிற்கு அடிக்கல் நாட்டியதுடன, நலிவுற்றோர்க்கு நலத்திட்ட உதவிகளையும், அரசு அதிகாரிகளுக்கு நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது வாழ்த்துரையில் தெரிவித்தார்:

''என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! என்னை வழி நடத்திச் செல்லும் பெரியோர்களே! என் ரத்தத்தின் ரத்தமான உடன் பிறப்புக்களே!

''இந்த விழாவில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

''மக்களுக்கும் அரசுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு இருக்க வேண்டும். அதன் அடிப்படையில்தான் புதிய மாவட்டங்கள் உருவாக்க வேண்டும் என்று முடிவு எடுக்கிறேன்.

''புதிய மாவட்டங்களுக்குச் சரித்திரச் சான்றோர்களின் பெயர்களைச் சூட்டுகிறோம். அந்த முறையில் கப்பலோட்டிய தமிழன், செக்கிழுத்த செம்மல், தியாக சீலர் சிதம்பரனாரைப் போற்றும் வகையில்தான் இந்தப் புதிய மாவட்டத்திற்குச் சிதம்பரனார் மாவட்டம் என்று பெயர் சூட்டி உள்ளேன்.

''சிதம்பரனார் மாவட்டத்துக்குத் தலைநகராகத் தூத்துக்குடி அமைந்துள்ளது. நாட்டு விடுதலைப் போரில் தன்னைத் தந்த பெருமை தூத்துக்குடிக்கு உண்டு.

''வீரபாண்டிய கட்டபொம்மனும், மகாகவி பாரதியும் பிறந்த புண்ணிய பூமி இது. சிதம்பரனார் மாவட்டம் தேசிய எழுச்சியின் சின்னமாக அமைகின்றது.

''இந்த மாவட்டம் எல்லாத் துறைகளிலும் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். இம்மாவட்ட மக்களுக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

''தூத்துக்குடியைத் தலைநகராகக் கொண்ட சிதம்பரனார் மாவட்டத்தை மகிழ்ச்சியுடன் தொடங்கி வைக்கிறேன்.

''ஆங்கிலேயர் ஆதிக்கத்தை எதிர்த்து வீரப்போர் புரிந்த வீரபாண்டிய-கட்டபொம்மன் சுதந்திரத்திற்காகத் தன்னையும் தன் உடைமைகளையும் இழந்தார். அவருடைய நினைவாக நெல்லை மாவட்டம் இன்றுமுதல் 'நெல்லை கட்டபொம்மன் மாவட்டம்' என்று அழைக்கப்படும்.

'அண்ணா நாமம் வாழ்க!
நன்றி! வணக்கம்! ''

பின்னர், சிதம்பரனார் மாவட்ட ஆட்சியாளர் திரு ரெ. ஆறுமுகம் இ.ஆ.ப. நன்றி நவின்றார்.

சிதம்பரனார் மாவட்டத் தொடக்க விழா ஒவ்வொருவரின் சிந்தையிலும் தேன் பாய்ச்சும் விழாவாக அமைந்தது என்று சொன்னால் அது மிகையாகாது!

—நமது செய்தியாளர்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



Exotic Designs for the New Year
A new range added in Chiffon, Polyester, Silk and Cotton sarees for you.
Visit Co-optex showroom.
Co-optex
Handlooms
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23


